Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් ஒக் 05 - 11, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 682

## பேச்சுக்குப் பிரபாகரன் தயார்!



அரசும் உஷார்!
ஏ. 9 பாதை....?

## இரண்டு எல்லைகள்



இலங்கையில்
இல்லை!

## வன்னிக்குள் ஏவப்படும் புஸ்வாண எறிகணைகள்!



## மௌனிக்கும் அதிர்வுகள்!



போவோம்!
ரசிப்போம்!!
-ஜன்னல்

நம். 1
கவர்ச்சி!
நம். 2

அனுபவம்
புதுசு!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## மனத்திருள் போனால் இறைவனாகலாம்

'மனத்திருள் போக்கி மலர் முகங்காட்டுதல்' என்னும் பதம் மனிதனாகப் பிறந்த அனைவரிடமும் அன்றாட நிகழ்வாகிவிடுமாயின், இப்பிரபஞ்சத்தில் மனிதனுக்குத் துன்பங்களே இல்லை என்றாகிவிடும் என்பதில் எவ்வித ஐயமும் ஏற்பட வாய்ப்பே இல்லை. இயல்பாகவே மனித மனங்களில் குடிகொண்டிருக்கும் கோபம், பொறாமை, கொலை, வைராக்கியம் என்னும் இருளானது அகன்று விடுமாயின், 'உலகவாழ்க்கையானது சொர்க்க மயம்' என்று அறிஞர்கள் முன்னமே வலியுறுத்தி வைத்து, அதற்கான வழிகளையும் கூறிவைத்துள்ளார்கள். அந்த வழிகளில் மிக இலகுவாகக் கைக் கொள்ளக் கூடியதொன்றுதான் இறை வழிபாடு. அது ஒருவகையான தியான முறைதான். அந்த முறையானது இறை அருளைப் பெறுவதற்கு மட்டுமல்ல, மனத்தின் கண்ணே தோன்றுகின்ற தீயகுணங்களை மறக்கச் செய்யும் ஒரு வழிமுறையாகும். மனத்தின்கண் இருள் அகலுமேயாயின் வெற்றிடத்தில் ஒளிதானே சேரும். ஒளி பிரகாசிக்கும் மனதில் துன்பம் தோன்ற இடமில்லையே! இதைத்தான்

'அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்' என்னும் அடிகளால்

மனிதனையும் இறைவனாகப் பார்க்க முடியும் என்றும் கருதலாம். எப்பொழுது என்ற கேள்வி எழுமாயின், மனத்தினுள் இருள் அகன்று ஒளி வீசும் பொழுது என்று துணியலாமா?

-என். எஸ். ராஜா, தம்பலகமம்.

## ஆன்மீகம்



## இயேசுவின் ஏக்கம்.

என்னை உனக்குத் தந்தேன் - உன்
இதயத்தில் ஓர் இடம் தருவாயா?

நீ தூரப்போனாலும் தொடர்ந்து வருவேன்
நீ கடந்து போனாலும் உன் கரம் பிடிப்பேன் - உன்
திருக்கொண்ட இதயத்தில் இடம் பிடிப்பேன் - உன்
இதயத்தில் ஓர் இடம் தருவாயா?

நீ வெறுத்து ஒதுக்கினாலும் விலக மாட்டேன்
உன்னை உயர்த்திப் பார்த்து அகமகிழ்வேன் - என்
செட்டையின் நிழலில் மறைத்துக் கொள்வேன் - உன்
இதயத்தில் ஓர் இடம் தருவாயா?

நீ மறைந்து போனாலும் மறக்க மாட்டேன்
உன்னை நினைத்து அனுதினமும் நடத்துவேன்
நித்தியத்தின் வாக்கியம் உனக்குத் தருவேன் - உன்
இதயத்தில் ஓர் இடம் தருவாயா?

-த. ஷாம், மட்டக்களப்பு.

## பொறுமையின் மாதம் றமழான்!

நோன்பு, பணக்காரர் - ஏழைகள் அனைவரையும் பசி என்ற நிலையில் சம நிலையில் வைக்கிறது. அத்தோடு பகல் வேளையில் எவருக்கும் உண்ணவோ, குடிக்கவோ அல்லது பாலியற் சேர்க்கைகளில் ஈடுபடவோ அனுமதியளிப்பதில்லை. நோன்பு - ஒருவனை வாழ்க்கையின் கஷ்டங்களை எதிர்கொள்வதற்கு பயிற்றுவிப்பதோடு, அவனது தாக்குப்பிடிக்கும் வல்லமையையும் அதிகரிக்கச் செய்கின்றது. அத்தோடு குணவொழுக்க சீலங்களையும் அவனுக்குக் கற்பிக்கின்றது. றமழானின் போது ஒரு நம்பிக்கையாளன் தனது தூக்கத்தைக் குறைத்து தன்னை நற்கிரிகைகளுக்காக அர்ப்பணிக்குமாறும் இறைவனை வணங்குமாறும் பணிக்கப்படுகின்றான். அது அவனது ஆணவத்தைக் குறைக்கின்றது. ஏனெனில் பசியோடு இருக்கும் ஒருவன் எப்போதும் வலிமை குன்றியவனாகவே இருப்பான். இது அவனை மிதமான குணம் படைத்தவனாக ஆக்குகின்றது.

-முஹம்மது ஹஸனீ, கல்முனை - 07.

---

**கவிதைப் போட்டி இல.679**



**பரிசுக்குரிய கவிதை**

### சோற்றுக்கு வந்த சோதனை!

சமாதான பூமியிலே சோற்றில்
கொஞ்சம்
மண்!
யுத்த பூமியிலே மண்ணில்
கொஞ்சம்
சோறு!

-இரா.தாரணி ,
நுவரெலியா.

### அவலம் நீங்குமா?

குப்பையிலும் உணவுண்ணும்
அவலம்!
இனியாவது 'குட்பை'
சொல்லுமா இவ்வுலகம்?!

-ஏ.என்.எம்.ஜவாத்,
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல.682



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.10.2006.

கவிதைப் போட்டி இல.682
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

### தலைகுனிவு

வெட்கித் தலைகுனிய
வேண்டியது
நீயல்ல தம்பி!
பொய்யான வாக்குறுதிகள்
தந்து
வரிச் சுமைகளோடு
மக்கள் முதுகுகளில் ஏறி
சவாரி செய்யும்
அற்பத்தனமான
அரசியல் வாதிகள்தான்!!

-கமால்தீன்.அல்-ஆஸாத்,
ஏறாவூர் -03.

### அநாதைகளின் அவஸ்தை

தாயையும்
தந்தையையும்
இழந்த அநாதைகள்
உண்பதற்கும்
குடிப்பதற்கும்
உறங்குவதற்கும்
வகையின்றி
இப்படி - அவஸ்தைப் படுகுதுகள்.

-காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

### இன்னுமொரு சோமாலியா!

யுத்த பூமியிலே
முளைவிட்ட இப்பூக்கள்
தடம் பதிக்கும்
செங்குருதி மணலில்,
உணவுக்கும் வழியில்லை!
உருவாகிவிடுமோ
இன்னுமொரு சோமாலியா!

-எஸ்.ஸ்ரீகௌரீஸ்வரன்,
திருகோணமலை.



### மாற்றங்கள்!

தீவிரவாதம்
கருவில்...!
ஜனநாயகம்
தெருவில்...
நர மாமிசம்
ருசிக்கிறது
யுத்தமென்னும்
உருவில்...!

-கே.அல்.ஆஸாத்,
ஏறாவூர் - 03.

### விடை சொல்லுமா...?

இடிந்த சுவரிடையில்
ஒடிந்த உள்ளமானது
வடிந்த கண்ணீருடன்...
மடிந்த சமாதானமானது
விடிந்த பொழுதுக்கு
விடை சொல்லுமா...?

- அ.ரவி,
மட்டக்களப்பு.

### பட்டினிச் சாவு...

கல்லையும் மண்ணையும்
காய்ச்சிக் குடிக்கக் கடவுள்
கற்றுக் கொடுத்திருப்பானாகில்
இப்போரினால் பட்டினிச் சாவு
ஏற்பட இடம் இல்லை இங்கு.

-சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### விதியின் விளையாட்டு

அன்னமூட்ட
அன்னையில்லை...
அரவணைக்க - ஒரு
தேசமில்லை...
விதியும் வாழ்வில்
விளையாடியதால்...
வந்து விட்டோம்
வீதிக்குச் சுமையாக...

-ஹைறு.பைசல்,
கொழும்பு - 14.

## உங்கள் பக்கம்

### குச்சவெளி, ஜாயாநகர் மீனவர்களின் வேண்டுகோள்!

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட கடற் பேரலையால் இப்பிரிவு மீனவர்களின் வீடு, போட் இன்ஜின்கள், கடற்றொழில் உபகரணங்கள் யாவும் சேதமுற்றும் இதுகால வரை இப்பிரதேச மக்களுக்கு ஒரு சில உதவிகளே கிடைத்துள்ளன. அதிகமானவர்களின் போட் இன்ஜின்கள் சேதமுற்றதாலும் இப்பிரதேசத்தில் நாளாந்தம் ஏற்படும் அசம்பாவிதத்தாலும் கடலுக்குச் செல்ல முடியாமல் பிரதேச மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அத்துடன் சுனாமிக் கொடுப்பனவான நிவாரண முத்திரையும் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் இக்கிராமவாசிகள் மட்டுமின்றி குச்சவெளி, நிலாவெளி, இக்பால் நகர், கோபாலபுரம், வாலையூற்று, இறக்கக்கண்டி, கும்புறுப்பிட்டி, வீரன்சோலை, காசிம்நகர், புடவைக் கட்டு, புல்மோட்டை போன்ற மீனவக் கிராமங்களின் மக்களும் நாளாந்தம் தேவையான சாப்பாட்டுக்கே வழியின்றி மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே இப்பிரதேச மக்கள் மீனவ நிவாரண உதவிகள் கிடைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களை வேண்டி நிற்கின்றார்கள்.

-ஏ.ஆர்.ஹஸ்ஸாலி,
குச்சவெளி.

## வாசகர் சாலை

### நன்றி தினமுரசு!

தினமுரசின் ஆக்கங்கள் அனைத்தும் தரமாக உள்ளன. நகைச்சுவையும் சேர்த்துக் கொண்டால் சிறப்பாகும். ஆள் கடத்தலும், வன்முறைக் கொலைகளும் அன்றாட நிகழ்வாக வழமையாகிவிட்டன. 'குற்றவாளி யார்?' என மர்மமாய் இருந்த ஐயப்பாடுகளை நீக்கும் விதமாக மதியூகி அவர்களின் 'குற்றங்கள் குறைய வாய்ப்பில்லை' என்ற கட்டுரை தெளிவான விளக்கத்தை அளிக்கின்றது. அவருக்கும் தினமுரசுக்கும் பாராட்டுக்கள் - வாழ்த்துக்கள் - குழப்பமாயிருக்கும் மக்களுக்கு இது போன்ற கட்டுரை இன்றைய நிலையில் அவசியமாகும்.

ப.பாலகிருஷ்ணன்,
காவத்தை.

அன்பான தினமுரசே!

கடல் தாண்டி நானிருந்தாலும் என் தாயகத்தில் நடக்கும் உண்மைச் சம்பவங்களையும் பயங்கர வாதிகளின் கொடூரச் செயல்களையும் பச்சையாகக் கூறுவதுடன், சிறுவர் பகுதி முதல் சினிமாவரை சிறு துளிகளாக இருந்தாலும் சூடு சுவாரசியத்துடன் என் கரம் வந்து சேரும் வரை ஆவலுடன் காத்திருப்பேன். எத்தகைய இடர் வரினும் துணிவுடன் உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

சி.மூர்த்தி,
சுவிஸ்.

### வாழ்க தினமுரசு!

நான் தினமுரசை வாரம் தோறும் தொடர்ந்து வாசித்து வருகிறேன். இதில் வரும் விடயங்கள் பலவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. எனினும் எழுத்தாளர் தேசனால் தரப்படும் போவோம் ரசிப்போம் எனும் பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. ஏனெனில், அதில் வரும் தலைப்புக்கள் ஒவ் வொன்றும் எமது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சிறிய விடயங்களாக இருந்தாலும், எமது வாழ்க்கையெனும் பாத் திரத்தில் எவ்வளவோ பெரிய விடயங்களைக் கற்றுத் தரு கின்றதோடு எம்மை அவ்விடத்திற்கே அழைத்துச் செல் கின்றது. எனவே அவரது எழுத்துப் பணி தொடர வேண்டும் என்றும் ஆண்டாண்டுக்கும் இம்முரசு ஒலிக்கவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

கஜன்,
மட்டக்களப்பு.

### தினமும் நீ வரவேண்டும்

தினமுரசில் வரும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று சலிக்காதவை. இதில் வரும் எக்ஸ்ரே ரிப்போட் மற்றும் மதியூகி என்பன உலக மற்றும் முக்கியமாக உள்நாட்டு அரசியல் நிலைமைகளை விளக்குகிறது. மற்றும் உலக அதிசயங்கள், உலகின் முக்கிய சம்பவங்களை அறிந்து கொள்ள தகவல் பெட்டி உதவுகிறது. இவை தவிர சார்லி சாப்ளினின் வாழ்க்கைச் சரிதம் மற்றும் உலகை வியக்க வைத்தவர்கள் மற்றும் சினிமாப் பகுதி என்பவற்றைத் தாங்கி வலம்வரும் தினமுரசு வாரம் ஒருமுறை வருவதோடு நின்றுவிடாமல், வெகுவிரைவில் தினமும் வர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

வி.சுஜாதா,
கூமாங்குளம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# போவரின் விஜயம், சமாதானத் தீர்வு குறித்து
# ஏற்படுத்திய நம்பிக்கைகளும் அவநம்பிக்கைகளும்
## -பிரிட்டிஷ் ஆய்வாளர் விசேட பேட்டி

நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹென்சன் போவர், கொழும்பிலும் வன்னியிலும் நடத்திய பேச்சுவார்த்தைகள், சமாதானத்துக்கான முன்னோடி நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும், அவநம்பிக்கைகளையும் தோற்றுவித்திருக்கின்றதென்று உலகளாவிய முரண்பாட்டுத் தீர்வுகள் தொடர்பான ஆய்வாளர் செல்வி கத்தரினா ரொபர்ட்ஸ் தெரிவித்தார். பிரிட்டனைச் சேர்ந்த சமாதான கற்கை நெறிகள் தொடர்பான உதவிப் பேராசிரியையான இவர், தற்போது கொழும்பில் தங்கியுள்ளார். "யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற நம்பிக்கை எம் அனைவருக்கும் இருப்பது நியாயமானது. ஆனால் யுத்தத்திலும் சமாதானத்திலும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களின் அணுகுமுறைகள் நம்பிக்கை ஊட்டக்கூடியதாக இருக்க வேண்டும். நிபந்தனையற்ற பேச்சுக்கு இணைத் தலைமை நாடுகள் ஊடாக முதன் முதலில் அழைப்பு விடுத்தவர்கள் புலிகள் இயக்கத்தினரே. ஆனால் அதனை நிரூபிக்கக் கூடிய வகையில் தாக்குதல்களை தற்காலிகமாகவாவது நிறுத்திவிட்டு நேர்மையோடு இந்த அழைப்பை நேரடியாகவே அரசாங்கத்துக்கு அவர்கள் விடுத்திருக்கலாம். ஆனால் கடந்த நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட யுத்த நிறுத்த காலத்தில் அவர்கள் ஒப்பந்தத்தை மீறிய விதமும், கடந்த காலங்களில் சமாதான பேச்சுவார்த்தைகளை அவர்கள் குழப்பியடித்த விதமும் அரசாங் கத்துக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பது நியாயம் தான்.



அரச சமாதான செயலாளர் பாலித கொஹன - சமாதானத் தூதுவர் ஹென்சன் போவர்

எனவே உண்மையாகவும் நேர்மையாகவும் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை விரும்பினால் அரசின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவர்கள் தம் கௌரவத்தை இழந்து விடப் போவதில்லை. வன்னியில் எடுக்கப்பட்ட கலந்துரையாடலின் முடிவுகள் பிரபாகரனின் இறுதித் தீர்மானத்தின் பின்னரே நடைமுறைக்கு வரும். இரு தரப்பும் சமாந்தரமாக இரு விடயங்களை பேச்சுவார்த்தைகளில் முன்னெடுக்க வேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் அதே வேளை, ஒட்டுமொத்தமான அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளையும் ஏக காலத்தில் முன்னெடுக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் தீர்வுகள் முன் வைக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கம் முன்வைத்திருக்கும் நிபந்தனை நியாயமானது. அதைப் போன்றே ஆயுதக் கடத்தலும், வன்செயல்களும் இடம் பெறக் கூடாதென்ற கோரிக்கைகளும் நியாயமானவை. ஒரு மாத காலத்துக்குள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாமென்று அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருப்பது நம்பிக்கை தருகிறது. இப்போது பந்து பிரபாகரனின் பக்கத்தில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு, அவர் நம்பிக்கையூட்டக் கூடிய விதத்தில் செயற்பட வேண்டும். யுத்த நிறுத்த ஒப்பந்தம் வெறும் ஆவணமாக இருப்பதாலும், அது சமாதான முன்னெடுப்புகளுக்கு எவ்விதத்திலும் பங்களிக்காத காரணத்தினாலும் புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றினை இருதரப்புகளும் செய்து கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். சிக்கல் குறைந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முதலில் கவனம் செலுத்தி, பின்னர் படிப்படியாகச் சிக்கல் நிறைந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறைகளை இரு தரப்புகளுமே அணுக வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள்தான் அதிகாரப் பகிர்வு என்ற அரசின் அடிப்படை நிலைப்பாட்டைப் புலிகள் ஏற்றுக் கொள்ளாத வரை சமாதானப் பேச்சுவார்த்தை என்பது வெறும் வாய்ப் பந்தலாகவே அமையும். தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை முன் வைக்கக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தைப் புலிகள் இயக்கம் சரிவரப் பயன்படுத்த வேண்டும்" என்றும் முரண்பாட்டுத் தீர்வுகள் தொடர்பான ஆய்வாளர் செல்வி கத்தரின் ரொபர்ட்ஸ் தெரிவித்தார்.

# சமாதானத்தைச் சீர்குலைப்பவர்களுடனும் பேசித்தானாக வேண்டும்
## -கொஸ்டாரிக்கா பேராசிரியை கருத்து

"சமாதான முயற்சிகளில் சகலரும் ஈடுபடுத்தப்பட வேண்டும். சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பதற்குச் சிலர் முயற்சி செய்வார்களென்பது உண்மைதான். ஆனால் அவர்களைக் கெட்டித்தனமாகக் கையாள வேண்டும். இவ்வாறு குழப்புபவர்கள் தனிநபர்களாக இருந்தாலென்ன குழுக்களாக இருந்தாலென்ன, அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்களென்பதைக் கண்டறிந்து, அவர்களைக் கெட்டித்தனமாகக் கையாள வேண்டும். ஏனெனில் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை சகல தரப்பினருடனும் தொடர்புகளை வைத்திருப்பது அவசியமானது" என்று கொஸ்டாரிக்காவிலுள்ள ஐ.நா.வின் சமாதானப் பல்கலைக் கழகத்தில் உதவிப் பேராசிரியையாகக் கடமை யாற்றும் திருமதி எலியானா கார்வால்கோ முகேர்ஜி கூறினார். சமாதானக் கல்வி தொடர்பான முதுமாணிப் பேராசிரியையான இவர் அண்மையில் கொழும்பு வந்திருந்தார். சர்வதேசக் கற்கைகளுக்கான பண்டார நாயக்கா நிலையம் நடத்திய முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான பயிற்சிப் பட்டறையில் விரிவுரைகள் நடத்துவதற்காகவே அவர் இலங்கை வந்திருந்தார். 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் - சிங்கள மக்களிடையே இனக் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் பிரச்சினைகளுக்குக் காரணமாகவிருந்த மொழிக்கொள்கையை இப்போது அரசாங்கம் கையாளும் விதத்தை நான் பாராட்டுகிறேன். அரசாங்க இணையத்தளங்களில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இலங்கையில் இன இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது பெரிதும் உதவும் என்றும் அவர் சொன்னார்.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் எல்லாளன் படை எச்சரிக்கை

யுத்த விளைவுகளால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்.மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் துண்டுப்பிரசுரங்கள் 'எல்லாளன் படை' என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தும் விதத்தில் ஆடைகளை அணிதல், வீதிகளில் கூடி நின்று சிரித்துக் கதைத்தல், மாற்றுக் குழுக்களுடன் தொடர்புகளை வைத்திருத்தல் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளுக்குக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே எல்லாளன் படை, சங்கிலியன் படை என்பவற்றின் பெயரில் யாழ்ப்பாணத்தில் பலர் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தப் படைகள் புலிகளின் படைகளென்று யாழ்.மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

# குளத்து மடு முகாமிலிருந்து ஆயுதங்களுடன் புலிகள் தப்பியோட்டம்

மட்டக்களப்பிலுள்ள வாகனேரி, குளத்து மடு புலி முகாம் பொறுப்பாளரான பாலிப் போடி தங்கேஸ்வரன் என்பவர் தமது முகாமிலுள்ள மூன்று அல்லது நான்கு பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, ஆயுதங்களுடன் செங்கலடியிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் சரணடைந்துள்ளார். வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆறு வருடங்களாகப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று - ஏ.கே.ரைபிள்கள், 16 மெகஷின்கள் ஆகியவற்றையும் இவர் எடுத்து வந்திருந்தார். அதே முகாமைச் சேர்ந்த தங்கராஜா தியாகராஜா என்ற இளைஞரும், சுந்தரலிங்கம் விமலகாந்தன் என்ற இளைஞரும் தம்வசமிருந்த ஏ.கே. ரைபிள்கள், மெகஷின்கள் சகிதம் ஏற்கனவே செங்கலடி ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் சரணடைந்திருந்தார்கள். தங்களால் யுத்தத்தில் ஈடுபடமுடியாதென்றும் தமக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லை என்று கருதியே பாதுகாப்புத் தேடி இயக்கத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும் இவர்கள் குறிப்பிட்டனர்.

ஏற்கனவே தமது முகாமிலிருந்து சுமார் 25 பேர் தப்பியோடி விட்டார்கள் என்றும் இவர்கள் என்ன ஆனார்கள், எங்கு தப்பிச் சென்றார்களென்று தமக்குத் தெரியாதென்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

# புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்க 'இன்டர்போல்' முஸ்தீபு

உலகிலேயே வயது குறைந்த சிறுவர், சிறுமியர்களைக் கடத்தி, யுத்தத்திற்குப் பயன்படுத்தும் இருபது பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றாக புலிகள் இயக்கத்தை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. உலகளாவிய ரீதியில் சிறுவர்களைக் கடத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள மூன்று அமைப்புகளில் ஒன்றாகவும் புலிகள் இயக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு 'இன்டர்போல்' என்னும் சர்வதேச பொலிஸ் அமைப்பு தீர்மானம் எடுத்துள்ளதென்று பிரதி பொலிஸ்மா அதிபர் அசோகா விஜயதிலக தெரிவித்தார். பிரேஸிலின் றியோ டி ஜனேரோ என்ற இடத்தில் செப்டெம்பர் மாத பிற்பகுதியில் இன்டர் போலின் 75ஆவது வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. இலங்கையின் பிரதிநிதியாக இம்மாநாட்டில் கலந்து கொண்ட இரகசியப் பொலிஸ் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் அசோகா விஜய திலக மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். சிறுவர்களை யுத்தத்துக்குப் பயன்படுத்தும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இலங்கை சமர்ப்பித்த பிரேரணையைச் இன்டர் போலின் அங்கம் வகிக்கும் 185 நாடுகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டன என்று அவர் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்தில் 1348 சிறுவர்கள் இன்னமும் இருப்பதாகவும், இவர்களை விடுவிக்க வேண்டுமென்றும் அண்மையில் ஐ.நா. சிறுவர் அமைப்பான யுனிசெப் அறிக்கையொன்றினை விடுத்திருந்தது. அண்மைய யுத்தத்தின் போது புலிகள் இயக்கத்தால் பயன்படுத்தப்பட்ட 200க்கு மேற்பட்ட சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனரென்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் விஜய திலக மேலும் தெரிவித்தார்.

# தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்களை கருணாநிதி இனியும் சந்திக்க மாட்டார்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி எதிர்காலத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களைச் சந்திக்கப்போவதில்லையென்று தமிழக ஆளுந்தரப்பு வட்டாரங்கள் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றன. கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி.தலைமையில் இந்தியா சென்றிருந்த தூது கோஷ்டியினர் கலைஞர் கருணாநிதியையோ அல்லது பிரதமர் மன்மோகன் சிங்கையோ சந்திக்க முடியாமல் இலங்கை திரும்பியமை குறிப்பிடத்தக்கது. சுமார் ஒரு மாத காலமாக இந்தியாவில் தங்கியிருந்த இவர்கள், இந்த இரு தலைவர்களையும் சந்திப்பதற்கு பல்வேறு வழிமுறைகளூடாக முயற்சிகள் செய்த போதும் அது கைகூடவில்லை. கடந்த மாதம் 7ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கலாம் என்ற நோக்கோடு புதுடில்லி சென்ற கூட்டமைப்பு குழுவினர் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் தமிழகம் திரும்பியமை குறிப்பிடத்தக்கது. அரசியல் தீர்வு முயற்சிகளைக் கைவிட்டு யுத்தத்தைப் புலிகள் ஆரம்பித்ததால், அவர்களின் சார்பாகப் பேசவரும் கூட்டமைப்பு எம்.பி.க்களோடு கலந்துரையாடுவதில் அர்த்தமில்லையென்று கருணாநிதி குறிப்பிட்டிருக்கிறார். தாங்கள் பல தடவைகள் கலைஞர் கருணாநிதியைச் சந்திக்க அவகாசம் கோரியதாகவும் ஆனால் அதற்கான சந்தர்ப்பம் அவரிடமிருந்து தமக்கு வழங்கப்படவில்லை என்றும் பி.பி.ஸி.தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டிருந்தார். ஆனால் அன்றைய தினமே பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில் சம்பந்தன் கூற்றை கலைஞர் கருணாநிதி மறுத்துரைத்தார். தன்னைச் சந்திப்பதற்கு கூட்டமைப்பினர் அவகாசம் கோரவில்லை என்று தெரிவித்த கருணாநிதி "இனிமேல் அவர்கள் உங்களைச் சந்திப்பதற்கு அனுமதி கோரினால் அதற்கு அவகாசம் வழங்குவீர்களா" என்று பி.பி.ஸி. நிருபர் கேட்டபோது அவ்வாறான கேள்வி தேவையில்லை என்று பதிலளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்துக்கு மேலும் அத்தியாவசிய பொருட்கள்

யாழ்ப்பாணத்திற்குப் பொருட்களை கொண்டு செல்வதற்கான கப்பல் வசதிகளும் ஏனைய வசதிகளும் செய்து தரப்படுமென்று அரசாங்கம் அறிவித்ததையடுத்து பல வர்த்தகர்கள் இதற்கான அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளனர். வர்த்தகர்களுக்கும் வர்த்தக முகவர்களுக்கும் அத்தியாவசிய பொருட்களையும் அன்றாடப் பாவனைப் பொருட்களையும் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படுமென்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ன அறிவித்திருந்தார். வரிகள் எதுவும் அறவிடப்படாது என்றும் இப்பொருட்கள் காங்கேசன்துறையிலோ அல்லது பருத்தித்துறையிலோ இறக்கிக் கையளிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். ஏற்கனவே அரசாங்கம் கப்பல்கள் மூலம் கணிசமான அளவு அத்தியாவசியப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

# கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தல் 11 பேர் கைது; உயரதிகாரிகள் மீதும் விசாரணை

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் கோடீஸ்வரத் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டமை, காணாமற்போனமை தொடர்பாக இதுவரை சந்தேகத்தின் பேரில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனரென்று கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜய சுந்தர தெரிவித்தார். கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட மீன் வர்த்தகர் ஒருவரின் குடும்பத்தினரிடம் 25 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற முயன்ற தமிழ் வாலிபர் கைது செய்யப்பட்டதையடுத்தே ஏனையவர்களும் கைது செய்யப்பட்டனர். மட்டக்களப்பு சின்ன ஊறணியைச் சேர்ந்த இந்தத் தமிழ் வாலிபர் (வயது - 26) தன்னை ஓர் அரசியல் குழுவைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டாலும் அதற்கு மாறான கருத்துக்களும் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. கடந்த இரு மாதங்களுக்குள் சுமார் 32 பேர் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனரென்றும் இவர்களில் 26 பேர் தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைத்திருப்பதாகவும் அவர் சொன்னார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள், மூன்று மாதங்களுக்கு முன்னர் திருமணமான இளைஞரொருவர், 26 வயதான லொட்ஜ் உரிமையாளரொருவர், மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த சிவகாந்தன் என்ற வர்த்தகர் உட்பட 32 பேர் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் இருவர் மட்டுமே சிங்களவர்கள். ஒரு நிதிக் கம்பெனியைச் சேர்ந்த இந்த இரு சிங்கள ஊழியர்களும், அக்கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளரான தமிழ் யுவதியொருவரும் பின்னர் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் கடத்தப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, கைது செய்யப்பட்டோர், கடத்தப்பட்டோர் ஆகியோரின் பூரண விபரங்களையும் நேரடியாகச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாரைக் கோரியுள்ளது. இந்தக் கடத்தல் விவகாரத்தோடு அரசியல்வாதிகளும் பொலிஸ் மற்றும் படையதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கலாமென்று வெளிவந்திருக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தும்.

# அமெரிக்க செனட் சபையில் தமிழ் தேசிய கோட்பாடு

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி அமெரிக்க காங்கிரஸ் சபையில் நியூஜேர்ஸி தேர்தல் தொகுதியின் உறுப்பினர் பிராங் பல்லோன் கடந்த செப்டெம்பர் 27ஆம் திகதி பேசினார். "இலங்கையின் ஐக்கியத்தை பேணுகின்ற ஒரு தீர்வை நான் ஆதரிக்கிறேன். இருந்தாலும் தமிழர்கள் போன்ற சிறுபான்மை இன மக்களுக்கு ஏதோ ஒரு வகையிலான சுயாட்சியை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும். உலகெங்கும் இவ்வாறு சுயாட்சிகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டதை நாம் காண்கிறோம். கனடாவின் கியூபெக் மாநிலமும், பெரிய பிரித்தானியாவிலுள்ள வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய பிரதேசங்களும் சமஷ்டி அமைப்பின் அங்கங்களாகும். ஆனால் இவற்றிற்குக் குறிப்பிடத்தக்க சுயாட்சி வழங்கப்பட்டிருக்கிறது" என்று பிராங் பல்லோன் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

# கவலையளிக்கும் காத்தான்குடி மோதல்

காத்தான்குடியில் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த இரு பிரிவினரிடையே சமயம் சம்பந்தமான முரண்பாடு மோதலாக வெடித்தமை வேதனைக்குரியது. இதனால் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண பெருமுயற்சி எடுக்கப்படும் இத்தருணத்தில், இவ்வாறான சமய மோதல்கள் முழு முஸ்லிம் சமூகத்தையுமே தலைகுனிய வைக்கிறதென்று கொழும்பைச் சேர்ந்த மௌலவி முகம்மது அன்சாரி கூறினார். 25 வருடங்களாக நீடித்து வரும் இப்பிரச்சினைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் சமரசத் தீர்வு காணப்பட்டது. எனவே இறைதூதர் மீது நம்பிக்கை வைத்து நாம் அனைவரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## நம்பிக்கையினங்களின் பாதாளத்துக்குள் பேச்சுக்கள் பலனிருக்காது!

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

ஒரே மாதிரியான தவறுகளைச் சகித்துக் கொள்ளவும், ஏமாற்றங்களை ஜீரணித்துக் கொள்ளவும் நாம் பழக்கப்பட்டுவிட்டோம் என்பதை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டியிருக்கிறது. மூதூர், சம்பூர், யாழ்ப்பாணம், வன்னி, திருமலை வாழ் மக்கள் எதிர்கொள்ளும் இடப்பெயர்வு மற்றும் நெருக்கடி மிகுந்த வாழ்வு, மூதூர், பொத்துவில் படுகொலைகள் என்பவற்றை வசதியாக ஓரப்படுத்தப்பட்டுவிட்டு, நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் ஜோன் ஹேன்சன் பௌரின் இலங்கை விஜயத்தைப் பற்றியும், அவர் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகள் பற்றியும் முதன்மைப் பார்வையைக் கொண்டிருக்க எப்படி நம்மால் முடிந்திருக்கிறது.

ஒரு வருகைக்காகவும், சமரச ஏற்பாட்டுக்காகவும் கொடுக்கப்பட்ட விலையா இடப்பெயர்வும், படுகொலைகளும், நெருக்கடிகளும். ஏற்பாடுகளுக்கான விலையே இதுவாக இருந்தால், பேச்சுவார்த்தைகளுக்காகவும் அதனூடான வெற்றிகளுக்காகவும் அப்பாவி மக்கள் இதனிலும் மேலாக எத்தகைய விலையைக் கொடுக்க வேண்டியிருக்குமோ என்ற பீதி நிறைந்த கேள்விக்கு விடை எவரிடமுமில்லையே.

தற்சமயம் ஹேன்சன் பௌர், பறந்து பறந்து முயற்சிப்பது சமாதானத்துக்காகவா? அல்லது இருதரப்பு சமரசத்துக்காகவா? இரண்டுக்குமானது என்றால், இரு தரப்பும் கொண்டிருக்கும் பலவீனமான நம்பிக்கையீனங்கள் என்ற படுபாதாளத்துக்குள்ளிருந்து இரு தரப்பையும் மீட்காமல் இந்த முயற்சி சாத்தியமானதுதானா?

அடிப்படையில் குறைந்தளவு நம்பிக்கைகளைக் கூட இரு தரப்புகளுக்கிடையிலும் ஏற்படுத்தாமல் அசாத்தியமான அத்திவாரத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட முன்னைய கால பேச்சுவார்த்தைகள் தடம் தொலைத்துத் தகர்ந்து போன வரலாற்றை இவ்வளவு விரைவில் மறந்து விட்டோமோ? அப்படியென்றால் கடந்த கால தவறுகளிலிருந்து நாம் எதையுமே கற்றுக்கொள்ளவோ, திருத்திக் கொள்ளவோ இல்லையா? ஆம், என்றால் மீண்டுமொரு தவறான முடிவுக்காகத்தான் முயற்சி செய்து கொண்டிருக்கிறோமா?

எரிக் சொல்ஹெய்ம் மாற்றமடைந்து ஹென்சன் பௌர் வரமுடிந்தது. பேச்சு நடத்தும் குழுக்களில் நபர்கள் மாற்றமடைந்து புதிய முகங்கள் முகம் காட்ட முடிந்தது. ஆனால் பிரச்சினைகளும், பிரச்சினைகளுக்கான அடித்தளமும் இன்னும் அப்படியே தான் இருக்கிறது என்பதை ஏன் எவரும் புரிந்து கொள்கிறார்களில்லை.

அடித்தளத்தில் உறைந்து போயிருக்கும் இனப் பிரச்சினையின் காரண காரணிகளும் அதற்கான வரலாறும் வடுக்களைச் சுமந்தபடி உண்மைகளாக அப்படியே இருக்க, அதை ஏற்றுக்கொண்டு தீர்வை நோக்கிய இதய சுத்தியை ஒருவரிடமும் இதுநாள் வரை காண முடியவில்லையே. சர்வதேச சமூகம் கூட இந்த உண்மைகளை மூடி மறைத்து பூசி மெழுகுவது போல்தான் தமது தலையீடுகளைக் கொண்டிருக்கின்றனவோ என்ற சந்தேகம் இப்போது மக்களிடம் வலுக்கத் தொடங்கியுள்ளது.

ஆகவே இரு தரப்பு நம்பிக்கையீனங்களையும், மக்கள் கொண்டிருக்கும் சந்தேகங்களையும் முதலில் தீர்க்காமல் சமாதானம் பேசுவது என்பது நெருப்புக்கு மேலாக சாக்குத் துண்டைப் போட்டு அமர்ந்து கொள்வதற்கு ஒப்பானதாகவே இருக்கும். அவ்வாறானதொரு சூழலில் இரு தரப்பும் நிபந்தனைகளை முன்வைப்பதையோ, நம்பிக்கையீனங்களை வலுப்படுத்தும் விதமான தாக்குதல்கள் தொடர்வதையோ தடுக்க முடியாது. அவை தொடர்கதையாகத்தான் இருக்கும்.

நிபந்தனைகளுக்கு மேல் நிபந்தனைகள் என்றொரு நியதி தொடரும் வரை விரைந்த அமைதி என்பது இலங்கை மக்களுக்கு வரட்சியான பேராசையாகத்தான் இருக்கும்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பது முரண்பாடுகளால் கூர்மையடைந்து, பரிணாம வளர்ச்சி கண்டு, சாதாரண கட்டங்களைக் கடந்து, தற்போது பலமான அழுத்த சக்தியொன்றின் துணையோடு அடுத்த கட்டத்துக்கு நுழையும் தறுவாயில் இருக்கிறது என்ற யதார்த்தத்தை இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல் அணுகினாலே தவிர, இலங்கையில் எரியும் தீயையும் - குருதியையும் தடுத்து நிறுத்த முடியாது.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்துக்குத் தயாரெனப் புலிகள் இயக்கம் நோர்வேக்குக் காட்டிய சமிக்ஞை, செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி பெல்ஜியத்தில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்ட அறிக்கையில் வெளி உலகுக்குப் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளிவந்து மூன்று வாரங்கள் கடக்கின்ற நிலையில், மூன்று நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, அரசாங்கம் பேச்சுக்குத் தயாரென்று பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார். நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாரென்று புலிகள் அறிவித்த பின்னர், இந்த அழைப்பு புலி இயக்கத் தலைவர் பிரபாகரனிடமிருந்து வரவேண்டுமென்று அரசாங்கம் அறிவித்தது. அடிபட்ட புலி எந்நேரமும் பாயலாமென்று பிரபாகரனின் புலி இயக்கத்தை விட்டுப் பிரிந்த கருணா அம்மான் எச்சரிக்கை விடுத்திருந்த நேரத்திலேயே, பிரபாகரன் பேச்சுக்குத் தயாரென்ற சமிக்ஞையை விடுத்துள்ளார் என்ற தகவல் வெளிவந்தது. "காயமடைந்த புலி பயங்கரமானது. புலிகள் மீண்டும் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு சம்பிரதாயமற்ற யுத்தத்தில் ஈடுபடலாம். அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்திருக்கும் புலிகள் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தி உடல் சிதறி மரணமடைய வைத்தனர். பிரேமதாசாவோடு நெருங்கிய சகவாசம் வைத்துக் கொண்ட புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியான பாபு என்பவரே அவரின் மரணத்திற்குக் காரணமாக அமைந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு ஆதரவு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்காவையும் பல முக்கிய ஐ.தே.க.தலைவர்களையும் தொட்டலங்கா குண்டு வெடிப்பில் கொன்றதும் புலிகள் இயக்கமே. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் சிற்பியாக விளங்கிய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியை 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி, தமிழகத்தின் ஸ்ரீபெரம்புதூர் என்ற இடத்தில் தனு என்ற தற்கொலைக் குண்டுதாரி மூலம் கொன்றவர்களும் புலிகளே. எனவே கருணா அம்மான் கூறியதுபோல, இயக்கம், பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடலாம். தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், பதுங்கியிருந்து தாக்குதல்கள் மற்றும் வாள்கள், கோடரி ஆகியவற்றைக் கொண்டும் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவது போன்ற பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடலாம்" என்று கருணா எச்சரித்திருந்தார்.





நாட்டில தற்போது நிலவுற அசாதாரண சூழ்நிலையில தரைப்பாதை துண்டிக்கப்பட்டதால யாழ் குடாநாட்டிற்கு கப்பல் மூலம்தான் அத்தியாவசியப் பொருட்கள் போகுது. கொழும்பிலும், திருமலையிலையும் சாமான்கள் புத்தம் புதுசாய் ஏத்தப்படுகிறதை உலக உணவுத்திட்ட மற்றும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளும் நேரடியாகப் பார்க்கினம். ஆனால் பாருங்கோ மக்களுக்கு குடுக்கிற சாமான்கள் நாள்பட்டும், பழுதடைஞ்சும் இருக்குது. போதாக்குறைக்கு சுனாமி நிவாரண பொருட்களும் விற்பனைக்கு அல்ல எண்ட இலச்சனையோடு வில்படுகுது. இது குறிச்சு அரசாங்கத்தின் மீது ஒருத்தரும் குற்றம் சுமத்தவில்லை. அப்ப இப்பவும் பின்னணியில யார் இருக்கினம் எண்டது தெரியும் தானே எண்டு மாஸ்டர் கேக்கிறார் பாருங்கோ.

# பேச்சுக்குப் பிரபாகரன் தயார்! அரசும் உஷார்! ஏ. 9 பாதை...?



சமாதானத் தூதுவர் ஹேன்சன் போவர் தமிழ்ச் செல்வனைச் சந்தித்த போது.

பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய தளபதியாகப் பல வருடங்கள் செயற்பட்ட கருணா அம்மானுக்குப் பிரபாகரனின் தந்திரோபாயங்களும் உத்திகளும் நன்கு தெரியும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் பிரபாகரனின் பிரதான இலக்குகளாகக் கூட இருக்கலாமென்று கருணா அம்மான் எச்சரித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்திய பிரபாகரனின் புலிகள் இயக்கம், 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு மாநகர சபை வளவில் வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தி சந்திரிகாவைக் கொல்ல முயற்சி எடுத்தது. 1988, 89ஆம் ஆண்டுகளில் ரணசிங்க பிரேமதாசாவுடனும் லலித் அதுலத் முதலியுடனும் கள்ளக் கூட்டுச் சேர்ந்து, இந்தியப் படைக்கெதிராகப் போரிட்ட பிரபாகரன் தனது ஆட்கள் மூலமாக 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி லலித் அதுலத் முதலியை கிருலப்பனை விளையாட்டுத் திடலில் வைத்துச் சுட்டுக் கொன்றார். பிரேமதாசாதான் லலித் அதுலத் முதலியைக் கொலை செய்வதற்கு உடந்தையாக விளங்கினார் என்று கட்டுக் கதைகளைக் கட்டவிழ்த்துவிட்ட புலிகள் இயக்கம், 1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று மேதின ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்த ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோடு பல 'பாபு'க்கள் நெருங்கிப் பழகலாம், சுற்றித் திரியலாமென்பது வெறுமனே தட்டிக்கழித்து விடக் கூடிய விடயமல்ல.

இங்கே இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டித் தானாக வேண்டும். கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ, வெற்றி பெற்றுச் சில நாட்களின் பின்னர் பிரபாகரன் தனது பிறந்த நாளையொட்டிய உரையில் குறிப்பிட்ட ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டுவது பொருந்தும். "தமிழ் மக்கள் பொறுமை இழந்து விட்டார்கள். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஈடுசெய்யக்கூடிய, நியாயபூர்வமான அரசியல் வரைமுறையொன்றினை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது அவசரமானதும், இறுதியுமான கோரிக்கையாகும். புதிய அரசாங்கம் அதனை நிராகரிக்குமானால், எமது மக்களின் ஒருமைப்பாட்டுடன் தேசிய விடுதலைக்கான சுயநிர்ணயப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம்" என்று புலித் தலைவர் கூறியிருந்தார். இதில் தமிழ் மக்கள் அல்லது எமது மக்கள் என்று பிரபாகரன் கூறியதைப் புலிகளென்று அர்த்தப்படுத்திக் கொண்டால் சரி.

இறுதி யுத்தத்துக்கென ஐரோப்பிய நாடுகளில் புலிகள் நிதி சேகரித்தார்கள். ஆயுதங்கள், விமானங்களைத் தாக்கும் ஏவுகணைகள் வாங்க முயற்சித்தார்கள். இறுதி யுத்தத்தையும் தொடுத்தார்கள். விளைவு, சம்பூரையும் பெருந்தொகையான உறுப்பினர்களையும் ஆயுதங்களையும் பறிகொடுத்துவிட்டு, மீசையில் பட்ட மண்ணையும் துடைத்துவிட்டு, சமாதானத்துக்கு நேசக் கரம் நீட்டுகிறார்கள். பிரபாகரன் விழுந்து, எழும்பி நீட்டும் நேசக் கரத்தில் காறி உமிழுமாறு யாரும் கூறக் கூடாது. யுத்தம் மக்களுக்கு ஏற்படுத்தும் பயங்கரமான அவலங்களைப் புரிந்து கொள்ள மாட்டாத கடும்போக்காளர் பாணியில் நடந்து கொள்வது தவறானது. பிரபாகரனின் புலிகளையும் அப்பாவித் தமிழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத 'பொட்டைக் கண்ணர்'களின் பாணியில் யுத்தத்தையோ சமாதானத்தையோ அணுக முடியாது. ஆனால், அரசாங்கம், பிரபாகரனின் சமாதான சமிக்ஞைகளை மிக அவதானமாகக் கையாள வேண்டும். அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான முன்முயற்சிகளை, அதாவது பொது இணக்கப்பாட்டுக்கான நடவடிக்கைகளை எடுத்துவரும் இவ்வேளையில், புலிகளின் அரசியல் தீர்வுக் கோரிக்கை என்னவென்பதை அவர்களிடமிருந்து திட்டவட்டமாகக் கோர வேண்டும். அரசியல் தீர்வை முன்வைக்குமாறு அரசாங்கத்தைக் கோரும் பிரபாகரன், தனது அரசியல் கோரிக்கையை முன்வைக்காமல், வெறும் பம்மாத்துக் காட்டுவது ஏன்? அரசியல் தீர்வென்றால், யுத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவையில்லை. யுத்தத்தைப் புலிகள் ஆரம்பித்ததால் தான், அரசாங்கம் பதிலடி கொடுத்ததென்பதுதான் உண்மை. இந்த இரு தரப்புகளிலும் ஏற்பட்ட இழப்புகளை விட அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் சந்தித்த இழப் புகளும் அவலங்களுமே அதிகம். இரண்டாம் உலக யுத்த காலத்தில் மரணமான ஐந்து கோடி பேரில் மூன்று கோடிப் பேர் அப்பாவி மக்கள் என்பதுதான் வரலாற்று உண்மை. எனவே தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, புலிகள் இனியாவது தமது தவறை உணர்ந்து, நேர்மையுடனும் விசுவாசத்துடனும் சமாதான மேசைக்கு வர வேண்டும்.

அரசாங்கம் முன்வைத்திருக்கும் மூன்று நிபந்தனைகளும் நியாயமானவை. அவை:

1. பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கும், பேச்சுவார்த்தையில் முடிவு காண்பதற்கும் ஒரு குறிப்பிட்ட கால எல்லையைப் புலிகள் முன் வைக்க வேண்டும்.

2. இராணுவ உபகரணங்களை இலங்கைக்குள் கடத்தி வருவதற்குக் கடல் வழிப் பாதையைப் பயன்படுத்த மாட்டோமென்று புலிகள், சர்வதேச சமூகத்துக்கும் உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளுக்கும் உறுதிமொழி அளிக்க வேண்டும்.

3. சமாதானப் பேச்சுவார்த்தை காலத்தில் எவ்வித வன்செயல்களிலும் ஈடுபடமாட்டோமென்று புலிகள் உறுதிமொழியளிக்க வேண்டும்.

நியாயமான நிபந்தனைகள், புலிகளின் கடந்த கால வரலாறுகள் இடக்குமிடக்காக அமைந்தாலும், பேச்சுவார்த்தையை இழுத்தடித்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, தாக்குதல்களையும் புலிகளே ஆரம்பித்தனர் என்பதாலும், அரசு நிபந்தனைகளை விதிப்பதில் தவறில்லை.

ஆகஸ்ட் பதினோராம் திகதி, முகமாலை முன்னரங்கப் பகுதி உட்படப் பல இடங்களில் புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்தனர். இதனையடுத்தே யாழ்.குடா நாட்டுக்கான ஏ-9 வீதி மூடப்பட்டது. இந்தப் பாதை மூடப்பட்டதால் யாழ்.குடா மக்கள் பெரும் கஷ்டங்களைச் சந்தித்தனர், சந்திக்கின்றனரென்பது மறுக்க முடியாத உண்மை. யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் கடற்றொழில் செய்து, அன்றாடச் சீவனம் நடத்திவந்த அப்பாவி மக்களை, அவர்களது வாழ்விடங்களை விட்டு வெளியேறுமாறு எச்சரித்து விரட்டியவர்களும் புலிகளே. கடற்பரப்பில் கடற்படையினர் மீது தாக்குதல் தொடுத்து, கடல் தடையை ஏற்படுத்த வைத்து மக்களின் வயிற்றிலடித்ததும் புலிகள் தான். இன்று ஏ-9 பாதையைத் திறக்குமாறு கோருபவர்களும் புலிகள்தான். புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்காவிட்டால், ஏ-9 பாதை மூடப்பட்டிருக்காது. யாழ். மக்கள் அவஸ்தைப்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் கறுப்புப் பட்டியணிந்து, பாராளுமன்றத்தில் சத்தியாக்கிரகம் இருப்பதால் ஏ-9 பாதை திறக்கப்படப் போவதில்லை. இனியாவது, தாக்குதலில் ஈடுபடாமல் இருந்தால் மட்டும் போதும். யுத்தம் ஆரம்பித்தால், பாதை மூடப்படுமென்பதை ஏன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது? யுத்தம் நடைபெறும்போது, குண்டு வீச்சுகளும், எறிகணைத் தாக்குதல்களும் நிகழும்போது பாதை மூடப்படுவது அவசியமானது. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்ல முடியாது. ஏ-9 பாதையில் வைத்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் இரண்டு பெற்றோல் பவுசர்களைக் கைப்பற்றிய புலிகள், யுத்தத்துக்கு அவசியமாகத் தேவைப்படும் உணவு மற்றும் மருத்துவப் பொருட்களை அபகரிக்க மாட்டார்களென்பதற்கு என்ன உத்தரவாதம்?

புலிகள் ஆரம்பித்த தாக்குதல்களால் முகமாலை முன்னரங்கப் பகுதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு மிக மோசமாகச் சேதமடைந்திருப்பது புலிகளுக்கும் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கும் தெரியாதா? யுத்தத்தை நிறுத்தி, நேர்மையாகப் பேச்சு வார்த்தைக்குப் போய், ஏ-9 பாதையைத் திறப்பதற்கான முயற்சி களைப் புலிகள் எடுப்பதே சரியானது.

## ஏ-9 பாதையால் மக்களுக்கு உபாதை; புலிகளுக்கோ வருமானம் ஜாஸ்தி

**யாழ். குடா நாட்டிற்கான ஏ-9 தரை வழிப் பாதை மூடப்பட்டதால், யாழ்.குடாநாட்டிலுள்ள சுமார் ஐந்து இலட்சம் மக்கள் அன்றாட உணவுப் பொருட்களும் அத்தியாவசியப் பொருட்களும் கிடைக்காமல் அவஸ்தைப்படுகிறார்களென்று தமிழ்ச்செல்வன் கூறிவருகிறார். அதனையே கிளிப்பிள்ளை போல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களும் சொல்லி வருகின்றனர். மக்கள் அவஸ்தைகளையும் அவலங்களையும் சந்திக்கிறார்கள் என்பதில் உண்மைகள் இல்லாமலில்லை. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாக இந்தப் பாதை மூடப்பட்டிருப்பதால் புலிகள் இயக்கத்தினருக்கு இரண்டரைக் கோடி ரூபா நஷ்டமேற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. வரி, கப்பம் மற்றும் மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற புலிகளின் அன்றாட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.**

**புலிகள் இயக்கம் வரி விதித்தல், கப்பம் பெறுதல் மற்றும் உலகளாவிய ரீதியில் நிதி திரட்டல் போன்ற நடவடிக்கைகளால் வருடாந்தம் சுமார் மூன்று கோடி அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதாக பம்பாயைத் தளமாகக் கொண்டியங்கும் கேந்திர முக்கியத்துவ விடயங்கள் தொடர்பான தூரநோக்குக் குழு என்ற அமைப்பு அண்மையில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. ஆட்கடத்தல்கள், தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களிலிருந்து பெறப்படும் அறவீடுகள் மூலம் சுமார் முப்பது இலட்சத்திலிருந்து ஐம்பது இலட்சம் டொலர்கள் வரையிலான நிதி வருடாந்தம் பெறப்படுவதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. போதைவஸ்துக் கடத்தல் மூலம் நூறு மில்லியன் டொலர்களிலிருந்து இருநூற்றைம்பது மில்லியன் டொலர்கள் வரை புலிகள் இயக்கம் வருடாந்தம் பெற்றுக் கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே ஏ-9 பாதை மூடப்பட்டதால் புலிகளின் உள்ளூர் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே புலிகளும் அவர்களுடைய முகவர்களும் ஏ-9 பாதையைத் திறக்க வற்புறுத்துவதற்கான உள்நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதைதான் இது. உண்மையிலேயே மக்களுக்காகப் பரிதாபப்படுபவர்கள் என்றால் புலிகள் வரி அறவிடுதலையும் கப்பம் பெறுதலையும் நிறுத்தி, மக்கள் பயமின்றி சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்யக் கூடிய ஏ-9 பாதையைத் திறப்பதற்கு உதவ முன் வர வேண்டும். 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர், அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்துக்கும் - கொழும்புக்குமிடையில் அல்லது யாழ்ப்பாணத்துக்கும் - வவுனியாவுக்குமிடையில் பஸ்களை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக இருநூறு பஸ் உரிமையாளர்கள் விண்ணப்பித்தனர். புலிகளின் வரி அறவீடு, கப்பம் போன்ற காரணத்தினால் இவர்களில் எவருமே சேவையை நடத்த முன்வரவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றும் யாழ்ப்பாணத்தில் மினி பஸ்களைத் தவிர, பெரிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தக்கூடாதென்று தடை விதித்திருப்பவர்களும் புலிகள்தான். புலிகளின் கட்டுப்பாடுகளை மீறி இப்போதும் யாழ்ப்பாணத்தில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சேவை நடத்த முடியாது. நடத்த முனைந்தால்...?**

# வன்னிக்குள் ஏவப்படும் புஸ்வாண எறிகணைகள்!
# மௌனிக்கும் அதிர்வுகள்!!

**அரச** தரப்பினர் மீண்டுமொரு சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் போவதற்கு முன்னர் பிரதானமான மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர்.

01. சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கும், முடிப்பதற்கும் குறிப்பிட்ட கால எல்லையைப் புலிகள் கூற வேண்டும்.

02. கடல் மார்க்கமாக இலங்கைக்குள் சட்டவிரோதமாக ஆயுதக் கடத்தல்களில் ஈடுபடமாட்டோம் என்ற உத்தரவாதத்தை சர்வதேச அல்லது இணைத்தலைமை நாடுகள் ஊடாகத் தரவேண்டும்.

03. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது புலிகள் வன்முறைகள், படுகொலைகளைச் செய்யக் கூடாது என்பவையே அந்த மூன்று நிபந்தனைகளுமாகும்.

இந்த மூன்று நிபந்தனைகளும் புலிகளின் கடந்தகால செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களிலிருந்து முன்வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த முன்னெச்சரிக்கையானது, மீண்டுமொரு முறை புலிகளிடம் ஏமாந்து விடமுடியாது என்ற அரசின் நிலைப்பாட்டை தெளிவு படுத்துகிறது. இதேபோல் புலிகளாலும் தமது நிலையிலிருந்துகொண்டு சில நிபந்தனைகளை விதிக்க முடியும். அது பெரும்பாலும் முன்னர் ஒப்பந்தம் செய்தபடி, குறிக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்தல் என்பதாகத்தான் இருக்கும். ஆனால் ஏ-9 வீதியை மூடினால் ஒப்பந்தம் முறிவடைந்ததாக அடையாளப்படும் என்றும் திறந்துவிட்டால் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்றும், புலிகள் கூறுவது நகைப்புக்குரியதாகவே இருக்கும். ஆகவே ஏ-9 பாதை திறப்பானது, யாழ்ப்பாணத்தில் மக்கள் பட்டினியை எதிர்கொண்டிருக்கிறார்கள் என்பதை இலக்காகக் கொண்டதானால் அது ஓரளவு நியாயத்தைக் கொண்டிருக்கும்.

புலிகள் - அரசாங்கம் என்ற இரு தரப்பையும் ஒருபுறம் தள்ளிவிட்டு, அரசாங்கம் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளை ஆய்வு செய்தால், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது. மீண்டுமொரு சமாதானப் பேச்சு - கட்டம் கட்டமான நகர்வு, நம்பிக்கையீனங்கள், படுகொலைகள், மக்களின் பெயரால் தாக்குதல்கள், பாடசாலை மாணவர்களின் படிப்பு வீணாக்கம், தேவையற்ற எதிர்ப்புப் போராட்டங்கள், ஆட்கடத்தல்கள், தற்கொலைத் தாக்குதல்கள், மிரட்டல்கள் என்பன நிகழக்கூடாது, பேச்சுவார்த்தைகள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடைபெற வேண்டும் என்ற பொதுவான எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பு மக்களிடமும் இருக்கின்றது. ஆகவே மீண்டும் வாய்த்திருக்கும் சமரச முயற்சிக்கான சந்தர்ப்பத்தை இரு தரப்பும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னர், இரு தரப்புக்குமிடையில் சமரசப் பேச்சுக்கள் சுமுகமான சூழலில் நடைபெற வேண்டும். பின்னர் தான் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது நல்லது. இரு தரப்பும் தமக்குள் நம்பிக்கை அற்று உள்ள நரித்தனங்களோடு வெளியில் போலியான சிரிப்பைக் காட்டி, கபடத்தனமாக சமாதானம் பேச முடியாது என்பதை கடந்த காலம் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

இத்தோடு ஒப்பீட்டுப் பார்க்கின்ற போது வன்னியை நோக்கி இரு வகையான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. கோரிக்கைகள் என்ற ஏவுகணைகள் ஒரு புறமும் விமானத் தாக்குதல்கள் - எறிகணைகள் ஒரு புறமும் நடத்தப்படுகின்றன. இந்த இருமுனைத் தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல் திணறுகின்றபோதும், தாம் வலிமையை இன்னும் இழந்து விடவில்லை என்பதைக் காட்ட வேண்டிய கட்டாயமும் புலிகளுக்கு உண்டு. புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் செஞ்சோலை முகாம் தாக்கப்பட்டபோது, பயிற்சியில் ஈடுபட்டிருந்த அப்பாவி மாணவிகள் கொல்லப்பட்டனர் என்று, மாணவிகளின் சடலங்களைப் பயிற்சி முகாமிலிருந்து எடுத்து வேறொரு இடத்தில் அடுக்கி வைத்துப் புகைப்படம் எடுத்து, பெரும்பிரசாரம் செய்த புலிகள், விமானப்படையினர் நடத்திவரும் ஏனைய தாக்குதல்களையும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும் அவ்வாறு வெளி உலகின் கவனத்துக்குக் கொண்டு வருவதில்லை.



**இதுவரை புலிகளின் முக்கிய இலக்குகளை நோக்கி 30 தடவைகளுக்கு மேலாக விமானப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதில் கடைசியாக மன்னாரிலிருந்து வடக்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்திருக்கும் வெள்ளான்குளம் எனும் பகுதியில் புலிகளின் கடற்படைத் தளம் அழிக்கப்பட்டது. அதை மறுத்த புலிகள், அது மக்களின் மீன்பிடித் தளம் என்றனர். அப்படியென்றால் ஏன் அந்தப் பாதிப்புகளை வெளியில் சொல்ல முடியாது?**

இதுவரை புலிகளின் முக்கிய இலக்குகளை நோக்கி 30 தடவைகளுக்கு மேலாக விமானப் படையினர் தாக்குதல்களை மேற்கொண் டுள்ளனர். இதில் கடைசியாக மன்னாரிலிருந்து வடக்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்திருக்கும் வெள்ளான்குளம் எனும் பகுதியில் புலிகளின் கடற்படைத் தளம் அழிக்கப்பட்டது. அதை மறுத்த புலிகள், அது மக்களின் மீன்பிடித் தளம் என்றனர். அப்படியென்றால் ஏன் அந்தப் பாதிப்புகளை வெளியில் சொல்ல முடியாது?

அதே போல், புலிகள் அமைத்த விமான ஓடு பாதையும் மூன்று தடவைகளுக்கு மேல் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. அந்தச் சேதங்களை கண்காணிப்புக் குழுவினர் கூட போய்ப் பார்க்க புலிகள் அனுமதிக்கவில்லை. புதுக்காடு, பளை, வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, அலம்பில், நாயாறு, கிளிநொச்சி நகரம், கல்முனை, கௌதாரிமுனை, புதுகுடியிருப்பு - ஒட்டிசுட்டான், பூநகரி, தாளையடி, வெள்ளான்குளம் ஆகிய பகுதிகளிலும், இரணைமடுவிலும் புலிகளின் இலக்குகள் மீது விமானப் படையினர் தாக்கியதைப் வெளியில் சொல்லாமல் புலிகள் மறைத்து விட்டனர்.

புலிகளின் இலக்குகளையும், போர் தயாரிப்புச் செய்யும் பகுதிகளையும் இலக்கு வைத்து அடையாளம் கண்டுதான் தமது தாக்குதல்கள் நடைபெறுகின்றன என்ற அரசின் கூற்றை, புலிகளின் மௌனம் உறுதிப்படுத்துகிறது. புலிகள் கூறுவது போல, அத்தகைய தாக்குதல்களில் சாதாரண மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் நிச்சயமாகப் புலிகள் அதற்கான பரப்புரைகளைச் செய்து வெளி உலகத்துக்குக் காட்டியிருப்பர்.

புலிகள் என்னதான் தம் மீதான தாக்குதல்களையும் அதன் பாதிப்புகளையும் மறைத்து எதிர் தாக்கங்களைச் செய்து கொண்டிருக்கின்ற போதும் மாவிலாறு, சம்பூர், முகமாலை கிழக்கு, ஆயுதக் கப்பல், புல்லுமலையில் 16 பேர் கொண்ட அணிகளின் தாக்குதல், மண்டைதீவுத் தரையிறக்கம் ஆகிய மோதல்களில் ஏற்பட்ட பின்னடைவையும், பாதிப்புகளையும் எவ்வளவோ முயன்றும் மறைக்க முடியாமல் போய்விட்டதையும், அதில் தமது தோல்விகளை, மக்கள் கண்கூடாகக் கண்டு கொண்டதையும்

அலசுவது
**- மதியூகி -**

புலிகள் ஈடு செய்ய முடியாததாகவே கருதுவதாகப் புலிகளின் மேல் மட்ட உறுப்பினர்கள் கருதுகிறார்களாம். இந்த விவகாரம் புலிகளின் தளபதிகள் மட்டத்தில் சிறு சலசலப்பையும் தோற்றுவித்துள்ளதென்பதையும் மறுக்கமுடியாது.

எனவே புலிகள் மீது இப்போது தொடுக்கப்பட்டிருக்கும் இரு முனைத் தாக்குதல்களுக்கும் கட்டாயம் புலிகள் பதில் சொல்லியே ஆகவேண்டும். அரசின் கோரிக்கைகளுக்கு எதையும் சொல்லலாம். ஆனால் நடத்தப்பட்ட அத்தனை விமானத் தாக்குதல்களுக்கும் பதிலைத் தர முடியாது. புலிகளைப் பொறுத்தவரை வலிகளைத் தாங்கிக் கொண்டு அத்தனை தாக்குதல்களுக்கும் அரசு பாவித்தது புஸ்வாணக் குண்டுகள்தான்; புதுக்குடியிருப்பில் விழுந்தது மட்டும் தான் உண்மையான குண்டு என்றுதான் கூற வேண்டியிருக்கும்.



## அதிரடி அய்யாத்துரை



**இருபத்தியொரு** புலிகேசியோடை இம்சை அரசின் இருபத்திரெண்டாம் புலிகேசியாக சந்திரமான காந்தனாரும் வந்து ஐக்கியமாகிட்டார். மாமனிதர் ஜோசப்பரின்ர பதவியை எடுத்துக்கொண்டு தன்ர கொப்பரின்ர பொலிரிக்ஸைத் தொடரப் போறாராம் எண்டு சொல்லியிருக்கார். எப்புடியெண்டாலும், உவரெல்லாம் தமிழரின்ர போராட்டத்துக்கும், தாயகப் பிரச்சினைக்கும் வேற்றுக் கிரக வாசிகள் போலதான். ஏதோ குழையடிப்புகளுக்கு மறுக்க முடியாமல் கூத்தனிக்குள்ள குதிச்சுப் போட்டார். மூக்கப் பொத்தியோ, வாயைப் பொத்தியோ... மூச்சுப் புடிச்சு உந்தப் பயங்கரமான பந்தயத்தில ஜெயிச்சுட்டார் எண்டால் நமக்கும் சந்தோசம் தான். உவர் வந்த நேரம் கூத்தமைப்புக்காரர் சத்தியாக்கிரகம் பண்ணுகிறம் எண்டு சபையைக் குழப்பிக் கொண்டிருக்கினம். பாவம் சந்திரகாந்தனார், தன்ர பாராளுமன்ற காலத்தின்ர முதற் பகுதியிலேயே கோணலாகிப் போய் நிக்கிறாருங்கோ...

**சக்தியான** தொலைக்காட்சியில கொஞ்சநாளாக உந்தப் பழைய தொழில் செய்து பிடிபட்ட தலங்கம கேஸைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வருகினம். சமூகத்தில குற்றஞ் செய்யிறவையையும், அதுக்கு உடந்தையாக இருக்கிறவையையும் சமூகத்துக்கு அடையாளம் காட்டவும் அவர்களுக்கான தண்டனை கிடைக்கவும் ஒவ்வொரு தரப்பும் தங்கட பங்கைச் செய்ய வேணும் எண்டது சரிதான். அந்த வகையில சக்தியான தொலைக்காட்சியும் அந்த விஷயத்தை விட்டுப் போடாமல் அதுக்கு ஒரு முடிவு வரும் வரையும் தொடர்ந்து கவனிக்கிறது நல்லதுதான். ஆனால் பாருங்கோ, அந்தக் கேஸில சிகப்புச் சட்டைக்காரக் கட்சியின்ர தலைவரின்ர சகோதரி சம்பந்தப்பட்டிருக்கிறா எண்டதை தாங்கள் சொல்ல மாட்டினமாம். ஆனால் யாரும் சொல்லுறதைப் போடுவினமாம் எண்டு போடினம். இடையில "எந்தவொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு" எண்டதை ஏதோ கோபத்தோடை சொல்லுமாப் போலை சொல்லினம். தேவையெண்டால் போட்டுக்காட்டுவினமாம். உவையின்ர உந்த ஸ்டைல் சரியில்லையுங்கோ. செய்தி போடுறது மக்களுக்கெண்டால் காட்ட வேண்டியதுதானே...ஏதோ பொலிரிக்ஸ் நோக்கமும் தங்கட நோக்கத்தில இருக்கு எண்டதை அப்பட்டமாக வெளிப்படுத்தினமெண்டு சனம் சொல்லினம். பணிப்பாளர் உதில கவனம் எடுங்கோ...

**தென்றலடிக்கிற** வானொலியில இதயத்தில வீணை மீட்டிக்கொண்டு ஒரு நிகழ்ச்சி பலகாலமாகத் தொடர்ந்து ஒலிபரப்பாகிக் கொண்டு வருகுது எண்டது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்த நிகழ்ச்சியில இப்ப புதுசா ஒரு நிகழ்ச்சி செய்யினம். வாரம் ஒரு பிரமுகர் எண்டு வேற வேற கட்சிகளின்ர முக்கியப் பிரமுகர்களைத் தொடர்பு கொண்டு அவையின்ர கருத்துக்களுக்கும் வாய்ப்புக் குடுக்கினம். உது நல்ல விஷயமுங்கோ. இந்தக் காலத்தில நானே ராஜா, நானே மந்திரி எண்டு இருக்கேக்க, மற்றையவரின்ர கருத்துக்களையும் மதிச்சு உள்வாங்கிப் போறதெண்டது நல்ல துங்கோ.

உதை ஏன் சொல்லுறன் எண்டால், அண்டை நாடு மாற்றுத் தமிழ்க் கட்சிகளை வாங்கோண்டு கூப்பிட்டுக் கதைக்குது. இங்க இவை பரஸ்பரம் உறவுகளை மேம்படுத்திக் கொள்ளினம் போல ஒரு தோற்றம் வெளிப்படுகுது.

உப்பிடி எல்லாரும் ஒண்டாயிட்டினம் எண்டால் ரெண்டெழுத்தார் தனிச்சுப் போயிடுவினமாம் எண்டுதான் தெரியுது. அது சரி, ஊர் கூடித்தானேங்கோ தேர் இழுக்க வேணும்...

"**அவன்** கூடாதவன் எண்டு விரல் நீட்டேக்க, மிகுதி நாலு விரலும் உன்னைக் காட்டுது" எண்டுவினம். அதுபோலை மலையகத்தில புது புரட்சிப் பேசிக் கொண்டு பொலிரிக்ஸ் பண்ண வந்த அருள் இல்லாத சாமியார், தன்ர தலைமையிலான சனத்துக்குப் பேய்க்காட்டினம் எண்டு புரட்சி பேசித்தான் கிரவுண்டில தனிச்சு இறங்கினவர். அப்பவே தெரிஞ்சு போச்சு, உவருக்கு அருள் இல்லை எண்டது. ஏன் தெரியுமோ? இன்னொரு ஆளை பிழை சொல்லி, பிழைப்பு நடத்த ஏலாது. திறமை சொந்தமாக இருக்கவேணும். உவரிட்ட சரக்கு இல்லை எண்டு தெரிஞ்சுது. எண்டாலும் பாப்பம் புதுசா கிளம்பியிருக்கார் எண்டு அவதானிச்சால், ஆள் தன்ர முன்னாள் தலைமையை விடவும் ரெண்டு மடங்கா பித்தலாட்டம் பண்ணுறன் பார் எண்ட கணக்காக சும்மா வாய்ச் சவடால் அடிச்சுக் கொண்டு பொலிரிக்ஸ் பண்ணுறாருங்கோ.

தன்ர அமைச்சர் இமேஜைப் பாதுகாத்துக் கொள்ளுறதில காட்டிற அக்கறையை அதைப் பிரயோகிச்சு சனத்துக்கு சேவை செய்யிறதில காட்டிறார் இல்லையாம்.

உவரோடை ஒப்பிடேக்க, அவர் வடிவேலர் பரவாயில்லையாம். உந்தப் பாராட்டு ஒண்டும் பக்கச்சார்பு பாராட்டு இல்லையுங்கோ. கொஞ்சமாவது வேலை செய்யிறவையை, கொஞ்சமாகத் தன்னும் பாராட்டத்தானே வேணும் எண்டு அருள் இல்லாதவரை விமர்சிக்கிற சனம் சொல்லினமுங்கோ. வடிவேலர் உதே ரூட்டில போனால் தனக்கெண்டு ஒரு தனியிடத்தைப் பிடிப்பார் போல இருக்கு. எனவே அருள் இல்லாதவர் இனியாச்சும் யோசிச்சு தனக்கு அருள் இருக்கு எண்டதைக் காட்டினால் நல்லது. இல்லாட்டில் நோ சான்ஸாமுங்கோ. அருளானவர் நேரத்தையும், வாய்ப்பையும் மிஸ் பண்ணிப் போடாதேங்கோ. புரியுதோ...

**வடக்குக்குக்** கப்பலில போக வேணுமெண்டு சில பேர் தலைநகரில நிண்டு கொண்டு தெரிஞ்சவையள், அறிஞ்சவையளிட்டை விசாரிச்சுக் கொண்டிருக்கினம். அவை அநேகமாக டொலரில் பிழங்கிறவை எண்டதாலை யாருக்கும் காசு குடுத்தெண்டாலும் தங்களுக்குப் பயண ஏற்பாட்டைச் செய்ய முடியுமெண்டாலும் பிரச்சினையில்லையெண்டு சொல்லினமாம்.

அப்புடி தங்களுக்குப் பயண ஏற்பாடு செய்யேக்க கப்பல், தலைநகரில இருந்து நேரடியாக குடாநாட்டுக்குப் போகாதோ எண்ட கேள்வியோடை, கப்பலில இருந்து போறதோ இல்லாட்டில் நிண்டு கொண்டு போறதோ எண்டும் விசாரிக்கினமாம். ஏன் தெரியுமோ? சனங்களுக்காகக் கப்பல் விடுறதெண்டால் சனத்துக்கு ஏற்ற மாதிரி பிளாஸ்ரிக் கதிரையெண்டாலும் கப்பலுக்குள்ள போட்டிச்சினம் எண்டால் வசதியாயிருக்கும் எண்டு வசதியா சொகுசு பேசினமுங்கோ...

அவசரப் பயணத்துக்கே சனம் அலைபாஞ்சு கொண்டிருக்கேக்க, பணப் பகட்டு பாத்தியளோ சொகுசுப் பயணம் கேக்குது. எல்லாம் நேரமுங்கோவ்...

# ஜன்னல்

உலகத்தின் பிரமாண்டம் பற்றித் தெரிந்திராத பால்ய வயதில், எனக்குத் தெரிந்த உலகம் எங்கள் வீட்டு ஜன்னல் அளவு தான். ஆகாயத்தை வீட்டுக்கு வெளியில் வந்து நின்று அண்ணாந்து பார்த்தால், ஒரு முடிவே தெரியாத வானம் பரந்து கிடப்பது புரியும். அப்படிப் பார்க்கின்றபோது சிந்தனைக்கு அப்பாற்பட்ட பிரமாண்டத்தைப் பற்றி எந்தப் புள்ளியிலிருந்து சிந்திப்பது என்று




நினைத்துக் கொள்வேன். ஆகவே என் வீட்டு ஜன்னல்தான் ஆகாயத்தையும், பூமியையும் நான் அளவிட்டுப் பார்க்க எனக்கு உதவியது.

ஜன்னல் தான் எங்கள் வீட்டின் சுவாசக்குழாய் என்பதை நான் புரிந்துகொண்ட போது என் சிலிர்ப்புகளுக்கு அளவேயில்லை. ஒரு நாள் ஜன்னல் வழியாக வெயில் ஊடுருவி வீட்டுக்குள் நுழைந்த போது, ஜன்னல் வெயிலைத் தடுக்கவில்லை. தங்க நிற வெளிச்சம் கதிர்கள் போல் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் பிரகாசித்தபோது, ஜன்னலின் உருவம் நீண்டு ஒரு சரிவாக வீட்டுக்குள் தெரிந்தது. வெயில் வரைந்த ஓவியம். அந்த அழகை ரசித்துக் கொண்டே இருந்தேன். நேரம் செல்லச் செல்ல வெயில் செங்குத்தாக வந்தது. அப்போது ஜன்னல் நிழல் ஜெயில் கம்பிகள் போல் வீட்டுக்குள் தெரிந்தது. மாலையான போது வெயில் மெல்ல மெல்ல ஜன்னல் வழியாகத் தன்னை இழுத்துக் கொண்டது. அப்போது ஜன்னலில் நிழல் மெதுவாய் அழகு இழந்து கொண்டிருந்தது. பாவம் ஜன்னல் தன் அழகை நீண்ட நேரத்துக்குப் பாதுகாத்துக் கொள்ள முடியாதபடி வெயில் விடை பெற்றுக் கொண்டது.

அருகில் சென்று ஜன்னலைத் தொட்டுப் பார்த்தேன், வெயில் பூசிய தங்க நிறம் இப்போது இல்லை. வானத்தை எட்டிப் பார்த்தேன், ஒரு கருமேகம் மேலாகவும் இடையில் சேலைபோல் சிறு துண்டு நீல மேகமும் இரண்டும் செருகலாக குங்குமம் தூவியதுபோல் கொஞ்சூண்டு சிகப்பு வானத் துண்டும் ஒரு அழகு. வானம் ஒவ்வொரு நிமிடமும் தன்னை உருமாற்றிக் கொண்டு தடைகள் எதுவும் இல்லாத வெளியில் சுதந்திரமாக மேக ஊர்வலங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. நினைக்கையில் நான் சிறைப்பட்டுள்ளது போலவும், ஜன்னல் சிறைக் கத்வு போலவும் இருந்தது.

உண்மையும் அதுதான். ஜன்னலுக்கு வெளியில் உலகம் சுருங்கித் தெரிந்தாலும் ஜன்னல் கம்பிகளுக்குள் சிறைப்பட்டு இருக்கவில்லையே.




இருள் ஊரை மூடிக் கொண்டபோது என்னையும் ஜன்னலையும் எப்படி இருள் மூடிக் கொண்டதோ தெரியாது. இருளின் அசைவு எனக்கும் ஜன்னலுக்கும் தெரியவில்லை. வெளியே இருக்கும் இருள் வீட்டுக்குள் வந்ததா? இல்லை வீட்டுக்குள் ஒளிந்திருந்த இருள் வெளி இருளோடு இணைந்து கொண்டதா? எதுவும் புரியவில்லை.

எனக்கு உணர முடியாத இயற்கையின் அசைவுகள் ஒருவேளை ஜன்னலுக்குத் தெரிந்திருக்கும். எப்படித் தெரிந்து கொள்வது. பல வருடங்களாக ஜன்னல் இருந்தும் அதன் பாஷை எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் ஜன்னல் வெயிலோடும், இருளோடும், காற்றோடும் குளிரோடும் கதைத்துக் கொண்டுதான் இருக்கிறது.

நாங்கள் தூங்கிய பிறகு காற்றுடன் ஜன்னல் ஏதோ கதைத்துக் கொண்டே இருக்கும். அந்தக் கதையில் பெரும்பாலும் நகைச்சுவைதான் அதிகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏன் என்றால் இடையிடையே ஜன்னல் கதவு 'படபட' என்று தன் கைகள் தட்டிச் சிரிக்கும்.

ஜன்னல் அளவுக்கு மிகுதியாக மகிழ்ச்சி கொண்டிருப்பது அப்பாவுக்குப் பிடிக்காது. கடும் குளிராக இருக்கிறது என்று ஒரு சாட்டுச் சொல்லியோ, ஜன்னல் அடிபடுகிறது என்று சொல்லியோ ஜன்னலை இறுக்கி மூடி விடுவார். விளக்கு வெளிச்சத்தில் ஜன்னல் என்னையே பார்த்துக் கொண்டிருக்கும்.

தன் காதலி தன் வருகைக்காகக் காத்திருக்கும்போது அந்தக் காதலுக்கு மட்டும் ஜன்னலுக்குப் பக்கத்தில் ஒரு நிலவு போல் அவன் காதல் தேவதை தெரிவாள். எங்கள் ஊரில் பல வீடுகளில் ஜன்னலுக்குப் பக்கத்தில் அப்படிப் பல நிலவுகள் காத்துக் கிடப்பதைக் கண்டிருக்கிறேன்.

காதல் தோற்றுப் போய், வாழ்க்கை வெறுத்துப் போய் அதே நிலவுகள் அமாவாசைகளாகவும் ஜன்னலின் பக்கத்தில் அழுது வடிவதையும் கண்டிருக்கிறேன். நிலவு அமாவாசையாவதும், அமாவாசை நிலவாவதும் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருந்தாலும் ஜன்னல் மட்டும் மாறாமல் ஜன்னலகவே இருந்து கொண்டிருக்கிறது.

ஜன்னல் காற்று வாங்கித் தருகிறது. குளிர் வாங்கித் தருகிறது. வெயில் வாங்கித் தருகிறது. நன்றி மறக்கும் நாம் ஜன்னலுக்கு எதையுமே வாங்கித் தருவதில்லை.

அநேகமான வீடுகளில் ஜன்னல் நிர்வாணமாகத்தான் இருக்கிறது. ஒரு சில வீடுகளில்தான் திரைச் சீலை போட்டு மறைக்கிறார்கள்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## தங்களைத் திருத்திக்கொள்வார்களா...?

கடந்த செப்ரெம்பர் (12.09.06) ஒலிவீசும் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் 'புஷ்ஷின் புனை கதைகள் அம்பலம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்தது. உண்மைகளை வெளிப்படுத்தும் நோக்கில். இதே போல் 1990ஆம் ஆண்டில் எந்த விதமான காரணமும் இன்றி யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட முஸ்லிம்களின் நிலைக்கு என்ன நியாயம் சொல்லப் போகிறார்கள்? மறக்கப்பட வேண்டிய துன்பியல் நிகழ்வு என்றால் போதுமா? அவர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட பொருட்கள், பணம், நகைகள் இவையெல்லாம் என்ன கணக்கில் சேர்ப்பது? இவையெல்லாவற்றுமாக புலிகளின் தலைவர் பகிரங்கமாக யாழ், முஸ்லிம்களிடம் மன்னிப்பாவது கோரு வாரா? அப்படிச் செய்தால் அவரின் தன் மானம் போய்விடுமா என்ன? எனவே அருகில் இருக்கும் குற்றவாளிகளைக் கண்டிப் பதை விடுத்து, கடல் தாண்டிப் போவதை நிறுத்திக் கொள்ளுங்கள். அதற்கு நீங்கள் எவ்வகையிலும் அருகதை யற்றவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*எம்.வை.லாபீர்,*
*கொச்சிக்கடை, நீர்கொழும்பு.*

## விளம்பரப் பகுதி


**மலையாள மாந்திரீகம்**



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்

**P.K.சாமி (J.P.) ஐயா**

**அருள் சித்த எண்ணெய்**



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்

**P.K.சாமி (J.P.) ஐயா**

**ஜாதகம்**



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.

ஜோதிட தத்துவ ஞானி

**P.K.சாமி (J.P.) ஐயா**

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.



வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

**நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...**

பண்டாரவளை மலையாள மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

**ஷர்மா சுவாமிகள்**

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அதிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமால் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சந்திப்பு**

பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

**ஷர்மா சாமி அவர்கள்**

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...





# இரண்டு எல்லைகள் இலங்கையில் இல்லை

## —ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

**ஐக்கிய** நாடுகள் சபையின் 61ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை திரும்பும் வழியில் அங்கிருந்து லண்டன் சென்றிருந்தார். அங்கு லண்டன் பி.பி.ஸி.தமிழோசைக்கு இலங்கை விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி பேட்டியளித்திருந்தார். அந்தப் பேட்டியின் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

**கேள்வி** :- இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறுமென்று நோர்வேயினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவது குறித்து உங்கள் தரப்பிலிருந்து ஏதாவது நிபந்தனைகள் முன்வைக்கப்படுமா?

*பதில்* :- முன் நிபந்தனைகளென்று எதுவுமேயில்லை. ஆனால் எமக்கொரு உறுதிமொழி தேவவையாகவுள்ளது. கடந்த முறை பேச்சுவார்த்தைக்கென நாம் ஒஸ்லோ சென்றிருந்தபோது, தமிழ்ச்செல்வனும் ஏனைய அனைவரும் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயாரென்று தெரிவித்தார்கள். நான் எனது தூதுகோஷ்டியைப் பேச்சுவார்த்தைக்கென அங்கு அனுப்பியபோது, 'இல்லை... இல்லை... அரசாங்கத் தூதுகோஷ்டியுடன் பேச நாம் தயாரில்லை' என்று அவர்கள் கூறினார்கள். இவ்வாறானதொரு நிலைமை எதிர்காலத்தில் மீண்டும் ஏற்படக்கூடாது. புலிகள் தெளிவான உறுதி மொழியொன்றினை வழங்க முன்வரவேண்டும். அந்த உறுதி மொழி புலி இயக்கத் தலைவர் பிரபாகரனிடமிருந்து மட்டுமே வரவேண்டும். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரென்று அவர் தெரிவிக்க வேண்டும்.

**கேள்வி** :- தற்போது அமுலிலுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி, இரு தரப்புகளுமே அவரவர்களுக்கெனக் குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் இருக்க வேண்டும். தற்போது நீங்கள் வித்தியாசமானதொரு களநிலையில் பேச்சுவார்த்தை நடத்தப் போகிறீர்கள். எனவே ஏதாவதொரு புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் பற்றிப் பேச உத்தேசித்துள்ளீர்களா?

*பதில்* :- எல்லைகள்...? அவ்வாறு வித்தியாசமான எல்லைகள் இலங்கைக்குள் இல்லை. முழு இலங்கைக்கும் ஒரேயொரு எல்லை மட்டுமே உண்டு. பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரை, அவர்கள் எதனைப் பற்றிப் பேச உத்தேசித்துள்ளார்களென்று எனக்குத் தெரியாது. ஆனால் முதலில் இந்தக் கொலைகள், உயிரிழப்புகள் மற்றும் ஏனைய விடயங்கள் யாவும் நிறுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் ஏனைய விடயங்கள் பற்றி நாங்கள் பேசலாம். ஏனெனில், அரசியல் தீர்வொன்றினை முன்வைக்க நான் தீர்மானித்துள்ளேன். இது தொடர்பாக ஏற்கனவே சர்வ கட்சிக் கமிட்டியொன்றினை நான் அமைத்துள்ளேன். இந்தக் கமிட்டியிலுள்ளவர்களுக்கு உதவுவதற்காக துறைசார் நிபுணர்களையும் கூட நான் நியமித்துள்ளேன். எனவே அந்தக் கமிட்டி சில யோசனைகளையும் தீர்மானங்களையும் முன்வைக்கலாம். அதற்குப் பின்னர் நாம் அவற்றைப் புலிகளுக்கு அனுப்பி வைப்பதோடு மக்களுக்கும் முன்வைப்போம்.

**கேள்வி** :- அது சரி...எந்தவிதமான அரசியல் தீர்வை முன்வைக்க நீங்கள் உத்தேசித்துள்ளீர்கள்? இந்த விடயம் தொடர்பாகச் சிறிதளவு விளங்கப்படுத்த உங்களால் முடியுமா?

*பதில்* :- எந்தவிதமான யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும், அவை ஐக்கிய இலங்கைக்குள் உட்பட்டதாக இருக்க வேண்டும். ஒரே கொடியின் கீழ், ஒரே நாட்டுக்குள் இந்தத் தீர்வு இருக்க வேண்டும். இதேவேளை, அதிகாரப் பகிர்வு செய்யப்படவும் வேண்டும். நாம் ஏற்கனவே இதுபற்றிக் கூறிவிட்டோம். நாம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவும் தயாராக இருக்கிறோம். இந்த அடிப்படையில் எமது மூலாதாரக் கருத்துக்களையும் அவர்களுக்கு வழங்கியுள்ளோம். எனவே இது தொடர்பாகச் சகல அரசியல் கட்சிகளுமே யோசனையை அல்லது தீர்மானத்தை முன்வைக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் எனது சொந்த யோசனையையோ அல்லது தீர்மானத்தையோ முன்வைக்க விரும்பவில்லை. எனவே இந்தக் கமிட்டி, அதனது யோசனைகளையும் தீர்மானங்களையும் முன்வைக்கட்டும். எனது கட்சியும் இந்தக் கமிட்டியில் அங்கம் வகிக்கிறது.

**கேள்வி** :- உங்களோடு இருக்கும் தீவிரவாதக் கொள்கைகளை வலியுறுத்துபவர்களின் ஆதரவு உங்களுக்கு இருப்பதால், உங்களுடைய அரசாங்கத்தின் கொள்கைகளில் இத்தகைய தீவிரவாத அரசியல் கட்சிகளிடமிருந்து அழுத்தங்கள் வரலாமென்று தமிழர்களில் ஒரு பிரிவினர் கருதுகிறார்களே. இது தொடர்பாகத் தமிழர்களில் ஒரு பிரிவினர் தெரிவித்திருக்கும் அச்சம் குறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில்* :- இவ்வாறான பேச்சுகளைக் கூறுபவர்கள், ஒன்றைத் தெளிவாக மனதில் கொள்ள வேண்டும். இத்தகைய அரசியல் கட்சிகள் நோர்வேயை ஏற்பாட்டாளர் பணியிலிருந்து தூக்கியெறிய வேண்டுமென்று வற்புறுத்தியபோது, அவ்வாறான எதனையும் நான் செய்யவில்லை. இல்லாவிட்டால் எனது அரசாங்கமோ அல்லது எனது கட்சியோ, ஏனைய அரசியல் கட்சிகளால் பாதிக்கப்படவுமில்லை. அவற்றின் செல்வாக்குக்கு உட்படுத்தப்படவுமில்லை. மக்கள் மட்டுமே தேவையான அழுத்தங்களை எம்மீது செலுத்த முடியும். எம்மிடம் எமது கொள்கைகள் உண்டு. அவற்றை நாம் அமுல்படுத்துவோம். எவ்வாறெனினும் புலிகளோடு பேசுவது நல்லதில்லையென்று இந்த அரசியல் கட்சிகள் என்றுமே எமக்குத் தெரிவித்ததில்லை. இவ்வாறான அழுத்தங்களை இதுவரை அவர்கள் எம்மீது செலுத்தியதில்லை.

**கேள்வி** :- தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்துவரும் வடக்கு - கிழக்கில் வன்செயல் அதிகரித்து வருகிறது. மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் கருத்துப்படி, இந்தக் கொலைகளும் ஆட்கடத்தல்களும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மிகமோசமாக இடம்பெறுகின்றன. கிழக்கில் கூட நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்த சர்வதேசத் தன்னார்வத் தொண்டர் நிறுவன ஊழியர்கள் கூடக் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த நிலை குறித்து உங்கள் கருத்தென்ன?

*பதில்* :- இவைகளெல்லாம் புலிகளால் மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள். அவர்களின் பிரசாரத்தை நம்ப வேண்டாம். நீங்கள் நேரடியாகவே அங்கு சென்று நிலைமைகளைப் பார்க்கலாம். மக்களிடமிருந்து நேரடியாகவே உண்மையான நிலைமைகளை நீங்கள் அறிந்து கொள்ளமுடியும். இது வரை நாங்கள் ஐயாயிரம் சிவிலியன்களைக் கூட்டி வந்துள்ளோம். இன்றும் கூடக் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் திருமலைக்குத் திரும்பியுள்ளனர். தெற்கு நோக்கி அவர்கள் வரவிரும்பினால், நாம் அவர்களை அழைத்து வருவோம். நீங்கள் ஏன் அங்கு சென்று மக்களைச் சந்திக்க முடியாது. அங்கு உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி அவர்களிடமிருந்தே அறிந்து கொள்ளுங்கள். நாம் எவ்வித அத்துமீறல்களையும் புரியவில்லை. மக்களின் உரிமைகளில், மக்களின் அடிப்படை மனித உரிமைகளில் எனக்கு நம்பிக்கையுண்டு. எனவே மக்களின் எவ்விதமான அடிப்படை உரிமைகளும் ஆயுதப் படையினரால் மீறப்படுவதற்கு நாம் என்றுமே அனுமதிக்கப் போவதில்லை.

**கேள்வி** :- மூதூரில் நிவாரண ஊழியர்களின் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு ஒன்றினை நியமிப்பது குறித்து நீங்கள் கருத்து தெரிவித்துள்ளீர்கள். தற்போது அவுஸ்திரேலிய நிபுணர்களால் நடத்தப்படும் விசாரணைக்கு மேலதிகமாக இந்த ஆணைக்குழு நியமிக் கப்படுமா?

*பதில்* :- அது மூதூருக்கு மட்டுமே குறிப்பாகச் செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒழுங்காகும். ஆகவே தான் அவர்களை நாம் அழைத்திருந்தோம். சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவன நிவாரண ஊழியர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான விசாரணையின் போது அவர்கள் எமக்கு உதவுவார்கள். ஏனைய பிரச்சினைகளைப் பொறுத்தவரை நாம் விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்றினை நியமித்துள்ளோம். இந்த விசேட விசாரணை ஆணைக்குழுவின் அவதானிப்பாளர்களாகப் பங்குபற்ற சர்வதேச சமூகங்களைச் சேர்ந்த ஆட்களை நாம் அழைத்துள்ளோம். இதற்காக இந்தியாவிலிருந்தும் ஒருவரை நாம் அழைத்துள்ளோம்.

# இன்னொருவர் பார்வையில்

# சுதந்திரமாக நடமாடக்கூடிய ஏ—9 பாதை வேண்டும்

## பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் தேவானந்தா

**ஹ**வானாவில் நடைபெற்ற அணிசேரா இயக்க உச்சி மாநாட்டுக்கும் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 61ஆவது கூட்டத்திலும் கலந்து கொள்ளச் சென்றிருந்த இலங்கை தூது கோஷ்டியில் அங்கம் வகித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டி இங்கே தரப்படுகிறது.

**கேள்வி** :- நீங்கள் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும், ஐ.நா.பொதுச் சபையினுடைய வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற் காகவும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினுடைய குழுவில் இடம்பெற்று இந்த இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறீர்கள். இப்பொழுது சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை ஒருபுறம் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே மோதல்கள் நடைபெற்றுள்ளதாலும், இடம் பெயர்ந் துள்ள மக்கள் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலிருந் தும், மூதூர் மற்றும் சம்பூர் போன்ற பகுதிகளிலிருந்தும், ஏன் வடக்கிலும் கூட இடம் பெயர்ந்துள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுடைய தற்போதைய நிலை குறித்து சர்வதேச அளவில் ஒரு கவலை தெரிகிறது. இந்த மக்களுடைய நிலைமைகளை மேம்படுத்துவது குறித்து ஏதேனும் விவாதங்கள் நடைபெற்றனவா?

*பதில்* :- ஆம். அவர்கள் அரசிடமும் ஜனாதிபதி அவர்களிடமும் கேள்விகளையும் தங்கள் அபிப்பிராயங்களையும் அதனூடாகத் தெரிவித்திருந்தார்கள். இது தொடர்பாக அரசால் முடிந்த உதவிகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம் என்றும், இன்னும் செய்வதற்கான முயற்சிகளையும், வேலைத்திட்டங்களையும் விரைந்து முன்னெடுக்கவிருப்பதாகவும், நாங்கள் அவர்களிடம் தெரிவித்திருந்தோம்.

**கேள்வி** :- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தமிழோசைக்காகச் செவ்வி வழங்கிய போது, அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெறுவதாகவும், அதில் இனப் பிரச்சினைக்குத் தீர்வினை வைக்குமாறும் பல்வேறு கட்சிகளுக்குக் கோரிக்கை விடுத்திருப்பதாகவும், அது தொடர்பான செயல்பாடுகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கிறது. இராணுவ நடவடிக்கை மற்றொருபுறம் இருக்கின்றது என்கின்ற ரீதியிலே பதிலளித்தார். ஓர் அமைச்சர் என்ற ரீதியிலே இது போன்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்களினால் உண்மையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வினை எட்டக்கூடியளவு ஒரு ஒட்டுமொத்தமான ஒருமித்த கருத்து, குறிப்பாக தென்னிலங்கையில் வரும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்* :- கடந்த காலங்களில் அவ்வாறான பல சர்வகட்சி மகாநாடுகளில் நாங்கள் கலந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் எதுவும் குறிப்பிடத்தக்க பயனைக் கொடுக்கவில்லை. அவ்வாறான ஒன்றாக நாங்கள் இதைக் கருதாவிட்டாலும், ஜனாதிபதி ராஜபக்ஷ மிக அக்கறையோடும் நம்பிக்கையோடும் இதை முன்னெடுப்பதால் எங்களாலான பங்களிப்பை நாங்கள் முன்வைக்க இருக்கின்றோம். இருந்தாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற இந்த சர்வகட்சி மாநாட்டைப் பொறுத்திருந்துதான் நாங்கள் பார்க்க வேண்டும்.

**கேள்வி** :- இப்போது நீங்கள் அரசாங்கம் எடுத்து வருகின்ற முயற்சிகள் பற்றித் தெரிவிக்கிறீர்கள். ஆனால், இந்தக் கூட்டணியில் உள்ள ஒரு சில கடும் போக்கு வாதம் பேசுகின்ற கட்சிகள் முன்னரே ஏற்படுத்தப்பட்டிருந்த வட, கிழக்கு ஒன்றிணைப்பை பிரிக்க வேண்டும். வடக்கையும் கிழக்கையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற ரீதியில், சிலர் சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இப்போது நீங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற ஒரு தமிழ் கட்சியினுடைய தலைவர். உங்களைப் பொறுத்தவரை இந்த நடவடிக்கை குறித்து உங்களது கருத்து என்ன? அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு என்ன?

*பதில்* :- இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டிருந்தார். அதாவது, வடக்கு, கிழக்கு பிரிப்பது தொடர்பான வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அது தொடர்பாக அபிப்பிராயம் கேட்டபோது, ஜனாதிபதி அவர்கள் சொன்னார். அது அரசினுடைய கருத்தல்ல. அது வேறு கருத்துக்களைக் கொண்ட கட்சிகளுடைய கருத்துக்கள் என்றும், அரசாங்கத்தினுடைய கருத்தைத் தெளிவாக சட்டமா அதிபரூடாக நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருக்கிறோம் என்றும். இது ஒரு சட்டப் பிரச்சினையாகப் பார்க்க முடியாது என்றும். இது ஒரு அரசியல் பிரச்சினையாகப் பார்க்கப்பட வேண்டும் என்றும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதுபோல். சர்வஜன வாக்கெடுப்பினூடாகத்தான் அதற்குத் தீர்வுகாண வேண்டும் என்றும். அதற்குரிய சர்வஜன வாக்கெடுப்பு வைப்பதற்குரிய ஒரு சூழல் உருவாகும்பொழுது, அப்போது அந்த சர்வஜன வாக்கெடுப்பு வைக்கப்பட்டு, அன்று அது தீர்மானிக்கப்படும் என்பதையும் உறுதிபட ஜனாதிபதி அவர்கள் இந்தியப் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

**கேள்வி** :- இதேவேளை இப்பொழுது யாழ்ப்பாணத்திலே, யாழ். குடாநாட்டிலே வன்முறைச் செயல்கள் பெருமளவில் அதிகரித்து வருகிறது. பலர் காணாமல் போகிறார்கள், பலர் கொல்லப்படுகிறார்கள் என்று பலவேறு தரப்புக்கள் மீதும் குற்றம் சுமத்துகின்ற அதேவேளை, ஒரு சிலர் இதற்குக் காரணம் ஒருவேளை ஈ.பி.டி.பி.யாக கூட இருக்கலாம் என்று எதிர்த்தரப்பிலே குற்றம் சுமத்தப்படுகிறது.

*பதில்* :- அப்படி ஈ.பி.டி.பி. மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டை நான் இதுவரை கேள்விப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் சம்பவங்கள் நடப்பதாக சொல்லப்படுகின்றது. அந்த வகையில் இது தொடர்பாக நான் இன்று ஜனாதிபதியைக் காலை சந்தித்தபோது எடுத்துக் கூறினேன். என்னுடைய இந்த விஜயத்தை முடித்துக் கொண்டு விரைவில் இலங்கை திரும்ப இருக்கின்றேன். அங்கு அரச தரப்பினருடனும் அரச படையின ருடனும் இது தொடர்பாகக் கலந்துரையாடி, விவாதித்து இவ்வாறான சம்பவங்கள் தொடராத வகையில் நடவடிக்கை எடுப்பேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

**கேள்வி** :- இப்பொழுது ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்திலேயே பல பிரச்சினைகளுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த ஏ-9 தரைவழிப் பாதையைத் திறப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏன் நீங்கள் அழுத்தம் கொடுக்கக் கூடாது?

*பதில்* :- அதாவது சமீபத்திய யுத்தம் காரணமாகத்தான் ஏ-9 பாதை மூடப்பட்டிருக்கின்றது. நீங்கள் கூறுகின்ற அந்தப் பாதிப்புகள் மக்களுக்கு அதிகம் இருக்கின்றது. நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது நூற்றுக்கணக்கான மக்கள் என்னை வந்து சந்தித்தார்கள். அதில் பலர் என்னிடம் குறிப்பிட்டார்கள், ஏ-9 பாதை இல்லாத யாழ். குடாநாட்டைத் தான் தாங்கள் விரும்புவதாகவும். ஏனென்றால் புலிகளால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சம், பயமுறுத்தல் சுதந்திரமாகக் கருத்துக் கூற முடியாத நிலைமை. மற்றது அவர்களுடைய உழைப்பைச் சுரண்டுதல். மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல். ஏ-9இன் பெயரால் நிதி அறவீடுகள் செய்யப்படுகின்றன. அதனால் அதிக விலை கொடுத்துத்தான் எந்தப் பொருட்களையும் மக்கள் வாங்க வேண்டியிருக்கின்றது.

**கேள்வி** :- ஆனால் இதே நேரத்தில் தற்பொழுது கடுமையாக உணவுப் பொருட்கள் தட்டுப்பாடென்று கூறப்படுகிறது. இது தவிர அரசாங்கத்தால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே ஆட்களைக் கொண்டுவர முடியவில்லை. இதேபோல சிக்கித் தவிப்பவர்களைத் திருப்பிக் கொண்டு போக முடியவில்லை. ஆகவே அனைவரின் எதிர்பார்ப்பும் பாதை திறக்கப்பட வேண்டும் என்பதுதானே.

*பதில்* :- ஆம், ஏனென்றால் பாதை திறக்கப்பட வேண்டும் என்பதை விட, குடா நாட்டுக்கும் அதனுடைய பிரதான நிலப் பரப்புக்குமிடையில் ஒரு இலகுவான தொடர்பு. அதாவது கடல் மார்க்கமாகவோ அல்லது விமான மாக்கமாகவோ ஏதாவது ஒரு தொடர்பிருக்க வேண்டும் என்பதைத்தான் அவர்கள் கூற விரும்புகிறார்கள். அதில் இந்தப் பாதையும் ஒன்று. ஆனால் என்னுடைய இந்த பயணங்களின் போது சந்தித்த தலைவர்கள், ஐக்கிய நாடுகள் உயர் அதிகாரிகளைச் சந்தித்த போது நான் அவர்களிடம் சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தேன். இந்த ஏ-9 பாதை தொடர்பாக ஒரு சுதந்திரம் மிக்க பயணத்தை நீங்கள் ஏற்பாடு செய்வீர்களாக இருந்தால், அரச தரப்பில் நான் அதை உங்களுக்குச் செய்து தருவேன் என்று சொல்லி, அதாவது சுதந்திரமாகவும் இலகுவாகவும் போய்வரக் கூடிய, அதாவது அரச படைகளுடைய தலையீடோ அல்லது புலிகளுடைய தலையீடோ இல்லாமல் மக்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவகையில் போய்வரக்கூடிய ஒரு நிலைமையை சர்வதேச சமூகம் உத்தரவாதம் செய்யுமாக இருந்தால், அரசினுடைய தரப்பில் எங்களுடைய தரப்பு அதற்கான அரசின் அங்கீகாரத்தை பெற்றுத் தருவது என்று நான் அவர்களிடம் தெரியப்படுத்தியிருந்தேன். தாங்கள் இதற்கான முயற்சியை மேற்கொண்டிருப்பதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**நான்**, திருவாளர்கள் விஸ்வநாதன்-ராமமூர்த்தியோடு அமர்ந்து, சத்யா மூவிஸ் அலுவலகத்தில் பாட்டுக்கள் புனைந்து கொண்டிருப்பேன். டைரக்டர்கள் திரு.பி.மாதவன்; திரு.வித்வான் வே.லட்சுமணன்; பேராசிரியர் திரு.நா.பாண்டுரங்கம் ஆகியோர் உடனிருப்பது வழக்கம்.

நடுக்கூடத்தில் பெரிய ஜமுக்காளம் விரிக்கப்பெற்று அதில் நடுநாயகமாக நாம்



அமர்ந்திருப்போம்.

அந்தப் படத்திற்கு, சினிமாவிற்கு முற்றிலும் புதியவரான ஓர் இளைஞர் வசனமெழுத அமர்த்தப்பட்டிருந்தார். நான் எழுதிய பாட்டுக்களை ஆர்மோனியத்தில் வாசித்துக் காட்டிய பொழுது, திரு.ஆர்.எம்.வீயும் மற்றவரும் வெகுவாக ரசித்துக் கேட்பார்கள். அந்த இளைஞரோ, ஒரு மூலையில் மௌனமாக அமர்ந்து கொண்டு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பார். பாட்டு வரிகளைப் பற்றியோ, பாட்டுக்கான மெட்டுக்கள் பற்றியோ அவருடைய கருத்தை எவரும் கேட்டதில்லை: எனவே அவரும் சொன்னதில்லை. எனக்கு அந்த இளைஞரை ஓரளவு நண்பர் நாகேஷ் மூலம், ஏற்கனவே தெரியும்.

ஒருநாள் திருவாளர்கள் விஸ்வநாதன்-ராமமூர்த்தியும் இசைக்குழுவினரும் மட்டும் என்னோடு இருந்தனர். வேறு யாருமில்லை. அந்த படத்திற்கு உரையாடல் எழுதி வந்த அந்த இளைஞர் மட்டும் வந்து ஓர் ஓரமாக அமர்ந்தார்.

திரு.விஸ்வநாதன் என்னருகே சற்றுத் தலையச் சாய்த்து, "அவர் யாரு?" என்று கேட்டார். "அவர் தான் இந்தப் படத்தோட டயலாக் டைரக்டர். நிறைய நாடகங்களெல்லாம் போட்டு ரொம்பப் பாப்புலரானவர்." என்றேன் -நான்.

உடனே விஸ்வநாதன் அந்த இளைஞரைப் பாத்து, "சார்! இப்பதான் வாலியண்ணன் சொன்னாரு... நீங்கதான் இந்தப் படத்திற்கு வசனம் எழுதுறீங்கன்னு... நாலஞ்சு வாட்டி இந்த ஆபிஸ்ல உங்களெப் பார்த்திருக்கேன்- நீங்கதான் டயலாக் டைரக்டர்னு சொல்லவேயில்லையே?" என்று முகமலர்ச்சியோடு கேட்டார். அப்போது அந்த இளைஞர் சொன்னார் : "நான் யாருன்னு தெரிஞ்சு- என் டயலாக்குகளை நீங்க ரசிக்கிறதெ விட - என் டயலாக்குகளைக் கேட்டு ரசிச்சிட்டு - அப்புறம் அதை எழுதினது யாருன்னு நீங்க கேக்கனும்குறதுதான் என்னுடைய ஆசை. அதனாலதான் I KEPT QUITE !... " என்றார் தன்னம்பிக்கை மிக்க அந்த உரையாடல் ஆசிரியர். அவர்தான் இன்று பிரபல இயக்குனராகத் திகளும் திரு.கே.பாலச்சந்தர். அற்புதமாக எழுதுகிறோமோ, சராசரியாக எழுதுகிறோமோ எழுதி எப்படியாயினும் - அந்த எழுத்தின் மூலம் தான் நாம் அறியப்பட வேண்டுமே தவிர, நம்மை முன்னிலைப் படுத்திக்கொண்டு நம் படைப்பைப் பின் வரிசையில் நிறுத்தி வைப்பது,நல்ல படைப்பாளிக்கு உரிய லட்சனமல்ல. என்னுடைய புகைப்படங்கள் அதிகமாகப் பத்திரிக்கைகளில் வெளியாவதில்லையே என்று என் பந்து ஜனங்களும் ஆத்மார்த்தமான நண்பர்களும் என்னிடத்தில் குறைப்பட்டுக் கொள்வதுண்டு.

அவர்களுக்கெல்லாம் "என் முகம், என்பாட்டில் தெரிகிறதே! அது போதாதா?" என்று நான் சொல்வது வழக்கம்.

"படப்பாடல்களில் மட்டும் உங்கள் முகம் தெரிந்தால் போதாது, கவிதைகளிலும் உங்களை நீங்கள் இனம் காட்டிக் கொள்ள வேண்டும்... "என்று எழுபதுகளில் என்பால் அன்பு கொண்ட இருவர் என்னைத் தனிக்கவிதைத் தொகுப்பு வெளியிட வேண்டுமென்று வற்புறுத்தியதுண்டு.

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....

செய்யப்பட்டு வழக்கும் தொடரப்படுகிறது. இம்மாதிரியான வழக்குகள் ரகசியமாக (In Camera ) நடைபெறுவதால் இது பற்றிய முழு விவரங்களும் மக்களுக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் கூட உளவு பார்த்தல் சம்பந்தமான அல்லது அதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமான விவரங்கள் தெரிவதற்கு வழியில்லை. விசாரணையின் போது வெளியாகும் அனைத்துத் தகவல்களும் பாதுகாப்பு ரகசியங்களாக இருந்துவிடமுடியாது. பாதுகாப்பு ரகசியங்கள் என்கிற போர்வையில் எல்லாவற்றையும் மூடி மறைப்பது ஜனநாயக ஆரோக்கியத்திற்கு உகந்ததுதானா என்பதை ஆரோக்கியத்திற்கு உகந்ததுதானா என்பதை அரசியல் கட்சிகள் அனைத்தும் பரிசீலிப்பது நல்லது.

தன் நாட்டிலேயே உளவு வேலை பார்த்து அந்த ரகசியங்களை ஒருவன் வெளிநாடுகளுக்கு கொடுப்பது என்பது மிகப் பெரிய தேசத் துரோக குற்றம் என்பதில் சந்தேகமில்லை. குற்றம் நிருபிக்கப்பட்டால் கொடுக்கப்படுகின்ற தண்டனையும் உயர்ந்த பட்ச தண்டனையாக இருக்கவேண்டும். மரண தண்டனையே விதித்தாலும் தவறில்லை. ஒரு நாட்டின் ரகசியங்களை எதிர் நாட்டுக்கு கொடுத்து தங்கள் நாட்டைக் காட்டி கொடுக்கின்றவர்கள் கொலை செய்வதைவிடக் கொடி குற்றத்தை செய்கிறார்கள் என்பதைப்பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்கமுடியாது. இவர்கள் ஒரு நாட்டின்




சமுதாயத்தையே கொலை செய்கிறவர்கள். ஒரு நாட்டு மக்களுடைய உழைப்பின் பலனை அந்நிய நாடுகளுக்கு அடகு வைக்கிறார்கள். இப்படிப்பட்ட மாபெரும் குற்றங்களை செய்கின்றவர்களுக்கு மரண தண்டனை அளிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

நாட்டுப் பற்று என்பது பேரம் பேசக்கூடிய விஷயமல்ல. ஒரு தனி நபரின் ஆசாபாசங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் விஷயமும் அல்ல. நாட்டுப் பற்று இல்லாதவன் அந்த நாட்டின் குடிமகனாக வாழும் தகுதியை இழந்தவனாகிறான். அவனுக்கு அனுதாபம் காட்டுவதும் ஆதரவு அளிப்பதும் சமுதாய பொறுப்புணர்ச்சியை புறக்கணிக்கிற செயலாகவே இருக்கும்.

### பாதுகாப்பு ஏற்பாடுகள்

நாற்பதாண்டுகளுக்கு முன் கம்ப்யூட்டர் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டபோது அது இப்போது பயன்படும காரியங்களுக்கெல்லாம் பயன்படும் என எவருமே கற்பனை கூட செய்து பார்த்திருக்க முடியாது. இன்றைய யுகம் கம்ப்யூட்டர் யுகமாகவே மாறியிருக்கிறது. மனித சிந்தனையை முடக்கிப் போட்டுவிடும் அளவிற்கு கம்ப்யூட்டர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

மனிதன் மட்டுமே செய்யக்கூடிய வேலைகள் என்று கருதப்பட்ட பல வேலைகளை இன்றைக்கு கம்ப்யூட்டர்கள் செய்து கொண்டிருக்கின்றன. என்னதான் காவலாளிகள் நியமித்தாலும் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. கம்ப்யூட்டர்களால் கண்காணிக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பழுதில்லாமலும் நம்பிக்கைக்குப் பாத்திரமான வகையில் செயல் பட்டுக் கொண்டிருக்கிறன.

இப்பொழுதெல்லாம் பாதுகாப்புப் பொறுப்பிற்கு நியமிக்கப் படும் மனிதர்கள் ஓடியாடித் திரிந்து பாதுகாப்பு வேலைகளை கவனிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# புரட்சிப் பிள்ளை!

**டெ**ல்லி...ஸ்ரீசக்தி டிராஸ்கர் விருது வழங்கும் விழா. அந்தப் பெண்ணின் பெயர் படிக்கப்பட்டவுடன் அவர் மேடையேறி அங்கிருந்த அப்போதைய பிரதமர் வாஜ்பாயைக் கும்பிட்டார். அடுத்த நொடி, யாரும் எதிர்பாராத சம்பவம். வாஜ்பாய் அந்தப் பெண்ணின் காலில் விழுந்து வணங்கினார்.

பிரதமர் காலில் விழுந்து வணங்கிய அந்தப் பெண் - சின்னப்பிள்ளை.

ஒரே நாளில் ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தையும் தன் பக்கம் திருப்பியவர். சுய உதவிக் குழுக்கள் மூலம் ஏராளமான பெண்கள் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளிவிளக்கு ஏற்றியவர்.

மதுரை மாவட்டம் சுள்ளந்திரி கிராமம்தான் சின்னப்பிள்ளை பிறந்த ஊர். அப்பா,பெரியாம்பாளை.அம்மா,பெருமி.தாழ்த்தப்பட்ட சமுதாய விவசாயக் கூலிகள்.

இவர்களுக்கு நான்கு வாரிசுகள். கடைசி வாரிசுதான் சின்னப்பிள்ளை. இவருக்கு மூன்று வயதிலிருக்கும்போது, அம்மா இறந்துவிட, மறுமணம் செய்துகொள்ளாமலே நான்கு பேரையும் பெரியாம்பாளை வளர்த்திருக்கிறார்.

வசதியில்லாததால் யாரையும் படிக்க வைக்க முடியவில்லை. நான்கு வாரிசுகளுக்கும் விவசாயக் கூலி வேலைதான். ஏழு வயதிலேயே சின்னப்பிள்ளைக்கு மாடு மேய்க்கும் வேலை.

### திருமணம்

பத்து வயதில் பெரிய மனுஷி; பன்னிரண்டு வயதில் திருமணம். கணவர் பெருமாள் - தாய்வழி உறவு. இவருக்கும் விவசாயத் தொழில்தான்.

இரண்டு குழந்தைகள் பிறந்த நிலையில் கணவருக்குத் தீராத வயிற்றுவலி. வேலைக்குச் செல்ல முடியாத நிலை. இந்தச் சூழலில் சின்னப்பிள்ளையின் தந்தையும் காலமாகிவிட, குடும்பச்சுமை சின்னப்பிள்ளையின் மீது.

அசரவில்லை. விவசாயக் கூலி வேலைக்குச் சென்றார். கடுமையாய் உழைத்தார். ஆனால், வருகிற கூலியெல்லாம் கணவரின் வைத்திய செலவுக்கே போனது.

### வர்க்கப் பார்வை

வேலைக்குச் செல்ல ஆரம்பித்து பிறகு, இவருக்குள் வர்க்கப் பார்வை தலைதூக்கியது. விவசாயக் கூலிகளின் சிக்கல்களை உணர்ந்தார். செய்த வேலைக்குச் சரியான கூலி கிடைக்காதது ஒரு பக்கமென்றால், இன்னொரு பக்கம் ஏராளமானோருக்கு வேலையில்லாத நிலை. இதைச் சரி செய்யவேண்டும் என்ற கோபமும், அந்த மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆதங்கமும் அவரை தினமும் துன்புறுத்தின. விளைவு...அவருக்குள் அதற்கான திட்டங்கள் தோன்றின.

நில உடைமையாளர்களைச் சந்தித்தார். ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் நிலத்துக்குத் தேவையான ஆட்களை காண்ட்ராக்ட் முறையில் மொத்தமாகப் பேசி, பலருக்கும் வேலையைப் பகிர்ந்தளித்தார். நிலவுடைமையாளர்களிடம் கண்டிப்பாகப் பேசி, கூலியை நியாயமாய் வாங்கிக் கொடுத்தார். வயதானவர்கள், ஊனமுற்றோர்கள் ஆகியோருக்கும் இவர் வேலை வழங்கத் தவறவில்லை. இதனால் மக்களுக்கு சின்னப்பிள்ளை மீது நம்பிக்கை வந்தது.

இந்த நேரத்தில்தான் மாதர் சங்கத்தினர் சிலர், மானியத்துடன் வீடு வாங்கித் தருவதாகக் கூறி வந்தனர். சின்னப்பிள்ளை தலைமையிலான விவசாயக் கூலிகளிடம் ஆயிரக்கணக்கில் பணத்தைக் கறந்தார்கள். ஆனால் கிடைத்தது வீடு அல்ல, ஏமாற்றம்தான்! பணம் கொடுத்தவர்களெல்லாம் சின்னப் பிள்ளை சொல்கிறாரே என்ற நம்பிக்கையில் கொடுத்தவர்கள். இது சின்னப்பிள்ளைக்குப் பெரிய உறுத்தலாயிற்று.



### சுய உதவி!

இந்த நிலையில்தான் தானம் அறக்கட்டளையின் தலைவர் வாசிமலை தனது குழுக்களுடன் சின்னப்பிள்ளையை அணுகி, கடன், சுய உதவிக் குழுக்கள் என பேசினார். ஏற்கனவே ஏற்பட்ட ஏமாற்றத்தால் சின்னப்பிள்ளைக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. தொடர்ந்து அவர்கள் விடாமல் பேசிக்கொண்டேயிருக்கவே, சிறிது சிறிதாக அவர்கள் மீது நம்பிக்கை வந்தது. ஆனால், மக்களிடம் சின்னப்பிள்ளையால் நம்பிக்கை ஏற்படுத்த முடியவில்லை. இதனால், பில்லுச்சேரி கிராமத்தில் முதலில் துவங்கப்பட்ட சுயஉதவிக் குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் பதினான்கு பேர் மட்டுமே தொடங்கின.

முதலில் பதினான்கு பேருக்குத் தலைவியாக இருந்த சின்னப்பிள்ளை, மூன்றே ஆண்டுகளில் முந்நூறு பேருக்குத் தலைவியானார். அடுத்த



மூன்றாண்டுகளில் அது ஐந்தாயிரம் ஆனது. இவரது கடின உழைப்பு இவரை ஏழு மாநில களஞ்சிய சுய உதவிக் குழுக்கள் அமைப்பின் செயற்குழு உறுப்பினராக்கியது. இந்தப் பொறுப்பு ஏழாண்டுகளுக்கு. இப்போது, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா மாநிலங்களைச் சேர்ந்த நூற்றுநாற்பது கூட்டமைப்புகளுக்கு இவர்தான் தலைவி. இந்தக் கூட்டமைப்புகளின் உறுப்பினர் எண்ணிக்கை மூன்று லட்சம்.

இவ்வளவு பெரிய பொறுப்பு வகித்தாலும் கூட, இவருக்கு இன்னும் எழுதப் படிக்கத் தெரியாது என்பது தான் ஆச்சரியம். எப்படிச் சமாளிக்கிறாராம்? வாசிக்கச் சொல்லி உன்னிப்பா கவனிச்சிக்கிடறேன். கணக்கு வழக்கு பார்க்க படிச்ச புள்ளைகளை வேலைக்கு வைச்சிருக்கேன். செக்கில் மட்டும்தான் நான் கையெழுத்துப் போடுவேன்...என்கிறார். இவருக்கு இந்தியா முழுக்க பயணம் செய்த அனுபவமுண்டு.

தனக்குக் கிடைக்கும் விருதுகள், பணம் எதையும் தனக்காக இவர் வைத்துக் கொள்வதில்லை. தனக்குக் கிடைத்த பரிசுப் பணத்தில் ஒரு லட்சத்து அறுபதாயிரத்தைக் கொண்டு ஓர் அறக்கட்டளையை அமைத்திருக்கிறார். இதிலிருந்து கிடைக்கும் வட்டி, சிறுசிறுமகளிர் சுய உதவிக் குழுக்களின் தலைவிகளின் மருத்துவச் செலவுகளுக்காகப் பயன்படுகின்றது.

### சாதனை

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சாதித்ததென்ன? இவரிடமிருந்து பணிவாக பதில் வருகிறது. கந்து வட்டியை அடியோடு ஒழிச்சுட்டோம்ல. நூறு ரூபாய் கடன் வாங்கிட்டு அதுக்கு வட்டியாக ஒரு மூட்டை நெல் அளந்து கொடுத்த அந்தக் காலம் மலையேறிடுச்சி. இப்ப எங்களுக்குள்ளேயே கடன் கொடுத்துக்கிறதாலே அநியாய வட்டி என்கிற பேச்சுக்கே இடமில்லே...இது தவிர, மூணு வேளையும் வயிறார பட்டினியில்லாம எங்க பெண்கள் சாப்பிடறாங்க...

தவிர, எங்க குழுக்களில் சுய தொழிலை அறிமுகப்படுத்தி விரிவுபடுத்துக்கிட்டு வர்றோம்...

பெரிய தலைவியாகியும் வசதியாக வாழ வாய்ப்பிருந்தும் கூட, சின்னப் பிள்ளை இன்னும் கிராமத்திலேயே தான் இருக்கிறார். தலித்துகளுக்கு வழங்கப்படும் ஒரே அறை கொண்ட சிறிய வீடுதான் இவர் குடியிருப்பது. அதைப் பெறவே இவர் போராட வேண்டியிருந்ததாம். இந்த வீட்டிலிருந்தான் இவரது மக்கள் பணி தொடர்ந்து நடக்கிறது. ரோடு இல்லை...ரேஷன் கார்டு இல்லை...விளக்கு எரியவில்லை...என்று மக்கள் குறைகளுக்காக தொடர்ந்து அதிகாரிகளைச் சந்திக்கிறார்.



எங்க சனங்க பாவம்ங்க...அவங்களுக்கு ஏதாவது செஞ்சுக் கொடுங்க...என்ற இவரது வெள்ளந்தியான பேச்சை அதிகாரிகளால் தட்ட முடிவதில்லை.

வாழ்க்கையிலே நம்மால அடுத்தவர்களுக்குப் பயன் இருக்கணும். நல்லது செஞ்சோம்கிற திருப்தி இருக்கணும். இதுதான் மனுஷ ஜென்மத்தின் முழுமையா இருக்கமுடியும். என்கிறார் அந்தக் கறுப்பு வைரம்.

# பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி!

**ஜின்னா** இறந்த பிறகு, பாகிஸ்தானில் குழப்பம் நிலவியது. மக்களிடம் ஓரளவு செல்வாக்கு பெற்றிருந்த லியாகத் அலிகான், பிரதமராகப் பதவி ஏற்றார். அவர் ஆட்சி அதிக காலம் நீடிக்கவில்லை. பாகிஸ்தானில் முழுமையான ஜனநாயகத்தைக் கொண்டுவர விரும்பிய அவர், சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிறகு, ஒருவர் பின் ஒருவராக பலர் பிரதமர்களாக வந்தார்கள். எவரும் அதிக காலம் ஆட்சியில் நீடிக்க முடியவில்லை. இதற்கிடையே 1956ஆம் ஆண்டு, பாகிஸ்தான் குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது.



தாஷ்கண்ட் நகரில் சாஸ்திரி - அயூப்கான் சந்திப்பு.

### இராணுவப் புரட்சி

1958ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி இராணுவ தளபதி அயூப்கான் புரட்சி நடத்தி, ஆட்சியை கைப்பற்றிக் கொண்டார்.

முகமது அலி போக்ரா, சவுத்திரி முகமது அலி ஆகியோர் பிரதமர்களாக இருந்தபோது, ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு என்னிடம் கூறினார்கள். அப்போது நான் அதற்கு சம்மதிக்கவில்லை. பாகிஸ்தான், ஜனநாயக நாடாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பியதே அதற்குக் காரணம். இப்போதுள்ள நிலைமையில், பாகிஸ்தானுக்கு ஏற்றது இராணுவ ஆட்சிதான் என்ற முடிவுக்கு வந்தேன். அதன் விளைவாக ஆட்சியை கைப்பற்றினேன் என்று அயூப்கான் அறிவித்தார்.

அயூப்கான் சர்வாதிகாரியாக இருந்தபோதிலும் நிலையான ஆட்சியைத் தந்தார். அயூப்கான் அமைத்த மந்திரிசபையில் பூட்டோ இடம் பெற்றார். வெளிவிவகார மந்திரியாக இருந்த அவர், ஐ.நா.சபை கூட்டங்களில் அடிக்கடி பங்கு கொண்டு, இந்தியாவைத் தாக்கிப் பேசுவது வழக்கம். இதனால், பாகிஸ்தானில், பூட்டோவின் செல்வாக்கு உயர்ந்தது.

### இந்தியா - பாகிஸ்தான் போர்

1965ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி இந்தியப் பிரதமராக லால்பகதூர் சாஸ்திரி இருந்தபோது, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் போர் மூண்டது. அதில் பாகிஸ்தான் தோல்வியைச் சந்தித்தது.

எனினும், ஐ.நா.சபையின் தலையீட்டால் செப்டெம்பர் 22ஆம் திகதி போர் நிறுத்தம் ஏற்பட்டது. ரஷ்யாவின் முயற்சியின் பேரில், பிரதமர் சாஸ்திரியும், அயூப்கானும் 1966 ஜனவரி 3ஆம் திகதி ரஷ்யாவில் உள்ள தாஷ்கண்ட் நகரில் சந்தித்துப் பேசினர். அதில் சமரச உடன்பாடு ஏற்பட்டு, ஜனவரி 10ஆம் திகதி இரவு ஒப்பந்தத்தில் சாஸ்திரியும், அயூப்கானும் கையெழுத்திட்டனர்.

சற்றும் எதிர்பாராதவிதமாக, ஒப்பந்தம் கையெழுத்தான சில மணி நேரத்தில் (11ஆம் திகதி அதிகாலை) சாஸ்திரி மரணம் அடைந்தார்.

### செல்வாக்கு சரிந்தது

ஜின்னாவுக்குப் பிறகு, பாகிஸ்தானில் பலம் மிக்க தலைவராகத் திகழ்ந்த அயூப்கானின் செல்வாக்கு, 1965 போருக்குப் பின் சரிந்தது. அவர் ஆட்சிக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்தன.

அயூப்கானுக்கு வலது கை போல செயல்பட்டு வந்த பூட்டோவும், அவருக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். 1965 யுத்தத்தில் பாகிஸ்தான் தோற்றத்துக்கு அயூப்கான்தான் காரணம். தாஷ்கண்ட் ஒப்பந்தம், இந்தியாவுக்கு சாதகமானது. அதில் அயூப்கான் கையெழுத்திட்டதன் மூலம், பாகிஸ்தானுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று போர்க்கொடி உயர்த்தினார்.

அயூப்கானும், அவர் குடும்பத்தினரும் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்து விட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. அயூப்கானுக்கு ஆதரவாக இருந்த இராணுவ தளபதிகளும் அவரை கைவிட்டனர்.

### இராஜினாமா

இப்படி பலமுனைத் தாக்குதல்கள் வந்ததால், அயூப்கான் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க முடியவில்லை. 1969 மார்ச் 26ஆம் திகதி பதவியை ராஜினாமா செய்தார். புதிய அதிபராக தளபதி யாகியாகான் பதவி ஏற்றார்.

அயூப்கான் பதவியை விட்டு விலகினாலும், பாகிஸ்தானில் நீண்ட காலம் (11ஆண்டுகள்) ஆட்சி நடத்தியவர் அவர்தான்.

### வங்களாதேசம் உதயம்

பாகிஸ்தானில், நீண்ட இடைவெளிக்குப் பின் பொதுத்தேர்தல் 1970களில் நடைபெற்றது. மொத்தம் உள்ள 313 இடங்களில் 167 இடங்களை கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சி கைப்பற்றியது. மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவரான பூட்டோவிக் மக்கள் கட்சிக்கு 88 இடங்களே கிடைத்தன.

மெஜாரிட்டி இடங்களில் வெற்றி பெற்ற அவாமி லீக் கட்சியின் தலைவரான முஜிபுர் ரஹ்மான்தான், பிரதமர் ஆக வேண்டும். ஆனால் அவர் கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர். அதனால், அவரை பிரதமர் ஆக்க பூட்டோவும், மேற்கு பாகிஸ்தானில் இதர தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

(மேற்கு பாகிஸ்தானும், கிழக்கு பாகிஸ்தானும் மதத்தால் ஒன்றுபட்டிருந்தாலும், மொழியால் வேறுபட்டிருந்தன. மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உருது, பஞ்சாபி ஆகிய மொழிகளை பேசுபவர்கள். கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் வங்காளி மொழி பேசுகிறவர்கள்.)

அப்போது பாகிஸ்தான் அதிபராக (ராணுவ சர்வாதிகாரியாக) இருந்தவர் யாகியாகான். பூட்டோவும், நீங்களும் சேர்ந்து மந்திரிசபை அமையுங்கள் என்று அவர் ரகிமானுக்கு யோசனை கூறினார். ஆனால், அதற்கு ரஹ்மான் ஒப்புக்கொள்ளவில்லை.

### கைது

திடீரென்று, மார்ச் 26ஆம் திகதி நள்ளிரவு ரஹ்மானும், அவருடைய ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். கிழக்கு பாகிஸ்தானில் ராணுவத்தினர் அட்டூழியங்களில் ஈடுபட்டனர். ரஹ்மானின் ஆதரவாளர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

வங்காள தேசத்தில் இருந்து இந்தியாவுக்கு லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக ஓடிவந்தனர். ஜூன் மாதத்தில் இந்த எண்ணிக்கை இரு கோடியைத் தொட்டது. இந்த அகதிகள் அசாம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

### போர் மூண்டது

அகதிகள் பிரச்சினை காரணமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் உறவு சீர்கேடு அடைந்தது. இந்நிலையில், 1971 டிசம்பர் 3ஆம் திகதி மாலை இந்தியா மீது பாகிஸ்தான் திடீரென்று தாக்குதல் நடத்தியது. அமிர்தசரஸ், பதன்கோட், ஸ்ரீநகர், ஜோத்பூர், ஜாம்நகர், அம்பாலா, ஆக்ரா ஆகிய நகரங்களில் உள்ள விமான தளங்கள் மீது பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசின.

இதைத்தொடர்ந்து, இந்தியா - பாகிஸ்தான் போர் மூண்டது.



கிழக்கு பாகிஸ்தானில், போரில் தோற்ற பாகிஸ்தான் தளபதி நியாஜி சரணாகதி பத்திரத்தில் கையெழுத்திடுகிறார்

மேற்கு பாகிஸ்தானில் உள்ள சர்கோதா, முரித் மியான்லால், ஹார் முதலிய இடங்களில் உள்ள விமான தளங்கள் மீது இந்திய விமானங்கள் குண்டு வீசின. லாகூர் அருகில் உள்ள விமானத் தளங்கள் மீது விமானத் தாக்குதல் நடந்தது.

இந்தத் தாக்குதலால், பாகிஸ்தானின் ஏராளமான போர் விமானங்கள் தரையிலேயே அழிக்கப்பட்டன.

### கிழக்கு முனையில் போர்

இந்தியாவின் கவனம் முழுவதும் மேற்கு எல்லையிலும், காஷ்மீர் பகுதியிலும்தான் இருக்கும். கிழக்குப் பாகிஸ்தானில் அது தாக்குதல் நடத்தாது என்று பாகிஸ்தான் சர்வாதிகாரி யாகியாகான் நினைத்திருந்தார். அது தப்புக்கணக்காகியது.

கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள டாக்கா விமான தளத்தில் 20 போர் விமானங்களை பாகிஸ்தான் நிறுத்தி வைத்திருந்தது. இந்திய விமானங்கள் குண்டு வீசி இந்த 20 விமானங்களையும் அழித்தன.

விக்ரந்த் என்ற இந்தியப் போர்க்கப்பலைத் தகர்ப்பதற்காக கராச்சியில் இருந்து புறப்பட்டு வந்த காஜி என்ற பெயருடைய பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பலை (2,500 டன் எடையுள்ளது) இந்திய கப்பல் படை கண்டுபிடித்து அழித்தது. பாகிஸ்தான் கப்பல்கள் கிழக்கு பாகிஸ்தானுக்கு வரமுடியாதபடி முற்றுகையிடப்பட்டன.

### பாக்.ராணுவம் சரணாகதி

இந்த சமயத்தில் பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். முஜிபுர் ரஹ்மானின் ஆதரவாளர்கள் முக்திவாகினி என்ற படையை அமைத்து பாகிஸ்தான் ராணுவத்துடன் போரிட்டனர்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதென்று இந்தியா முடிவு செய்தது.

இந்திய இராணுவ வீரர்கள் விமானங்களில் சென்று கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவைச் சுற்றிலும் பாரசூட் மூலம் குதித்தனர்.

இந்திய இராணுவத்தினரும், முக்திவாகினி படையினரும், டாக்காவைச் சுற்றி முற்றுகையிட்டனர்.

தளபதி நியாஜி தலைமையில் டாக்காவில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர் இருந்தனர். இந்திய வீரர்களுடன் போரிட்டால் பாகிஸ்தான் படைகள் அடியோடு அழிவது நிச்சயம் என்பதை நியாஜி புரிந்து கொண்டார். டிசம்பர் 16ஆம் திகதி மாலை 4.31 மணிக்கு இந்திய இராணுவத்திடம் சரண் அடைந்தார்.

அதே சமயம், மேற்கு முனையிலும், பாகிஸ்தான் இராணுவத்துக்கு அடிமேல் அடி கிடைத்தது. இன்னும் சில மணி நேரத்தில் லாகூரை இந்திய இராணுவம் கைப்பற்றிவிடும் நிலைமை ஏற்பட்டது. அதனால் போர் நிறுத்தத்துக்கும் யாகியாகான் சம்மதித்தார்.

டிசம்பர் 17ஆம் திகதி மேற்கு முனையிலும் போர் ஓய்ந்தது.

### வங்காளதேசம் உதயம்

கிழக்குப் பாகிஸ்தான் வங்காளதேசம் என்ற பெயரில் தனி சுதந்திர நாடாகியது.

சிறையில் இருந்த முஜிபுர் ரஹ்மான் விடுதலையாகி வங்காள தேசத்தின் அதிபரானார். பாகிஸ்தானின் பிரதமராகப் பூட்டோ பதவி ஏற்றார்

---




**வி**மானப்படைத் தளபதி பேசியதும் மறு பக்கத்தில் எந்த சத்தமும் இல்லை. பொது இராணுவத் தொலைபேசியாதலால் அனைத்து வீரர்களும் இதனைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் தளபதி இறக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டதும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஜனாதிபதி ஜோன்சனோ செய்வதறியாது திகைத்து நின்றார். அமெரிக்காவிலிருந்து நேரடியாக ஜனாதிபதியே இராணுவ பொலிஸாருக்கு கட்டளையிட்டார் உடனே ஜனாதிபதி ஜோன்சனை இராணுவச் சட்டத்தின் படி கைது செய்யும் படி கட்டளையிட்டார். கட்டளையிட்ட சில நிமிடங்களிளேயே அவர் கைது செய்யப்பட்டார். அங்கு நடப்பவைகளை விமானப்படைத் தளபதி மூலம் அறிந்து கொண்ட ஜனாதிபதி இன்னுமொரு ஜனாபதியை நியமிக்கும் வரை நீங்கள் அங்கு ஆட்சியாளராக இருங்கள் உங்கள் இராஜினாமாவை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று பதிலளித்து அனுப்பினார். விமானப்படைத் தளபதியை வைத்துக் கொண்டே இராணுவத் தொலைபேசியில் இன்னொருவரை நியமிக்கும் வரை வியட்நாமில் இராணுவ ஆட்சியாளராக



விமானப்படைத் தளபதி இருப்பார் என்று கூறினார். மீண்டும் தான் வியட்நாமுக்கு போகவேண்டுமே என்று எண்ணிக் கொண்டு உலங்கு வானூர்தியில் ஏறிச் சென்றார். அவர் புறப்படும் போது காலநிலை மிகவும் மோசமாகவே இருந்தது. எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு உலங்கு வானூர்தியில் ஏறிச் சென்ற விமானப்படைத் தளபதி வியட்நாமில் காலடி வைக்கவில்லை. காலநிலைக் கோளாறினால் அவரின் வானூர்தி சேதம் அடைந்து விபத்துக்குள்ளானதாகவே இன்னும் தகவல் இருக்கிறது. இன்றுவரை அவருக்கு என்ன நடந்து என்று யாராலும் அனுமானிக்க முடியவில்லை. அவர் சென்ற வானூர்தி பற்றியும் எந்தத் தகவலும் இல்லை. வியட்நாமிற்கு அவர் வரவில்லை என்பதால் அவர் இறந்து விட்டார் என்று எல்லோராலும் நம்பப்பட்டது. விமானப் படைத் தளபதி காணாமல் போனதும் வியட்நாமில் ஆட்சி அதிகாரம் நிலைகுலைந்தது அமெரிக்க இராணுவத்தினரை வழி நடத்த பொறுப்பான அதிகாரி ஒருவர் இல்லாமையால் தங்கள் இஷ்டத்திற்கு அவர்கள் தங்கள் வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் போர் நடவடிக்கைகளை கையாள ஒருவரும் இருக்க்வில்லை. அதனால் அமெரிக்க இராணுவம் போரினை சிறிது காலம் தொடரமுடியாமல் இருந்தது. பொறுப்பாக யாரை நியமிப்பது என்று அமெரிக்க ஜனாதிபதி யோசித்துக் கொண்டிருந்தார். இனி வியட்நாமில் இராணுவ ஆட்சியைத்தான் தொடரவேண்டும் என்றும் அவர் முடிவு செய்தார்.

அதற்கு தகுதியான யாரைத் தெரிவு செய்வது என்று யோசனையில் இருந்தபோது தான் அவருக்கு விமானப்படைத் தளபதியின் மெய்ப்பாதுகாவலர்களின் தலைவரான ரிக்கின் ஞாபகம் வந்தது. ரிக்கினை சிறிது காலம் இன்னொருவரை நியமிக்கும் வரை ஆட்சிப் பொறுப்பில் இருத்தலாம் என்று அவர் முடிவு செய்து ரிக்கிடமும் இதனை தெரிவித்தார். முதலில் நான் இந்த பொறுப்பிற்கு தகுதியானவனா என்று கேட்ட ரிக் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பின் ஆம் என தலையசைத்தான். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ரிக் விமானப்படைத் தளபதியை தேடுவதிலேயே தனது கவனத்தை செலுத்தியிருந்தான். காரணம் அவன் அவர் மேல் அளவற்ற மரியாதையும் அன்பும் கொண்டிருந்தான். அவரின் இராணுவத்திறமைகள் மேல் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்த அவன் தனது இராணுவத்தையும் அவரின் வழியிலேயே செலுத்த விரும்பினார். ஆகையால் இயன்ற வரை போர் நடவடிக்கைகளை தவிர்த்து வந்தான். விமானப்படையில் இணைந்து கொண்ட ரிக்



தனது உள்ளார்ந்த திறமைகளை வெளிக்காட்டியதன் மூலம் சிறிது காலத்திலேயே உயர் பதவிக்கு வந்தான். விமானியான அவன் விமானியாக இருந்து சில காலத்தில் விசேட பயிற்சிகளை பெற்று போர் விமானியாகி பின் விமானப்படையில் முக்கிய துணைத் தளபதியாகியிருந்தான். சில முக்கிய இராணுவ வியூகங்கள் தெரிந்த அவன் மிகவும் நுணுக்கமாகவே எல்லா படையினரையும் கையாள்வது வழமை.

போர் முஸ்தீபுகளை சில காலம் ஒதுக்கி வைத்து விட்டு இராணுவத்தினரை பலப்படுத்திக் கொண்டிருந்தான். இராணுவத்தினரை மக்களுடன் சகஜமாக பழக விட்டுக்கொண்டிருந்தான். போர்த் தந்திரங்களின் ஒன்றான பொதுமக்களின் ஆதரவைத்தேடுவதிலேயே இவனின் செயல் வெகுவாக இருந்தது. பொது மக்களும் ஆரம்பத்தில் பயப்பட்டாலும் பின்பு இவர்களின் நடவடிக்கைகளை பார்த்து அவர்களும் இராணுவத்தினரோடு நட்புறவை வளர்த்துக் கொள்ள முனைந்தார்கள். இராணுவத்தினரை கொண்டு நடத்தும் வழிமுறையை தான் விமானப்படைத் தளபதியிடம்தான் கற்றுக் கொண்டதாக அடிக்கடி கூறிக் கொள்வான்.

*(தொடரும்)*



நிலையெங்கும் காணவில்லை எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !
நின்பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !

- சுப்பிரமணிய பாரதியார்

# ஆமாம், இல்லை!

**கௌரி** மிகவும் புத்திசாலியான பெண். ஆனால், அவளுக்கு வாய்த்த கணவன் சரியான முட்டாள். தன் அம்மாவின் ஊருக்கு, முட்டாளான கணவன் முக்கிய வேலையாகச் செல்ல இருந்தது.

"உங்க மாமியார் வீட்டிற்குப் போய் ஏதாவது முட்டாள்தனமாகப் பேசி என் மானத்தை வாங்கிவிடாதீர்கள்," என்றாள் கௌரி.

"நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்" என்றான் அவன்.

"அவ்வளவு தூரம் போய்விட்டு என் அம்மா வீட்டுக்குப் போகவில்லை என்றால் நன்றாக இருக்காது. நான் சொல்கின்றபடி செய்யுங்கள். யார் என்ன கேள்வி கேட்டாலும் ஆமாம், இல்லை என்ற இரண்டு பதில்களைத் தவிர, வேறு எதுவும் பேசாதீர்கள். வேறு ஏதாவது பேசினால்தான் உங்கள் முட்டாள்தனம் வெளிப்படும். கவனமாக இருங்கள், என்று அறிவுரை சொன்னாள் கௌரி. அப்படியே நடப்பதாகச் சொல்லிவிட்டு மாமியார் வீட்டிற்குப் புறப்பட்டான் அவள் கணவன்.

திடீரென்று தன் வீட்டிற்கு வந்த மருமகனைப் பார்த்து திகைத்தாள் மாமியார். வழியில் ஓய்வு எடுக்காமல் அவன் வந்ததை அறியாத அவள், அவனின் அழுக்கடைந்த தோற்றத்தைக் கண்டு ஏதோ சோகச் செய்தியுடன் வந்திருக்கிறான் என்று நினைத்தாள்.



மருமகனை வரவேற்ற அவள், "என்ன நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

தன் மனைவி சொன்ன அறிவுரையை அப்படியே கடைப்பிடிக்க நினைத்தான் அவன். "ஆமாம்!" என்று பதில் தந்தான்.

"என் மகள் நலந்தானே!" என்று அடுத்த கேள்வியைக் கேட்டாள் அவள்.

"இல்லை!" என்று பதில் தந்தான் அவன்.

"உடம்பு சரியில்லையா?" என்று

பாப்பா முரசு சிறுகதை

கேட்டாள் அவள்.

வரிசை முறை மாறாத அவன்" இந்தக் கேள்விக்கு, "ஆமாம்!" என்று பதில் சொன்னான்.

"மருத்துவர் வந்து பார்த்ததனால் ஏதேனும் பயன் ஏற்பட்டதா?" என்ற அவளின் அடுத்த கேள்விக்கு "இல்லை!" என்றான். என்னவோ ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. அதனால் தான் மருமகன் எதையும் சொல்லத் தயங்கிச் சுருக்கமாகப் பேசுகிறான் என்று நினைத்தாள் அவள்.

"தயங்காமல் சொல்லுங்கள், என் மகள் இறந்து விட்டாளா?" என்று கேட்டாள் அவள்.

இந்தத் தடவையும் வரிசை முறை மாறாமல், "ஆமாம்!" என்று பதில் சொன்னான் மருமகன்.

"ஐயோ! மகளே! என்னை விட்டுப் போய்விட்டாயா? உன் முகத்தைக் கூடப் பார்க்கவில்லையே..." என்று அழுது புலம்பினாள் அவன் மாமியார். அழுகுரலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் அங்கே கூடிவிட்டனர்.

வெளியே சென்றிருந்த மாமனார் வீட்டிற்குள் வந்தார். நடந்ததை எல்லாம் சொல்லி அழுதாள் மாமியார். மருமகனோ ஏதும் பேசாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களுக்கு முன் தன் மகளிடமிருந்து கடிதம் வந்திருப்பதை அறிந்த அவர், மருமகனிடம், "உண்மையைச் சொல்லுங்கள். என் மகள் இறந்து விட்டாளா?" என்று கேட்டார்.

இப்பொழுது, "இல்லை!" என்று சொன்னான் அவன்.

இதைக் கேட்டதும் எல்லாருக்கும் உயிர் வந்தது.

"நான் முன்னர் கேட்ட போது என் மகள் இறந்துவிட்டாள் என்று எதற்காகச் சொன்னீர்கள்?" என்று கேட்டாள் மாமியார்.

"ஆமாம்!" என்று பதில் தந்தான் அவன்.

அப்பொழுது தான் அவர்களுக்குத் தங்கள் மருமகன் எதையும் புரிந்து கொள்ளாத மூடன் என்பது புரிந்தது. ஒருபுறம் தமது மகள் இறக்கவில்லை என்று ஆறுதல் அடைந்தாலும், மறுபுறம் இந்த முட்டாளுடன் எப்படி தங்கள் மகள் குடும்பம் நடத்துகிறாள் என்பதை நினைக்கும்போது அழுகை அழுகையாக வந்தது.

# சிறந்த வண்ணத்திற்கு பரிசு தரும் வண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10.10.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 664**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 662

**பரிசுக்குரியவர்:**
**ஆகாஷ், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். துர்க்காதேவி, இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | டி. ஆர். ஆன் டிலுக்ஷி, நல்லாயன் அரசினர் தமிழ் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 |
| கே. ஹரிணி, இராகலை த.ம.வி, ஆல்கரலோயா. | ப. நிரோஜன், இல. 84, பிரதான வீதி, மன்னார். |
| கே. பிரசாந்தி, 89, பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை | ஜெ. ரனுசியா, தரம் - 06, த. ம. மகா வித்தியாலயம், பதுளை. |
| புஹாரி முன்ஸிபா, நொக்ஸ் வீதி, மூதூர் - 05 | த. திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம். மன்னார். |
| கௌரீசன், தரம் 5A, கொழும்பு இந்து மத்திய வித்தியாலயம், கொழும்பு - 13 | சாஜிதா நஸார், தரம் - 3A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12 |

# ஆத்திசூடி

## மண் பறித்து உண்ணேல்

நீ பிறருடைய நிலத்தை வஞ்சகமாக அபகரித்து அந்நிலத்தில் இருந்து வரும் வருவாயில் வாழாதே

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# பச்சைக் கிளியே வாவா!

சிறுமி : பச்சைக்
கிளியே வாவா!
பறந்து ஓடி வாவா!
இச்சை யாக நீயே
என்னிடத்தில் பேச வா!
கிளி : உன்னிடத்தில்
வந்தால்
உடனே என்னை நீயே
சின்னக் கூண்டில்
அடைப்பாய்!
சிறகை வெட்டி எடுப்பாய்!
சிறுமி : கூண்டில்
அடைக்க மாட்டேன்
கொடுமை செய்ய மாட்டேன்
வேண்டி உன்னை அன்பாய்
வீட்டில் வளர்த்து வருவேன்!
கிளி : மனித நேய மில்லா
மனிதர் இடத்தில் வளர
இனிது விரும்ப மாட்டேன்!
எனது இனத்தோ(டு) இருப்பேன்!



# அதிசய உலகம்



## குட்டி நகரம் வத்திக்கான்!

**உ**லகிலேயே சுதந்திரமடைந்த மிகச் சிறிய நாடு வத்திக்கான். இதன் பரப்பளவு 0.45 சதுர கிலோ மீட்டர். 1929ஆம் ஆண்டு இத்தாலிய அரசு வத்திக்கானுக்கு சுதந்திரம் கொடுத்தது. வத்திக்கானில் புகழ்பெற்ற செயின்ட் பீட்டர்ஸ் ஆலயமும், வத்திக்கான் அரண்மனையும், போப் ஆண்டவரின் இல்லமும் உள்ளன. அந்நாட்டிற்கென்று தனிக் கொடி, தபால் நிலையம், டெலிபோன் மற்றும் ரேடியோ நிலையங்கள் உள்ளன.

## அடர்!



**அ**டர் என்பது ஐரோப்பாவில் காணப்படும் ஒரு வகையான கட்டு விரியன். கொடிய விஷத் தன்மை கொண்டது. இதன் உடல் முழுவதும் 'ங' போன்ற அடையாளமும் தலையில் 'ஙீ' மார்க்கும் காணப்படும்.

இவை தீண்டப்பட்டால் கொடூரமாகச் சீறும். பல்லி, ஓணான், எலிகள், புழுக்கள் போன்றவைகளை உண்டு வாழும். மண் வாசனையைக் கொண்டு தன் இரையை அருகில் சென்று தன் நாக்கினால் கவ்விக் கொள்ளும். இது தன் வாயில் உற்பத்தி செய்யும் விஷத்தை தன் கீழ் பற்கள் மூலம் இரையின் உடலில் ஊசியைப் போல் செலுத்தி அவைகளைக் கொன்று தின்றுவிடும். இது மனிதர்களைக் கடித்தால் உடலில் மிகுந்த வலி, வீக்கம் மற்றும் நிற மாற்றம் ஏற்படும். இருப்பினும் இதன் கடியால் உயிரிழப்பு ஏற்படுவது மிகவும் குறைவு.

# சில விடுகதைகள்

1. சிறுத்தவர் பருத்தால் சிதறி வெடிப்பான் - அவன் யார்?
2. தொட்டால் ஒட்டிக் கொள்வான் துண்டித்தால் விலகிக் கொள்வான் - அவன் யார்?
3. தலையில் மரம் சுமந்தவன் தாவி ஓடுவதில் கில்லாடி அவன் யார்?
4. விழுந்தால் உடைந்து விடுபவன் பலருக்கும் விருப்ப உணவு - அவன் யார்?
5. செம்பட்டை ராணிக்கு வெண் சிப்பாய்கள் காவல் - அவர்கள் யார்?
6. விளக்கைச் சுமந்தபடி விடிய விடிய பயணம் - அவன் யார்?
7. எட்டத்தில் இருக்குது இனிப்புக் கலசம் கிட்டப்போனால் சிப்பாய்கள் படையெடுப்பு - அது என்ன?
8. அடிபட்டவன் அழுதால் அனைவருக்கும் ஆனந்தம் - அவன் யார்?
9. வாலுள்ளவன் வானுயரப் பறக்கிறான் - அவன் யார்?
10. தள்ளாடுவான் தடுமாறுவான் ஆனாலும் போகுமிடம் கொண்டு சேர்ப்பான் - அவன் யார்?

**விடைகள்**
1. பலூன்
2. மின்சாரம்
3. மான்
4. முட்டை
5. நாக்கு - பற்கள்
6. மின்மினிப்பூச்சி
7. தேன் கூடு - தேனீக்கள்
8. மத்தளம்
9. பட்டம்
10. பரிசல்

# தகவல் பெட்டி

# காரமான சாதனை



**மிகக்** காரமான அதிகளவு மிளகாய்களை ஒரு நிமிடத்தில் தின்று சாதனை படைத்தவர் மார்க் எஸ் அலன் என்பவராவார். 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி 11 ஜலப்பினோ ரக மிளகாய்களை ஒரு நிமிடத்தில் தின்று சாதனை படைத்தார். ஆனால் இவருடைய சாதனையை அவுஸ்திரேலியரான இஸ்ருவர்ட் ரொஸ் என்பவர் முடியடித்தார். 2005ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி 15 மிளகாய்களை ஒரு நிமிடத்தில் தின்று இவர் புதிய சாதனை ஏற்படுத்தினார்.

# சமநிலையும் சாதனையும்



**மு**கத்தில் அதிகூடிய சிறிய கரண்டிகளை சமநிலையில் வைத்து கிம் ஜோன்ஸ்ரன் என்ற அமெரிக்கர் 2004ஆம் ஆண்டு மே 28ஆம் திகதி கலிபோர்னியாவில் இந்தச் சாதனையைப் படைத்தார். 30 நிமிடங்களுக்கு இந்த, 15 சிறு கரண்டிகளையும் நிலத்தில் விழ விடாது முகத்தில் சமநிலையில் வைத்துக் கொண்டார். ஒவ்வொரு காதிலும் ஒன்று ஒவ்வொரு கன்னத்திலும் தலா இரண்டு, நாடியில் மூன்று, உதடுகளில் இரண்டு, மூக்கில் ஒன்று, நெற்றியில் மூன்று என்று இந்த 15 கரண்டிகளையும் முகத்தில் தாங்கி சாதனை படைத்தார்.

# சீட்டுக் கோபுரம்



**சீ**ட்டுக் கட்டுகள் வெறுமனே சீட்டாட மட்டும்தான் பயன்படுமென்று நினைத்துக் கொண்டீர்களா? பிரையன் பேர்க் என்ற அமெரிக்கர், இந்தச் சீட்டுக் கார்ட்டுகளைப் (அட்டைகளை) பயன்படுத்தி உலகிலேயே மிகப் பெரிய கோபுரமொன்றினை நிர்மாணித்தார். 13 அடி 10 அங்குலம் 11 அடி 10 அங்குலம் 8 அடி 7 அங்குலம் அமைப்புக் கொண்ட கோபுரம் ஒன்றை 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி அவர் நிர்மாணித்தார். அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள வால்ற் டிஸ்னி உலகச் சிறுவர் கண்காட்சி மையத்தில் நிர்மானிக்கப்பட்ட இந்த சீட்டுக்கார்ட் கோபுரத்தை இப்போதும் பார்வையிடலாம். இதற்கு அவர் ஓர் இலட்சத்து 62 ஆயிரம் சீட்டுக் கார்ட்டுகளைப் பயன்படுத்தினார். அதிக மாடிகளைக் கொண்ட கோபுர மொன்றினை 1999ஆம் ஆண்டு நவம்பர் ஆறாம் திகதி நிர்மாணித்தார். 25 அடி 3 அங்குலம் உயரமான இந்த கோபுரத்தில் 131 மாடிகள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

# நிறம் மாறும் டொல்பின்!

**உ**லகிலேயே மிக வர்ணமயமான டொல்பின் ரக மீன்கள் 'சீன இளஞ்சிவப்பு' டொல்பின்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை இயற்கையாகவே அந்த நிறத்தைக் கொண்டவை அல்ல. பிறக்கும் போது கறுப்பாகவும் சில காலம் சென்ற பின்னர் இளம் நரை நிறத்திலும் இறுதியில் இளஞ்சிவப்பு நிறமாகவும் மாற்றம் பெற்றவை. இவற்றின் தோல்ப் பகுதிக்கு அடியிலுள்ள இரத்த நாளங்கள் அதன் உஷ்ண நிலையை சீரமைப்பதற்கு உதவிய காரணத்தினாலேயே இந்த நிறமாற்றம் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.



தேஜாஸ்ரீ



# நம். 1 பிரியங்கா! நம். 2 பிபாஷா!!

ரொம்பப் போரடிக்கும் போது பிரபல பத்திரிகைகள் இந்த மாதிரி ஷோக்கான கருத்துக் கணிப்பில் இறங்கிவிடும்.

பிரிட்டனை மையமாகக் கொண்டு வெளிவரும் 'ஈஸ்டர்ன் ஐ' பத்திரிகை வருடா வருடம் புண்ணிய காரியம் ஒன்றைச் செய்து வருகிறது. ஆசியாவின் அழகிகளைப் பட்டியலிட்டு அதிலிருந்து ஒருவரை 'மோஸ்ட் செக்ஸியஸ்ட்' பெண்ணாக அப்பத்திரிகை தேர்ந்தெடுக்கும்.

இந்த முறை அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண், நம் எல்லோருக்கும் அறிமுகமான...ஐஸ்வர்யாராய் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை! இந்த வருடம் செக்ஸியஸ்ட் பட்டத்தை தட்டிச் சென்றவர் பிரியங்கா சோப்ரா! இரண்டாம் இடத்தை பிடித்திருப்பவர் சென்ற வருடம் இந்தப் பட்டம் வென்ற பிபாஷா பாசு.

'ஈஸ்டர்ன் ஐ'க்கு மட்டும்தான் இது போன்ற சேவை செய்யத் தெரியுமா எனப் போட்டியாகக் களத்தில் குதித்தது 'இ - பே' என்கிற இணையத் தளம். இது நடத்திய ஒன் லைன் சர்வேயில் ஆசியாவின் 'ஸ்டைலிஸ்ட்' நடிகையாக பிரியங்கா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இந்தப் பட்டங்களைக் குறித்து பிரியங்கா பெரிதாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக செக்ஸியஸ்ட் பட்டத்தை அவர் ஏற்கவேயில்லை. "நான் ரொம்ப சாதாரண மான பொண்ணு. என்னோட காஸ்ட்யூம்தான் என்னை செக்ஸியா காட்டுது. உண்மையிலேயே உடல்ரீதியா செக்ஸியா இருக்கிறது பிபாஷா பாசுதான்" என விட்டேத்தியாக விளக்கம் கூறுகிறார்.





# சிம்பு நடிக்கும் 'மல'!

சிம்புவுக்கு லஷ்மி மூவி மேக்கர்ஸ் படம் நடிக்க அட்வான்ஸ் கொடுத்து பல மாதங்கள் ஆகிறது. ஆனாலும் சிம்பு சைடிலிருந்து இதுவரை சின்னச் சலனம் கூட இல்லை. சிம்பு வாங்கிய அட்வான்ஸை திருப்பிக் கொடுக்கப் போறார், லஷ்மி மூவி மேக்கர்ஸ் மூடு விழா நடத்தப் போறாங்க என்று சகட்டுமேனிக்கு வதந்தி கிளம்பிய நிலையில் இதோ...புதிய அறிவிப்பு. லஷ்மி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் சிம்பு நடிக்கிறார். படத்தின் பெயர் 'மல'.

ஹீரோவும் டைட்டிலும் ரெடி. இயக்குநர்? அதுதான் சிக்கல். யார் யாரையோ யோசித்தும் இதுவரை இயக்குநர் மட்டும் அமையவில்லை. சிம்புவையே ஆக்ஷன் கட் சொல்ல அனுமதிக்கலாம் என்றால் பழைய அனுபவங்கள் தயாரிப்பாளர்களை ரொம்பவே பயமுறுத்துகிறதாம்.

இறுதியாக இயக்குநர் வாய்ப்பு சுந்தர் சி.க்குச் சென்றுள்ளதாகத் தகவல். தற்போது 'ரெண்டு' படத்திற்காக மாதவனையும், ரீமாசென்னையும் பெண்டு கழற்றிக் கொண்டிருப்பவர். அது முடிந்ததும் 'மல' படத்தை டைரக்ட் பண்ணலாம் என்கிறார்கள்.

அடுத்த வருடத்தில் அதாவது 2007இல் மட்டும் மொத்தம் ஐந்து வெளி இயக்குநர்கள் படங்களில் நடிக்கப் போகிறாராம் சிம்பு. ஆஹா...அப்படினா படம் டைரக்ட் பண்றதை நிறுத்திட்டாரா என்று நீங்கள் சந்தோஷப்பட முடியாது. மீண்டும் 2008இல் இயக்குநர் குல்லா அணிந்து இம்சை பண்ணுவாராம்.

சி னி வி



ஜெய் ஆகாஸ்
மதன்

## மெலிதான அஜித்!

அஜித் ஆழ்வார் படத்துக்காக உடல் எடையைக் குறைத்து ஒல்லியாகி இருக்கிறார். இந்தப் படத்தில் 'சேஸிங்' காட்சியொன்று உள்ளது. இதற்காக ஓடி பயிற்சி எடுத்தார். பயிற்சி முடிந்த பிறகு ஓட்டம் பெசண்ட் நகர் கடற்கரையோரத்தில் 5 நாட்கள் படமாக்கப்பட்டது. ஓட்டப் பந்தயத்தில் ஓடுவது மாதிரியே வேகமாக ஓடினார். இதைப் பார்த்த ரசிகர்கள் கரகோஷம் எழுப்பினர்.



சரனியா

## தொழிலை குத்தகை விட்ட அசின்!

அசினுக்கு கேரளாவில் பதின் மூன்றுக்கு மேற்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் உள்ளன. சினிமாவுக்கு வரும் முன் அவற்றைத்தான் நிர்வகித்தார்.

தமிழ், தெலுங்குப் படங்களில் இப்போது பிசியாகி விட்டதாலும், தந்தை பாதுகாப்புக்குக் கூடவே வர வேண்டி இருப்பதாலும் தொழில் நிறுவனங்களைக் கவனிக்க முடியவில்லை. தாய் செலின், எம்.பி.பி.எஸ்.டாக்டர் என்பதால் மருத்துவப் பணியில் தீவிரமாக உள்ளார்.

எனவே தொழில் நிறுவனங்களை மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளார் அசின்.

சிபி
லீ



லீ பட தொடக்க விழா






# தனுஷ் ஜோடியாகிறார் சந்தியா!

கொஞ்ச நாட்களாக ஸ்க்ரீனில் முகம் காட்டாமல் இருந்த சந்தியா காட்டில் இப்போது அடைமழை. வரிசையாக வாய்ப்பு மழை கொட்டுவதால் பூரித்துப் போயிருக்கிறார் அம்மணி.

'டிஷ்யூம்' படத்திற்குப் பிறகு இதுவரை எந்தப் படமும் சந்தியாவுக்கு ரிலீஸாகவில்லை. கைவசம் இருக்கும் ஒரே படம் சிம்புவின் 'வல்லவன்'.

இந்நிலையில்தான் சீனு ராமசாமியின் 'கூடல் நகர்' படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. இதனைத் தொடர்ந்து மேலும் சில படங்கள் சந்தியாவைத் தேடி வந்துள்ளன.

அதில் முக்கியமானது 'தூண்டில்'. ஷாம் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தைத் தொடர்ந்து சந்தோஷ் இயக்கும் 'யமுனாவை காதலிக்கிறேன்' படத்தில் சந்தியா நடிக்கிறார்.

தெலுங்கில் வெங்கடேஷை வைத்து இயக்கிக் கொண்டிருக்கும் செல்வராகவன், அந்தப் படம் முடிந்ததும் தமிழில் ஒரு படம் இயக்குகிறார். ஹீரோ தனுஷ். இந்தப் படத்தில் நாயகியாக சந்தியா நடிக்கிறார்.

இரண்டு மாதங்களுக்கு முன்புவரை வட ஆற்காடு வறண்ட பூமியாக இருந்த சந்தியாவின் கால்ஷீட் டயரியில் இப்போது செழுமையோ செழுமை!




# 5 நாளில் 13 கோடி - வசூல் சாதனையில் முருகதாஸ் படம்!

இதுவரையான தென்னிந்திய திரைப்படங்களின் வசூல் சாதனையை முறியடித்திருக்கிறது ஏ.ஆர்.முருகதாஸ், நடிகர் சிரஞ்சீவியை வைத்து தெலுங்கில் இயக்கியிருக்கும் 'ஸ்டாலின்' திரைப்படம்.

இதுவரை வசூல் சாதனையில் நம்பர்-1 ஆக இருந்தது சிரஞ்சீவி நடித்த 'தாகூர்' படம். முருகதாஸின் 'ரமணா' படத்தின் தெலுங்கு ரீமேக்கான இது ரிலீஸான முதல் ஒன்பது நாட்களில் 11.5கோடி வசூலித்து சாதனைப் படைத்தது.

'தாகூரின்' சாதனையை முறியடித்திருக்கிறது 'ஸ்டாலின்.' இப்படம் சென்ற வாரம் ரிலீஸானது. மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இப்படம் ரிலீஸான முதல் ஐந்து நாட்களில் வசூலித்தது...நம்புங்கள், 13 கோடிகள்!

படத்திற்கு இருக்கும் வரவேற்பைக் கணித்தால் வசூல் ஏறக்குறைய செஞ்சுரியைத் தொட்டு விடும் எனப் பரவசப்படுகிறார்கள் விநியோகஸ்தர்கள்.

பொதுவாகத் தமிழிலிருந்து தெலுங்கிற்குச் செல்லும் இயக்குநர்கள் எதிர்பார்த்த வெற்றியை அடையாமல் போவதே வரலாறு. உதாரணம் - தரணி, எஸ்.ஜே.சூர்யா மற்றும் கௌதம். இவர்கள் இயக்கிய தெலுங்குப் படங்கள் வெற்றி பெறாத நிலையில், 'ஸ்டாலின்' மூலம் வரலாற்றை மாற்றி எழுதியிருக்கிறார் முருகதாஸ்.

இந்த வெற்றி தடையில்லாமல் தொடரட்டும்!




# ஹோட்டல் மாறிய நடிகை!

கேரள நயன நடிகை தியாகராய நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார் படப்பிடிப்புக்கு இங்கிருந்துதான் புறப்பட்டுச் சென்றார். நிரந்தரமாக ஒரு ரூமை வாடகைக்கு எடுத்திருந்தார். திடீரென்று ஹோட்டல்காரர்களிடம் ஏனோ சண்டைபோட்டு அந்த ஹோட்டலைக் காலி செய்துவிட்டார். நுங்கம் பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தற்போது தங்கி இருக்கிறார்.




# அரசியல் ஆர்வம்

தமிழில், தெலுங்கில் மளமளவெனப் படங்களில் நடித்துக் குவிக்கும் திரிஷாவுக்கு ஆங்காங்கே ரசிகர் மன்றம் தோன்றி வளர்கிறது. மன்றத்துக்கு புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுகிறார்கள். கொடியும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

நடிகைக்கு லேசாக அரசியல் ஆர்வம் தலை தூக்கியிருப்பதாக கோலிவுட் முணுமுணுக்கிறது. ஆஸ்பத்திரிக்குச் சென்று நோயாளி குழந்தைகளுக்கு உதவி செய்வதெல்லாம் அரசியலை கணக்குப் பண்ணித்தானாம். ஆனால் நடிகையோ அரசியலுக்கு வரமாட்டேன் என்று மறுக்கிறார்.



# பக்தை மீராஜாஸ்மின்

மாதா அமிர்தானந்தமயி பக்தை மீராஜாஸ்மின். இவர் சூட்டிங் புறப்படும்போது சாமி படம், பூஜைப் பொருட்களுடன்தான் கிளம்புகிறார். எந்த ஹோட்டலில் தங்கினாலும் அந்த அறையை சாமி அறை போல் மாற்றி விடுகிறார். டேபிள், நாற்காலி போன்றவற்றில் சாமி சிலைகள்தான் தென்படும். பக்தியும் சாம்பிராணி வாசனையும் கமகமக்கும். வீட்டிலும் அவர் தங்கும் அறை அம்மன் கோவிலாய்த் தான் காட்சி அளிக்கிறதாம்.

முகப்பில்: விஜய் - அசின்




திருப்பதி 106 வது வெற்றி விழாவில்




## குட்டைப் பாவாடை...

நன்றாக
ஞாபகத்தில் இருக்கிறது
இலாஸ்டிக் அறுந்த
அந்தக் குட்டைப் பாவாடை.

எனக்கும் அதற்குமான
சினேகம்
பல மாதங்களாய்
நீண்டிருந்தது.

சின்னச் சின்ன இலைகளும்
ஊதா வண்ணப் பூவுமாய்
கசங்காத சில்க்கில்
கச்சிதமாய் அமைந்து
நான்
தினமும் அணியும்
தேசிய உடையாகிப் போனது
அந்த ஒற்றைப் பாவாடை.

காற்றைக் குடித்து
உடல் பெருத்து
சண்டித்தனம் செய்யும்
சுட்டிப் பெண்ணாய்
என்னிடம் சில நேரம்
குட்டு வாங்கும்.

வலிக்காமல் கழுவ
வரச்சொல்லுவேன்.

நீர் பட்டதும் நிறம்மாறி
ஆரவாரமின்றி
அப்படியே அடங்கிப் போகும்.

அதன் அந்தரங்கம்
பார்த்துவிட்டதாய் எண்ணி
அதிகபட்சக் கோபத்துடன்
முகம் சுருக்கி
நிலம் பார்த்துக்கொள்ளும்.

பாவம் அந்தப் பாவாடை
என் திருமண சேதியில்
திணறிப் போனது
என்னைப் பிரிவதில்
வேதனையாம்.

இதிலென்ன பிரமாதம்...!
கூடவே
கூட்டிப்போக மாட்டேனா?
முட்டாள் பாவாடை
மூளையற்று முனங்குகிறது.

*-பிரமிளா செல்வராஜா,*
*ஹாலி - எல.*

## புரிந்து கொண்டால்...



வாழ்வில் வசந்தம்
வீசவில்லை என்றாலும்
தென்றலின் சுகத்தை
நுகரவில்லை என்றாலும்

பசி தீர ருசித்து
உண்ணவில்லை என்றாலும்
நல்லாடை அணிந்து
மகிழவில்லை என்றாலும்

உடல் அசதி தீர
உறங்கவில்லை என்றாலும்
விடியும் பொழுதெல்லாம்
துயரமே என்றாலும்

ஏழ்மையிலும் தூய்மை
வறுமையிலும் வாய்மை
துன்பத்திலும் இன்பம்
சோகத்திலும் சோபிதம்

எப்படி?

மனத்திடம் உள்ளோர்க்கு
வாழ்வியலை உணர்ந்தோர்க்கு
சுக, துக்கம் புரிந்தோர்க்கு
இன்பம், துன்பம்
எந்நிலை வந்தாலும்
இரண்டுமே சமமாகும்.

*-கர்பிட்டி வஹாப்.*

## ஆடைக்குள் அதிசயம்!



நுதல் வழியில்
இதழ் நுழைந்து
கோடுச் சித்திரம் போடும்
கூந்தல் முடிகள்...

எரிமலைக் குழம்பையும்
குங்குமப் பொட்டையும்
கரைத்து வடித்த
நிறத்திலான மார்புப் பள்ளம்...

நயனக் குளத்தில்
செதிலற்ற மீன்களாய்
நீந்தும் கருவிழி...

அரங்கங்களின்றி
அரங்கேறுகிறது கவிதை
உச்சரிக்கப்பட்டது
உன் பெயர்!

இன்று புரிந்து கொண்டேன்
இவ்வளவு பாரம் சுமக்கும்
பூமிக்கு உன்
பஞ்சுப் பாதங்களே!
நெஞ்சு கோதியிருப்பதை...

ஆண் உருவ சிலைகளெல்லாம்
உன் பின்னால் வர...
அலைகிறது
அன்னப்பட்சி வடிவில்
எப்படி ஒரு பெண் உருவமென்று...

உடனடியாய் நாஸாவுக்கும்
அறிவிக்க வேண்டும்.
ஆண் வர்க்கத்தை
மோசம் செய்யும்
உன் மூக்குக்கு மேல்
குத்திக் கிடக்கும்
பிஞ்சுச் சூரியனைப் பற்றி...
ஆராய்ச்சி நடத்த...,



மொத்தமாய் சேர்த்து
பிரமன் ஆடைக்குள்
ஒளித்து வைத்த
ஓர் அதிசயம் நீ!

*-து.செல்வகுமார்,*
*தர்கா நகர்.*

## எது காதல்?

மாண்பு கெட்ட - சில
காதலிகள்...
காசுக்காரனை
கண்டொருத்தி
காதலிப்பு - இது
அருமனக்
காதலில்லை
பெரும் பணக்
காதலாமோ?

ஒரு
அழகான
வாலிபனை
அடக்கி
மடக்கி
மிடுக்காய்
ஒருத்தி
காதல் - இது
கவர்ச்சிக்
காதலாமோ?

அடுத்தொரு காதல்
அவனொரு
கிழவனாகட்டும்
இளவலாகட்டும்
பசித்த வயிற்றுக்கு
பழசென்ன
புதுசென்ன
என்பது போல் - இது
காமக்
காதலாமோ?

மற்றுமொரு
மாண்பற்ற
மயானக் காதல்...
ஏமாளியொருவன்
கோமாளித் தனமாக
அவன் மீது
அவளுக்கு
காதலாம் - இது
அடக்கு முறை
அடிமைத்தன
காதலாமோ?

முன்
சொன்னவையெல்லாம்
குப்பைக்
காதல்கள்
கற்புணர்வோடு
ஒப்ப காதல் - இது
எப்பவுமே
உண்மையுள்ள காதல்...
கண்
கால்
கை
வாய்
ஒன்றும் விளங்காத - ஒரு
பாமர மகன்...
அவனை
விரும்பும்
ஒருத்தி...

அவள் நேசிப்பது
அந்த
வலது குறைந்த
பாமர ஜீவனின்
இதயத்தை...
ஒரு பெண்மகளாக
இது காதலா?
அது காதலா?

*-பொன்.நவநீதன்,*
*கல்முனை.*

## நினைவுகள்

நெஞ்சத்தில்
வெகு நாட்களாய்
பதிய மிட்டு
வடுக்களாகிப் போனது
உனதின்
நினைவுச் செதுக்கல்கள்!
இன்றுடன்
விடுதலைப் பெற்று
வெளியேறுதல்



நன்று...

மரணம் வரும் போது
யாருக்குப் புரியும்
பின்னால்...
வாழ்வு மண்ணோடு தான்
சங்கமிக்கும்.
நெஞ்சில்
நினைவுகள் மட்டும்
தங்கி நின்றால்
கல்லறைக்குள்ளும்
ஒரு சிற்பம் பிறக்கும்.

நாளை இவன் சமாதியை
வரலாறு குற்றவாளியெனவே
புனையும்.
ஆதலால் தான் சொல்கிறேன் -
நினைவுகளே!
விடுதலை அளிக்கிறேன்.
தயவுடன் இப்போதே
வெளியேறி விடுங்கள்!!

*-ஏ.ஆர்.எம்.நதார்,*
*ஜின்னாநகர்.*

## புதுசு அனுபவம்

**நான்** ஒரு கொலைகாரன். ஆனா, கடலூர் ஜெயில்ல என் செல்லுக்கு எதிர்க்க இருந்த செம்பருத்தி, ரோஜாச் செடிகளுக்கு அது தெரியவே இல்லை. தினமும் அதிகாலையில் அதுங்க என்னைப் பார்த்துப் பூத்துச் சிரிக்கும்.



பாலு

"விடிஞ்சிருச்சு பாலு... வா, வா!'னு கூப்பிடும். கிரவுண்ட்ல பெரிய அரச மரம் இருக்கு. மதியம் வேலை முடிச்சு அங்கே போய் உட்கார்ந்தா அம்பது, நூறு குருவிங்க கீச்சுக்கீச்சுனு சத்தம் போட்டுட்டு இருக்கும். அதுல ஒரு குருவியோட குரல் மட்டும் எனக்குத் தனியா தெரியும். ரொம்ப மெல்லிசா, ஒரு பெண் சோகமாப் பாடற மாதிரி ஒரு குரல். என் போல உள்ள அன்புலதான் தினமும் அங்கே வந்து பாடுதுன்னு நினைச்சுக்குவேன்.

அன்னிக்கு ஒரு தாத்தா, "சீக்கிரமா செத்துருவேன்யா. கடைசியா ஒரு தடவை அவனை பார்த்துக்கிறேன் சாமி"னு ஜெயில்ல இருக்கிற தன் பேரனைப் பார்க்க வந்தார். துண்டுல ஈச்சம்பழம், மல்லாக்கொட்டை எல்லாம் கட்டி எடுத்து வந்திருந்தார். கையெல்லாம் நடுங்குது... கண்ணுல தண்ணியா ஊத்துது. பக்கத்தில இருந்த என்னையப் பார்த்து, "மகமாயி இருக்கா. நல்லா இருப்பீகய்யா"னு அவர் சொல்லும்போது எனக்கு அழுகையா வந்தது.

ஒரு சின்ன ஜெயில்ல, கைதியாக் கிடந்த பாலுவைச் சந்தோஷப்படுத்தவே இவ்வளவு பேர் இருக்காங்களே... இவ்ளோ பெரிய உலகத்தில் இன்னும் எத்தனை இதயங்கள்... எவ்வளவு அன்பு... அதையெல்லாம் நேசிக்க நான் ரொம்ப காலம் வாழணும் சார்!" - மனசை மலர்த்திப்போடுகிறது பாலுவின் பேச்சு.

11 வருடங்களுக்கு முன்பு, தனது 20-ஆவது வயதில் ஒரு கொலை வழக்கில் ஆயுள் கைதியாக உள்ளே போன பாலு, கடந்த 15ஆம் திகதி விடுதலையாகி வெளியே வந்திருக்கிறார். இளமையைச் சிறையில் கழிக்க நேரிடுவது ஒருவரை எப்படியெல்லாமோ திசை மாற்றிவிடக்கூடும். ஆனால், பாலு தடம் மாறாமல், கவிதைகள் எழுதுவது, கிடைக்கிற பொருள்களை வைத்து பொம்மைகள் செய்து சிறை அதிகாரிகள் மூலம் வெளியே விற்பனைக்கு அனுப்புவது, தபாலில் எம்.ஏ.படித்தது என அத்தனை கைதிகளுக்கும் உதாரணமாகத் திகழ்ந்தார். மொத்த சிறைக்கும் யோகா மாஸ்டர் இவர்தான். ரௌடிகள், தாதாக்கள் தொடங்கி அத்தனை பேருக்கும் இவர் மீது தனி மரியாதை!



*கொலைதான் குத்தம்னு இல்லை. ஒரு வார்த்தையேகூடப் போதும். பல பேர் வெளியே இருக்காங்க. சில பேர் உள்ளே இருக்காங்க. எங்கே இருந்தாலும் உணரணும். மனுஷத்தனம் மட்டும்தான் வாழ்க்கைனு மாறணும். நான் மாறினேன்.*

"தஞ்சாவூர் பக்கம் தம்பிக்கோட்டை கிராமம் தான் என் ஊர். நான் பத்தாவது படிக்கும் போது நடந்ததுங்க அந்தப் பயங்கரம். வயலுக்கு யார் முதலில் தண்ணி பாய்ச்சறதுனு பங்காளித் தகராறு. 'நீயா... நானா'னு மல்லுக்கு நின்ன வீம்பு தான் மனுஷங்களைக் காவு வாங்கிச்சு. எங்க சித்தப்பாவை அவுங்க கொன்னுட்டாங்க. பதிலுக்கு அவங்கள்ல ஒருத்தரைக் கொன்ன வழக்குல நான், எங்க அப்பா, தாத்தானு குடும்பமே உள்ளே வந்துட்டோம். இதோ, தண்டனையை அனுபவிச்சு முடிஞ்சாச்சு. இனிமே என்ன, ஏது நடந்துச்சுனு பழசைப் பேசறது எதுக்கு? விவசாயம் பண்ண தண்ணி வேணும்னு தான் இந்த வெட்டுக் குத்து எல்லாமே நடந்துச்சு. ஆனா பாருங்க, இன்னிக்கு அந்த விவசாயமே இல்லை. வயக்காட்டை எல்லாம் எறால் பண்ணையா மாத்திட்டாங்க. பங்காளிகள்லாம் நல்லாப் படிச்சு ஆளாகிட்டாங்க. இன்னிக்கு ரெண்டு வீட்டு எரவாணத்திலயும் அருவா இல்லைங்க. இன்னிய தலை முறை எல்லாத்தையும் மறந்து ஒண்ணா மண்ணா ஆகிட்டோம். எப்பவோ ஒரு தப்பு நடந்துச்சுனு அதையே கட்டி இழுத்திட்டிருந்தா பூமி சுடுகாடாயிடாதா சாமி...?" என வானத்தைப் பார்க்கிறவர்,

"பக்கத்து செல்லில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் அடிக்கடி சொல்வார்,இது நல்லது, அது கெட்டது, இவர் நல்லவர், அவர் கெட்டவர்னு மனுஷன் போட்டுவைக்கிற கணக்கெல்லாம் மாறிப்போகும். வாழ்க்கை கத்துத் தரும். மாத்திப் போடும். ஆனா, நீ நீயா இருக்கணும்'ப்பார். அதானே சரி... இருபது வயசுல ஜெயில்னு சொன்னப்ப நான் நடுங்கிட்டேன். வாழ்க்கை அவ்வளவுதான்னு முடங்கிட்டேன். ஆத்தா கையால சாப்பாடு இல்லை, ஊரு, உறவு, காதல், கனவுனு அத்தனையும் விட்டுட்டு நாலு சுவத்துக்குள்ளே வந்து விழுந்தேன். எல்லாமே சூன்யமா இருந்துது. ஆனா, இந்த மனசு என்னைக் கைவிடலை. 'இதுவும் கடந்து போகும்'னு சொல்வாங்களே, அதான் என் வாழ்க்கை. இங்கேயே நல்ல வாழ்க்கை வாழணும்னு ஒரு வைராக்கியம் வந்துச்சு. எல்லா மூளைக்குள்ளேயும் ஒரு சாத்தான் இருக்கான். 'கடி...கடி'னு ஒரு ஆப்பிளை நீட்டிட்டே இருக்கான். கை கடவுள கும்பிட்டே இருக்கும். கண்ணு சாத்தானைப் பார்த்துட்டே இருக்கும். ஏதோ சூழல்... கணம்... தப்பு பண்ணிருவோம். கொலை தான் குத்தம்னு இல்லை. ஒரு வார்த்தையேகூடப் போதும். பல பேர் வெளியே இருக்காங்க. சில பேர் உள்ளே இருக்காங்க. எங்கே இருந்தாலும் உணரணும். மனுஷத்தனம் மட்டும்தான் வாழ்க்கைனு மாறணும். நான் மாறினேன். அட, இந்தச் சிறையும் இங்கே இருக்கிற மனுஷங்களும் எனக்குக் கத்துத் தந்ததை வெளியே இருந்தா படிச்சிருப்பேனான்னு தெரியாதுங்க.

என்கிட்ட யோகா கத்துக்க வந்த குற்றவாளிகள்கிட்ட நான் இதைத்தான் சொன்னேன்... கண்ணை மூடுங்க; மனசைத் திறங்க; ஆத்மாவுக்குள்ளே இறங்குங்க. நீங்க, நான், இந்த பூமி முழுக்க அன்புன்னு உள்ளே... உள்ளே போனா கண்ணுக்குத் தெரியுதே... அதுதான் கடவுளோட சிரிப்பு! பிதற்றல் மாதிரி தெரியும். ஆனா, இது என்னோட அனுபவ உண்மை. கபீர்தாஸ் செத்த பிறகு போர்வையை விலக்கிப் பார்த்தப்போ ஒரு மலர்க்குவியல் இருந்துச்சாம். மனுஷன் வாழும்போதே மலர்க்குவியலா வாழ்ந்துடனும்னு நினைக்கிறேன் நான்.

கவிதை, வேலை எல்லாமே தியானம் மாதிரி ஆகிப்போச்சு எனக்கு. முதல்ல என் கவிதைத் தொகுப்பை வெளியிடணும்.

ஒரு தடவை 'பொடா'ல உள்ளே வந்த பழ.நெடுமாறன் அய்யாதான் என் கவிதைகளை ஊக்கப்படுத்தினார். 'போர்க் குணம் நிறைந்த மனதில், யுத்தமின்றியே ரத்தம் கசிகிறது, அன்பின் வாசலை அடைத்து, அடிமையான வாழ்நாட்களை நினைத்து'னு நான் எழுதின கவிதை அவருக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது.

விடுதலையாகிட்டேன். இன்னும் புதுசா வாழணும். என்னைத் தெரிஞ்சு, இதயம் புரிஞ்சு, எனக்கே எனக்காக வர்ற ஒருத்திக்காகக் காத்திருக்கேன். அந்த ஆலமரத்தில் அம்பது, நூறு குருவிகள்ல ஒரு குருவியோட குரல் மட்டும் எனக்குத் தனியா தெரிஞ்ச மாதிரி, அந்த இதயம் துடிக்கிற சத்தம் எனக்கு மட்டும் தனியா கேட்கும்." என்கிற பாலு, கைகளை அகலமாக விரித்துப் புன்னகைக்கிறார்...

"அன்பும் நம்பிக்கையுமே சிறகான பறவைக்கு ஆகாசமே சொந்தம்... இல்லீங்களா...?"

# லேடிஸ் ஸ்பெஷல்

# அழகுக்கு மெருகூட்டும் தக்காளி!

**தோல்** மற்றும் விதை நீக்கிய ஒரு தக்காளியை கூழாக்குங்கள். ஒரு டீஸ்பூன் ஆலிவ் எண்ணெயை எடுங்கள். முதலில், முகத்தில் ஆலிவ் எண்ணெயைத் தடவுங்கள். அதன் மேல் இந்தக் தக்காளி கூழைப் பூசி, 10 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். வாரம் இரு முறை இப்படிச் செய்து வர அழகான கன்னங்கள் கிடைக்கும்.



### முகம் பளபளக்க!

தக்காளி விழுது, பாதாம் விழுது தலா அரை டீஸ்பூன் எடுத்து இரண்டையும் கலந்து கொள்ளுங்கள். இந்தப் பேஸ்ட்டை முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இதைச் செய்துவர, முகச் சுருக்கம் நீக்கி முகம் அழகாக மின்னும். மேலும் முகத்தை கண்ணாடி போல் மாற்றிக் காட்டும்.

### பேஷியல் ஸ்க்ரப்

உருளைக்கிழங்கு துருவல் சாறு - 1 டீஸ்பூன், தக்காளி விழுது - அரை டீஸ்பூன், இரண்டையும் கலந்து கொள்ளுங்கள். இந்தப் பேஸ்ட்டை கழுத்திலும், முகத்திலும் தடவி, 5 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். தொடர்ந்து இதைச் செய்து வந்தால் சில வாரங்களிலேயே வித்தியாசத்தை உணரமுடியும்.

ரொம்ப நாட்களாக முகத்தைச் சரிவரப் பராமரிக்காதவர்களின் முகத்திலுள்ள செல்கள் இறந்துபோய் முகம் பொலிவிழந்து விடும். அவர்களுக்கான ஸ்பெஷல் சிகிச்சை இந்த தக்காளி பேஷியல் ஸ்க்ரப்.

### முகம் சூரியனாகப் பிரகாசிக்க!

ஒரு தக்காளிச் சாறுடன் கால் டீஸ்பூன் ரவையைக் கலந்துகொள்ளுங்கள். இதை நன்றாக முகத்தில் தேய்த்துக் கழுவுங்கள். தொடர்ந்து இதைச் செய்து வந்தால், முகம் சூரியனாகப் பிரகாசிக்கும். சிலருக்கு முகத்தில் மிருதுத் தன்மை மாறி, முரடு தட்டிப் போய்விடும். அவர்களுக் கான டிப்ஸ் இது.



### தங்கம் போல் ஒளிவீச!

ஒரு தக்காளியைக் கூழாக்குங்கள். இதனுடன் அரை டீஸ்பூன் தயிரைக் கலந்து கொள்ளுங்கள். இதை முகத்துக்குப் பூசி, 5 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். முகம் மிருதுவாகி, தங்கம் போல் ஒளி வீசும்.

### கண்கள் பளிச்சென்று இருக்க!

ஒரு வெள்ளரித் துண்டு, அரைத் தக்காளி. இரண்டையும் அரைத்துக் கொள்ளுங்கள். இமைகளின் மேல் இந்தக் கலவையைப் பூசி, 2 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். ஓரிரு வாரங்கள் இதைச் செய்து வந்தாலே கருவளையம் காணாமல் போவதுடன் கண்களும் பளிச்சென்று இருக்கும்.

### சங்குக் கழுத்துப் போல் ஆக!

தக்காளிச் சாறு - அரை டீஸ்பூன், தேன் - அரை டீஸ்பூன், சமையல் சோடா - ஒரு சிட்டிகை இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள். இந்தப் பேஸ்ட்டை கழுத்தில் உள்ள கருவளையத்தின் மேல் பூசி, 10 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். வாரம் மூன்று முறை இப்படிச் செய்து வாருங்கள். உங்கள் கழுத்து சங்குக் கழுத்துப் போல் ஆகிவிடும்!

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## ஆப்பிள் அல்வா

**தேவையான பொருட்கள் :-**

ஆப்பிள் துருவியது - 500 கிராம்

கோதுமை மா - 500 கிராம்

நெய் - 250 கிராம்

ஏலத்தூள் - சிறிதளவு

சீனி - 1 கிலோ

பால் - 500 மில்லி

முந்திரிப் பருப்பு - 200 கிராம்

கேசரி பவுடர் - சிறிதளவு.

**செய்முறை :-**

துருவிய ஆப்பிளைப் போட்டு பாலில் வேக விடவும். நன்கு வெந்த பிறகு கையினால் மசிக்கவும். இதனுடன் கோதுமை மாவைக் கலந்து கரைத்து, கேசரி பவுடர் சேர்த்துக் கிளறவும். அத்துடன் சீனியையும் கலந்து சற்று இறுகியதும் நெய் சிறிது சிறிதாகக் கலந்து கிளறவும். அல்வா பதம் வந்ததும் முந்திரிப் பருப்பு, ஏலக்காய்த் தூள் சேர்த்து இறக்கி விடவும். இது சுவையாக இருக்கும். உடம்புக்கும் சத்தானதாகும்.

# வாளிப்பான தொடை அழகு வேண்டுமா?

**பெ**ண்களின் தொடைப் பகுதிகள் ஆடைகளால் மறைக்கப்பட்ட நிலையில் தானே இருக்கின்றன. அதைப் போய் யாராவது அழகு படுத்துவார்களா? என்று கேட்டு விடாதீர்கள்.

ஒரு பெண் என்னதான் மகா பேரழகியாக இருந்தாலும் தொடைகள் அளவாயின்றி பெருத்திருக் குமானால் அவளது அழகு பாதிக்கப்படுகிறது. உயரம் குறைவானது போல ஒரு மாயத் தோற்றம் ஏற்படுகிறது.

பிள்ளைகளைப் பெற்ற பெண்களும் சல்வார் கமீஸ் என்னும் வட நாட்டு அலங்காரத்தைப் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். இந்நிலையில் சீரான தொடைகள் அமையாவிட்டால் கால்களை அகல வைத்து நடக்க நேரிடுகிறது.

அழகிய தொடைகள் பெறப் பயிற்சிகள் மிக உதவுகின்றன. பெண்கள் காலை வேளையில் வாக்கிங் போவது நல்லது. நடக்கும் போது சற்றே வேகமாக நடந்தால் தான் உடலில் விறுவிறுப்பு ஏற்படும். சற்றே வியர்த்து உடல் சுறுசுறுப்படையும். நடக்கும் போது பேசிக்கொண்டே போகக் கூடாது. கைகளைத் தளரவிட்டு நடக்கப் பழக வேண்டும்.

கூடுமானவரை ஒரு நேர்கோட்டை மனதில் கற்பனை செய்து அதன் மீது நடப்பதாகப் பாவிக்க வேண்டும். அப்படிப் பழகினால் நடையில் தடுமாற்றம் ஏற்படாது. இப்பயிற்சியினால் தொடைகள் நல்ல வடிவு பெறும்.

பெண்கள் தரையில் மல்லாந்து படுத்து உள்ளங் கைகள் தரை நோக்கி இருக்க, கால்கள் இரண்டும் இணைந்தி ருக்கும்படி செய்ய வேண்டும். பின்பு மெள்ள இரு கால்களையும் தரையின் 2 அடி வரை தூக்க வேண்டும். பிறகு இரு கால்களையும் இரண்டடி அளவிற்கு அகல விரிக்க வேண்டும்.



இப்படி நான்கைந்து முறை கால்களை விரித்து வியர்த்தபின் சம தரைக்குக் கொண்டு வந்து பின்னர் மீண்டும் கால்களை உயரத் தூக்கிக் கொண்டு வந்து இதே பயிற்சியைச் செய்ய வேண்டும். பத்து முதல் இருபது தடவைகள் வரை செய்து வந்தால் தொடைகள் மெலிந்து அழகு கிடைக்கும்.

பெண்கள் வீட்டில் இருந்தபடியே சைக்கிள் ஓட்டலாம். நின்ற இடத்திலேயே ஓட்டக்கூடிய சைக்கிளில் தினமும் அரை மணி நேரம் பயிற்சியைச் செய்து வந்தால் தேவையற்ற சதை குறைவதுடன் தொடைகளின் அழகும் பெருகும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

42

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -41**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

10.10.2006

**பரிசுப் போட்டி இல - 40 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கே. சந்திரகுமாரி, மகாறம்பைக்குளம், வவுனியா.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**திசை** காட்டும் காம்பஸின் உதவி கொண்டு வடக்குத் திசையிலேயே போனால் இரண்டு, மூன்று நாள் பிரயாணத்தில் ஷார்வின் என்ற மரண முகாம் வரும். அங்கே எவனாவது ஒருவனைப் பிடித்துப் பணம் கொடுத்து, ஜீஸஸ் வந்தால் நாங்கள் இன்ன இடத்துக்குப் போயிருக்கிறோம் என்று தெரிவிக்கும்படி சொல்லி வைக்க வேண்டும்.

இதைத் தெரிவித்துவிட்டு -



ஜீஸஸும், அவனுடைய உதவியாளனும் தங்கள் படகை ஓட்டிக் கொண்டு சென்றார்கள். சில நிமிடங்களில் அவர்கள் படகு பார்வையிலிருந்து மறைந்துவிட்டது. அதன் பின்னர் எங்கள் கண்ணிலும் எதுவும் படவில்லை. காதிலும் எதுவும் கேட்கவில்லை.

இந்தப் பிரதேசத்தில் பகல்வேளை வருவது ஒரு விசித்தரமான அனுபவம். நம் தலைக்கு மேலே மரக்கிளைகள் கவிழ்ந்து இருக்கின்றன. சூரிய வெளிச்சம் அதன் உச்சிகளில் படுகிறது. ஆனால் அந்தக் கிளைகளின் வழியாக ஒரே ஒரு சூரிய கிரகணம்கூட ஊடுருவிக் கீழே வரவில்லை.

நானும் மாசுரெட்டும், ஜோன்ஸும் தன்னந்தனியே இருந்தோம். எங்களுக்கு முதலில் தோன்றிய உணர்ச்சி சிரிக்க வேண்டும் என்பதே. மொத்தத் திட்டமும் எவ்வளவு சுளுவாக நடந்தேறிவிட்டது! ஒரே ஓர் இக்கட்டு, ஜோன்ஸின் கால் முறிவு ஒன்றுதான். ஆனால் அவன் கூட சிம்பு, வைத்துக் கட்டிவிட்டதால் இனிச் சரியாகிவிடும் என்று சொன்னான்.

காப்பி போட்டுக் குடிக்க வேண்டியதுதானே? தடையென்ன? வேகமாய் அடுப்பு மூட்டினோம். ஆளுக்கொரு பெரிய குவளை நிறைய டிகாஷன் தயாரித்து, பழுப்புச் சர்க்கரை சேர்த்துக் குடித்தோம். பிரமாதமாயிருந்தது. முதல் நாள் சாயந்தரம் முதல் எங்களுக்குக் கொள்ளையாய் வேலை இருந்து கொண்டிருந்ததால், எங்கள் பொருள்களைக் கவனிக்கவோ, படகைப் பரிசோதிக்கவோ தெம்பில்லாதிருந்தது. எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நாங்கள் சுதந்திரமாக இருக்கிறோம். சுதந்திரம்! சுதந்திரம்! கயானாவை அடைந்து அன்றோடு முப்பத்தேழு நாட்கள் ஆகியிருந்தன. அதற்குள் தப்பிவிட்டேன். என் ஆயுள் தண்டனை அப்படி ஒன்றும் நீண்டதாக இல்லைதான்! எனக்குத் தண்டனையளித்த நீதிபதியை நினைத்துக் கொண்டேன். "கனம் நீதிபதி அவர்களே! அக்கரைச் சிறைவாசம் என்றால் எவ்வளவு வருட தண்டனை?' என்று வாய்விட்டுச் சொன்னேன். தாள முடியாத சிரிப்பு வந்துவிட்டது. மாசுரெட்டும் விழுந்து விழுந்து சிரித்தான். அவனும் ஆயுள் தண்டனை பெற்றவன்.

ஜோன்ஸ் கூறினான்: "ரொம்பத்தான் கொக்கரிக்காதே. கொலம்பியா நாடு ரொம்பத் தூரத்தில் இருக்கிறது. அத்தோடு மரத்தைக் குடைந்து செய்த இந்த மரக்கட்டைப் படகா நம்மைக் கடலில் கொண்டு செல்லப்போகிறது? எனக்குத் தோன்றவில்லை."

நான் பதிலேதும் கூறவில்லை. உண்மையைச் சொல்கிறேனே! கடலில் செல்லக்கூடிய ஒரு பெரிய படகுக்கு இந்தச் சின்னப் படகில் போகிறோம் என்றுதான் கடைசி நிமிடம் வரை நான் எண்ணியிருந்தேன். நான் எண்ணியது தப்பு என்று கண்டு கொண்டதும் எதுவும சொல்ல விரும்பவில்லை. முதல் காரணம், அதைச் சொல்லி என் நண்பர்களை அதைரியப்படுத்துவானேன் என்பது. இரண்டாவதாக, சிறையிலிருந்த தப்பியோடுகிறவர்கள் என்ன மாதிரியான படகை உபயோகிப்பார்கள் என்பது எனக்குத் தெரியாதென்று ஜீஸஸிடம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

பேசுவதிலும் அந்தப் புதர்ப் பகுதியைப் பற்றிச் சிறிது தெரிந்த

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

கொள்வதிலும் முதல் நாளையப் பொழுது கழிந்தது. அந்தப் பகுதி எங்களுக்கு முற்றிலும் புதுமையாக இருந்தது. குரங்குகளும் அணில்களும் எங்கள் தலைக்குமேல் பிரமிக்கத்தக்க வகையில் தாவியோடின. காட்டுப் பன்றி இனத்தைச் சேர்ந்த 'பெக்காரி' என்ற சிறிய விலங்குகள் ஒரு மந்தையாகத் தண்ணீர் குடிக்க வந்தன. குறைந்தபட்சம் இரண்டாயிரம் இருக்கும். அவை சிற்றோடைக்குள் குதித்து, கவிந்திருக்கும் வேர்களைக் கிழித்துக் கொண்டு நீந்தின.

ஒரு பெரிய முதலை- எங்கேயிருந்துதான் அது வந்ததோ, கடவுளுக்கே வெளிச்சம் - ஒரு பன்றியின் காலைக் கவ்விவிட்டது. அந்தப் பன்றி உடனே நீராவி எஞ்சின் மாதிரி வீரிட்டுக் கூச்சலிடத் தொடங்கியது. மற்ற அத்தனை பன்றிகளும் முதலை மீது ' பாய்ந்தன. அதன் மீது ஏறிக்கொண்டு, அதன் பிரம்மாண்டமான வாயின் ஓரங்களைக் கடிக்க முயன்றன. முதலை தன் வாலை ஒரு வீசு வீசும். ஒரு பன்றி எகிறிப் பறக்கும்! இடப்புறம் ஒன்று வலப்புறம் ஒன்று! ஒரு பன்றி அடிபட்டு மயங்கி, மல்லாந்தபடி மிதந்து சென்றது. உடனே அதன் தோழர்கள் அதைத் தின்றுவிட்டன. சிற்றோடை எங்கும் சிவப்பு வெள்ளம் இரத்தத்தால்! இந்த நாடகம் இருபது நிமிட நேரத்துக்கு நீடித்தது. பிறகு முதலை தண்ணீருக்குள் தப்பியோடிவிட்டது. அதன் பிறகு அதை நாங்கள் பார்க்கவேயில்லை.

இரவு நன்றாய்த் தூங்கினோம். காலையில் காப்பி போட்டுக் கொண்டோம். நான் என் மேல் கோட்டைக் கழற்றினேன். படகில் இருந்த ஒரு பெரிய பார் சோப்பைக் கொண்டு அதைச் சலவை செய்தேன்.

என் இரும்புக் கத்தியைக் கொண்டு மாசுரெட் எனக்கு முகச் சவரம் ஏதோ பேருக்குச் செய்தான். பிறகு ஜோன்ஸுக்கும் மழித்தான். அவனுக்கு மீசை, தாடி கிடையாது.

கோட்டைத் திரும்ப மாட்டிக் கொள்வதற்காக எடுத்தேன். ஒரு பெரிய சிலந்திப் பூச்சி - கரும் பழுப்பு நிறத்தில், புசு புசுவென்ற ரோமத்துடன் வெளியே விழுந்தது. அதன் ரோமங்கள் மிக நீளமாயிருந்தன. ஒவ்வொரு ரோமத்தின் நுனியிலும் பளபளவென்று சிறிய உருண்டை. அந்தப் பயங்கரப்பூச்சி ஒரு பவுண்டு எடை இருக்கும். அதை நசுக்கிக் கொன்றேன், அருவருப்புடன்.

ஜீஸஸின் வருகையை எதிர்பார்த்து நாங்கள் காத்திருந்தோம். என் கோட்டில் பெரிய சிலந்திப் பூச்சி இருந்ததைப் போல் படகிலும் இருக்கப்போகிறதோ என்ற அச்சம் உதித்தது.

படகிலிருந்த அனைத்தையும் வெளியே எடுத்தோம். தண்ணீர்ப் பீப்பாய் உட்பட. தண்ணீர் ஊதா நிறமாக இருந்தது. கெடாமலிருப்பதற்காக அதில் ஜீஸஸ் அளவுக்கு மீறிப் பர்மாங்கனேட் போட்டு விட்டான் போலிருக்கிறது. இறுகக் கார்க் போட்ட புட்டிகளில் நெருப்புக் குச்சிகளும், வத்திப் பெட்டியும் இருந்தன. திசை காட்டும் காம்பஸ், சும்மா பள்ளிக்கூடப் பிள்ளைகள் வைத்திருப்பது தான். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்குத் திசைகளை மட்டுமே காட்டின. வேறு அளவுக் குறிகள் எதுவும் காணோம். கொடிமரம் எட்ட அடி உயரத்துக்கு மேலில்லை. மாவுக் கோணிகளைப் பாய்மரமாகத் தைத்து, ஓரங்களைப் பலப்படுத்த வேண்டி, கயிற்றினால் பார்டர் தைத்தோம். கொடிமரத்தை எடுத்தபோது படகின் அடிப்புறம் பலமாயில்லை என்பதைக் கண்டோம். கொடி மரத்தைச் செருகும் துவாரம் நைந்து, செல்லரித்திருந்தது. சுக்கானைப் பிடிக்க வேண்டிய முனைகளைப் பொருத்துவதற்காகப் பெரிய ஆணிகளை அடித்தபோது, வெண்ணெயில் இறங்குகிற மாதிரி ஆணிகள் இறங்கின. படகு மகா மட்டம். அந்த அயோக்கியன் ஜீஸஸ் எங்களைச் சாவுக்குத் தான் அனுப்பியிருக்கிறான்.

விருப்பமில்லாமலே இவ்வளவையும் மற்றவர்களுக்கு விளக்கினேன். அவர்களிடமிருந்து மறைக்க எனக்கு என்ன உரிமை?

சரி, அடுத்து என்ன செய்வது? ஜீஸஸ் திரும்பி வரும் போது, வேறொரு வலுவான படகு கொண்டு வந்து தரும்படி செய்யவேண்டும். அவனுடைய ஆயுதங்களை எடுத்து வைத்துக் கொண்டு விடுவது, பிறகு கோடாரியும் கத்தியுமாக நான் அவனுடன் கிராமத்துக்குச் சென்று வேறொரு படகு கிடைக்கிறதா என்று தேடவேண்டும். ரொம்ப ஆபத்தான காரியம்தான். ஆனால் சவப்பெட்டியோடு கடலில் இறங்குவதற்கு அது பரவாயில்லை. மற்றபடி சரக்குகள் சரியாகவே இருந்தன. எண்ணெயும், திரியும் போட்ட ஒரு புட்டி இருந்தது. மாவு அடைத்த சில டின்கள் இருந்தன. இவற்றுடன் வெகுதூரம் செல்ல முடியும்.

அன்று காலை நாங்கள் அதியற்புதமான விநோதக் காட்சி ஒன்று கண்டோம்: பழுப்பு முகம் கொண்ட குரங்குப் பட்டாளமொன்று, கறுப்பு முகம் கொண்ட குரங்குப் பட்டாளத்துடன் சண்டையடித்தது. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மாசுரெட்டின் தலையில் ஒரு மரக்கட்டை வந்து விழுந்தது. கொட்டைப்பாக்கு அளவு வீக்கம் கண்டு விட்டது, பாவம்!

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# துளிர் விடும் மலையகம்



துளிர் 05

**1859** இல் 'பெர்குஷன்' என்பவர் கூறுகிறார், 1827 இல் ஒரு மில்லியன் தென்னிந்தியர் இலங்கைக்குப் புறப்பட்டனர், 1837 இல் 250,000 தென்னிந்தியர்களின் புதைகுழிகள் இலங்கையில் காணப்பட்டன."

### தென்னிந்தியரை உந்தித்தள்ளிய உள்நாட்டுக் காரணிகள்

ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி 1600 இல் நிறுவப்பட்டது. இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் மகாராணியால் கீழைத்தேச வர்த்தகத்தின் ஏகபோகக் இக் கம்பனிக்கு வழங்கப்பட்டது. மோகல் பேரரசின் கீழ் இந்தியா இருந்த அவ்வாண்டில் பிரித்தானியர் வந்து மோகலின் அனுமதியுடன் வர்த்தக நிலையங்களை, இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள சுறாக், திருவாங்கூர், மசூலிப்படம் என்ற பிரதேசங்களில் நிறுவினர். இதன் பின்னரும் 1639 இல் சென்னையிலும், 1661 இல் பம்பாயிலும், 1690 இல் கல்கத்தாவிலும் வர்த்தக நிலையங்களை நிறுவினர். பிரான்சியர் 1664 இல் பிரான்சிய கிழக்கிந்திய கம்பனியை ஆரம்பித்து புதுச்சேரி, சந்திநகர், கரிகால் ஆகிய இடங்களில் பிரான்சிய வர்த்தகக் கம்பனியை நிறுவினர்.



18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மோகல் பேரரசு நிலைகுலையவே பல சிற்றரசுகள் உருவாகி உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது போல பிரித்தானியருக்கு சாதகமாக இந்த யுத்தம் அமைந்தது. 1772 இல் மாநிலங்களுக்கு இடையில் ஏற்பட்ட யுத்தத்தில் ஆங்கிலேயர் ஊடுருவ, பிரான்சியரும் ஊடுருவினர். இறுதியில் இருபிரிவினருக்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டு இறுதியில் ஆங்கிலப் படையினர் வெற்றிபெற்று இந்தியாவை தங்களது வசத்திற்குட்படுத்தினார்கள்.

இவ்வேளை இந்தியாவில் பலவிதமான பிரச்சினைகள் தலைவிரித்தாடின. குறைவிருத்திநாடாகவும், புத்திஜீவிகள் மரணித்து, மறுமலர்ச்சியற்ற நிலையில் மனிதத்துவம் அற்றதாகவும், கலாசாரம், சம்பிரதாயம் என்ற அநாகரிகமான செயல்களினாலும் இந்தியா இருண்டு கிடந்தது. சாதிப் பிரச்சினை சமுதாயத்தின் தடுப்புச் சுவராகப் பரிணமித்தது. மேல் குலத்தவர் என்ற பசுதோல் போர்த்தின புலிகள் தாழ்குலத்தவர்க்ள் என்ற ஆடுகளை மனிதாபிமானமற்ற நிலையில் பலியாக்கினர், தாழ்சாதியினரை பணியாட்களாகவும் கூலியாட்களாகவும் சமுதாயத்தில் பலியிட்டு ஒடுக்கி நசுக்கினர். அதுபோலவே ஜமீன்தார்கள், பண்ணையாளர்கள், செட்டிமார்கள் போன்றோர் உயர்குடியினராகவும், பணம்-பலம் படைத்த மக்களாகவும் திகழ்ந்து மக்களை அடிமைகளாக்கி ஒடுக்கினர். இப் பெரும் புள்ளிகளினால் ஏழை எளியவரின் நிலபுலங்கள் சுரண்டப்பட்டு, அவர்களைப் பணியாட்கள் போலவே நடத்தினர். இதனால் இவர்கள் வரண்ட நிலத்தில் மழையில்லா பயிர்போல வாடி வதங்கி வாழ்க்கை நடத்தினர். இச் சமுதாய கட்டமைப்பினால் ஏழைகள் இன்னமும் வறிய நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

விவசாயக் கைத்தொழில் நாடான இந்தியாவில், சிறு குடிசைக் கைத்தொழில்களை அகற்றி பாரிய கைத்தொழில் தொழிற்சாலைகளை பிரித்தானியர் அமைத்தனர். இதனால் சிறு குடிசைக் கைத்தொழிலாளர்களின் வாழ்வு மேலும் பாதிக்கப்பட்டது. மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டியது போல இயற்கை நிகழ்வும், இவர்களின் வாழ்க்கையை மென்மேலும் இழிநிலைக்குக் கொண்டுசென்றது. வரட்சியின் காரணமாக நீர்ப்பாசன வசதியின்றி விவசாயம் தோழ்வியுற்றது. பொருளாதாரப் பற்றாக்குறை தாண்டவமாடும் இந்நிலையில் பிரித்தானியரினால் ஏற்படுத்தப்பட்ட கடுமையான வரிமுறைகளான, குத்தகை வரி, சுங்க வரி, போன்றவற்றிற்கும் முகம் கொடுக்க முடியாத நிலைக்கு உள்ளானார்கள்.

இதனால் விரக்தியுற்று வாழ்ந்தவர்களுக்கு இவ் வாழ்க்கையானது சுமக்க முடியாத பெறும் பாறாங்கல்லைப் போன்று காணப்பட்டது. இப் பிழையான சமுதாயக் கட்டமைப்பிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற நிலை, உள ரீதியாக ஏற்பட்டிருந்தது. இந் நிலைகளைச் சாதகமாக்கிக் கொண்ட ஆங்கிலேயர், ஆசை வார்த்தைகளைக் கூறி அயல் நாடுகளுக்குச் செல்ல ஆர்வமூட்டினார்கள். "மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு, தொழில், ஓய்வூதியம், பிள்ளைகளின் கல்வி இவையனைத்தையும் பூரணமாகக் கொடுப்போம்" என வாக்குறுதி கொடுத்தனர். ஆனால் இவையனைத்தும் ஆங்கிலேயரின் ஆதாய சிந்தனையில் உருவான, அழகான பசப்பு வார்த்தைகளாகும். இதன் காரணமாக இம் மக்கள் சொர்க்கத்திற்குச் செல்வது போல இலங்கை செல்லத் தீர்மானித்துப் புறப்பட்டனர்.

"திரை கடல் ஒடி திரவியம் தேடுவோம்" என்ற உளரீதியான உந்துதலுக்கு, மேற்கூறப்பட்ட காரணிகள் அனைத்தும் உத்வேகத்தைக் கொடுத்தன. இவ்வாறு வந்த தேயிலைத் தோட்ட மக்கள் இலங்கையில் தங்களது பரம்பரையைப் பல தசாப்தங்களுக்கு தேயிலைத் தோட்ட மக்களாகவே வாழவைத்துவிட்டனர். எனலாம்.

### இந்தியாவிலிருந்து இலங்கை வரை!.

இந்திய சட்டத் தொடரின் 14 ஆம் விதியின்படி 1793 ஆம் ஆண்டில் இந்தியர் வெளியேறுவதை

**பூ முகன்**

தடைசெய்தனர். 1823 இல் முதலாவதாக கோப்பி பயிர்ச் செய்கையை, கம்பளையில் பிரித்தானியர் ஆரம்பித்தனர். அது நல்ல பலனைக் கொடுத்ததால்,அதனைப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாக மாற்றியமைக்க திட்டம் தீட்டினார்கள். இதில் வேளை செய்வதற்குப் பெருந்தொகையான வேலையாட்கள் தேவைப்பட்டனர். 'இராஜ காரிய' என்ற அரசாங்க நலனுக்கான வேலைகளை, கட்டாயமாக குடிமக்களே செய்யவேண்டும் என்ற அரச சட்டத்தின் மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அது சாத்தியப்படவில்லை. இதன் காரணமாக பிரித்தானியரின் கண்ணோட்டம் தென்னிந்தியர் பக்கம் சென்றது. பொருளாதார நெருக்கடியினால் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டிருந்த தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், ஆர்க்காடு போன்ற பிரதேசங்களில் இருந்து பெரும்பான்மையான மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். தங்களது சொந்த ஊர்களிலிருந்து இவர்கள் கால்நடையாக தேவிபட்டணம், மண்டபம், இராமேஸ்வரம் போன்ற இடங்களை வந்தடைந்தார்கள்.

*(துளிர்க்கும்)*

**சிரிப்பு 26**

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்

சாப்ளினுக்கு இருபத்தொன்பது வயது. உலகிலேயே மிகவும் புகழ்பெற்ற பணக்கார நடிகர் என்ற பெருமை, அவரைச் சுற்றியிருக்கும் கேரிஸ்மா இவைகள் எல்லாம் அந்தப் பதினாறு பருவ மங்கையை மயங்க வைத்தன. அதற்குத் தூபம் போட்டாள் அந்த நடிகையின் தாய். உலகில் எல்லா நாடுகளிலுமே நடிகையின் தாய் என்றால் அவளுக்கு ஒரு தனி அந்தஸ்து உண்டு. தன் மகளைப் பணயமாக வைத்துப் பந்தயத்தில் ஜெயிக்கத் திட்டம் தீட்டுவார்கள் பல தாய்மார்கள்! அந்த வகையைச் சேர்ந்தவள் மில்பிரிட்டின் தாய்.

முதல் முறை அவளுடன் பேசியபொழுது சாப்ளின் அவளை ஒரு சிறு பெண்ணாகத்தான் எண்ணினார். கெட்டிக்காரியான அந்தத் தாய் தன் மகள் சாப்ளினை அடிக்கடி சந்திக்க வாய்ப்புக்களைத் தேடி ஓடினாள். வாழ்க்கையில் சாதாரணமாக எதையாவதுதேடி ஓடினால் அது தவறாமல் கிடைக்கும்! அதை அறிந்த அந்தத் தாய் வாய்ப்புகளுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சில விருந்துகளுக்கு சாப்ளின் வருவார் என்று தெரிந்து கொண்டதும் அழைப்பு இல்லாமல் இருந்தாலும் மகளைக் கூட்டிக்கொண்டு செல்வதும் உண்டு. அந்த வகையில் தன் மகளை



விருந்துகளில் சாப்ளினுடன் சிரித்துப் பேசத் தனியாக விட்டாள். வயதைக் கொஞ்சம் அதிகமாகக் காட்ட மில்பிரிட் தன்னைப் பல வகைகளில் செயற்கை அலங்காரங்களையும் செய்து கொண்டாள். தன்னுடைய மகளின் வலையில் விழ சாப்ளின் தயாராக



இருக்கிறார் என்பதை அறிந்த அந்தத் தாய்க்கு பரம திருப்தி! அவரை இன்னும் அருகில் இழுக்கத் தனக்குத் தெரிந்த பல யுக்திகளையும் மகளுக்குப் பாடமாகக் கற்பித்தாள்.

அமெரிக்காவில் சட்டப்படி ஒரு ஆணோ, பெண்ணோ இருபத்தொரு வயது அடைந்த பிறகுதான் மேஜராக எண்ணப்படுவார்கள். நம் நாட்டின் சட்டப்படி அந்த வயது பதினெட்டுதான். அங்கு மூன்றாண்டு அதிகம். இருபத்தொரு வயது நிறையாத ஒரு பெண்ணிடம் காதல் விளையாட்டுகளில் ஈடுபட்டு, அது காம விளையாட்டில் போய் முடிந்தால் அது அமெரிக்க சட்டப்படி குற்றமாகும். அதாவது கற்பழிப்பு. இந்தக் குற்றம் அமெரிக்காவில் நம் நாட்டை விட தீவிரமாக எண்ணப்படும் ஒன்று. எண்பது ஆண்டுகள் தொண்ணூறு ஆண்டுகள் சிறைவாசமும் கிடைக்கும்! இந்தச் சட்டத்தைப் பற்றி மில்பிரிட்டின் தாய்க்குத் தெரியும். சாப்ளினுக்கு முழுமையாகத் தெரியாது!

சில விருந்துகளில் சாப்ளினும் மில்பிரிட்டும் கட்டிப் பிடித்து நடனமாடினார்கள். அப்படி நடனமாடும் பொழுது சாதாரணமாக ஆணும், பெண்ணும் போசிக் கொள்வது வழக்கம். அந்த வகையில் மில்பிரிட், சாப்ளினின் ஆரம்ப கால வாழ்க்கையைப் பற்றி அவரைப் பேசத் தூண்டினாள். தாயின் மனநிலைமை, அரைவயிற்றுக் கஞ்சிக்காக லண்டனில் அவர் நடத்திய போராட்டங்கள் போன்ற கதைகளைக் கேட்டு, மில்பிரிட் சற்று அதிகமாகவே கண்ணீர் விட்டாள், அவர் தோளின் மீது. இவையெல்லாம் தூரத்தில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த தாயின் கண்ணில் படாமல் இல்லை!

மில்பிரிட் தன்னைப் பற்றிச் சில கதைகளைத் தாயின் சொற்படி கற்பனையும் சேர்த்து சாப்ளினின் செவிகளில் ஊதினாள். அதைக் கேட்டு அவர் உள்ளம் உருகினார்! விருந்து முடிந்து சாப்ளின் அவளைத் தன் காரில் வீட்டில் விட வருவதாக முன்வந்த பொழுது அவள் அதை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டாள். இதையறிந்த தாய் பழம் நழுவி பாலில் விழும் நேரம் நெருங்கிவிட்டது என்று சந்தோஷப்பட்டாள். வழக்கத்திற்கு மாறாகப் பெண்ணை சாப்ளினுடன் தனியாக அனுப்பிவிட்டு, அவள் வேறு நண்பர்களின் காரில் தொற்றிக் கொண்டு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள்!





சாப்ளின், மில்பிரிட் காரில் அமர்ந்தார். இருவரும் உற்சாகத்தோடு அந்த நள்ளிரவு கடந்த நேரத்தில் 'பசுபிக் கடல்' பகுதியில் உள்ள மிகப் பிரபல கடற்கரைப் பக்கத்திலேயே செல்லும் அழகிய சாலையில் பவனி வந்தார்கள்.

(லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தின் ஒரு பகுதிதான் 'ஸோன்டா மானிகா'. அதை ஒட்டி பல மைல்கள் நீளமுள்ள சாலை 'பசுபிக் கோஸ்ட் ஹைவே' இதைச் சுருக்கமாக 'PCH' என அழைப்பர். இந்தச் சாலை ஒருபுறத்தில் கடல், மற்றொரு புறத்தில் அழகிய குன்றுகள். இப்படி இயற்கை அழகும் செயற்கைக் கட்டிடங்களும் கலந்த ஒரு இடம்தான் லாஸ் ஏஞ்சல்ஸ் மாநகரம். இந்தப் பகுதியில் மழை பெய்வது மிகவும் அரிது. ஆகவே சந்திரன் பிரகாசிக்கும் இரவுகளில் மேகத்தின் தொல்லைகள் அதிகமாக இராது.)

ஸேன்டாமானின்கா கடற்கரை... இரவுநேரம்... நீலநிற வானத்தின் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருக்கும் சந்திரன். அங்குமிங்கும் கீழே உலகத்தில் ஆண், பெண்களின் அந்தரங்க வாழ்க்கை விளையாட்டுகளை பார்த்துக் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள்... இந்தச் சூழ்நிலையில் எண்பது வயதை எட்டிப் பிடித்த ஆணிற்கும் காதல் வரும் என்றால் அதில் ஆச்சரியமும் உண்டோ!

முப்பது வயதை எட்டிப் பிடிக்காத சாப்ளின், பதினாறு வயது மங்கை மில்பிரிட் காரில் தன்னந்தனியாகத் தங்கு தடையின்றி முத்தமழையில் நனைந்தார்கள். அதன் போதை சாப்ளினின் தலைக்கும் ஏறியது! ஒவ்வொரு நாளும் அவள் வேலை செய்யும் ஸ்டூடியோவின் வாசலில் காரில் உட்கார்ந்து கொண்டு அவள் வருகைக்காகக் காத்துக் கிடப்பார் இவர். சாப்ளினின் ஆர்வத்தை அதிகரிக்க மில்பிரிட் வேண்டுமென்றே சற்றுத் தாமதமாக வெளியில் வருவாள்.

சாப்ளின் மில்பிரிட்டை சொந்தமாக்க, மிகவும் விரும்பித் துதிக்கத் தொடங்கினார். திருமணம் செய்து கொள்ளவும் துணிந்து விட்டார்! அதற்கு மில்பிரிட் சம்மதம் தெரிவித்தாலும் அவளுடைய தாய் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அதற்கு ஒரு விபரீதமான காரணமும் இருந்தது.

உடனடியாகத் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டு விட்டால் அவ்வளவு மதிப்பு இராது என்ற எண்ணம் அந்தத் தாய்க்கு. திருமணத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தால் சாப்ளினின் ஆர்வத்தை அதிகரிக்கலாம். அதனால் மேலும் சில சலுகைகளை அடையலாம் என்ற எண்ணம் அந்த அம்மையாருக்கு. இது பருவத் துடிப்பில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மில்பிரிட்டிற்குப் புரியவில்லை. அதைப்பற்றி அவள் கவலையும் படவில்லை.

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

**30**

## இனெஸ் இராணி

**கி.பி.** 10ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் ஐரோப்பிய கண்டத்தில் மிக முன்னேறிய நாடுகளில் ஒன்று ஸ்பெயின் தேசம். பொருளாதாரத்திலும், விவசாய, கைத்தொழில் உற்பத்தியிலும் முன்னேறிய சில நாடுகள், நாடு பிடிக்கும் ஆசையில் ஏனைய நாடுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்க, ஸ்பெயின் தேசமோ தன்னைத்தானே மேலும் முன்னேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

1300 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஸ்பெயின் தேசத்தினை போர்த்துக்கல் மன்னரான நான்காம் அல்பொன்சோ ஆண்டு வந்தார். அல்பொன்சோ பரம்பரை என்பது இன்றும் ஸ்பெயின் மக்களினால் நன்கு போற்றப்படும் ஓர் உயர்ந்த ராஜ பரம்பரையினர் ஆவர். இன்றைய ஸ்பெயின் மன்னர் குடும்பத்தினரும் அல்பொன்சோவின் பரம்பரையில் வந்தவர்களே ஆவர்.

முதலாம், இரண்டாம் மூன்றாம், நான்காம் அல்பொன்சோ மன்னர்கள் முறையே தாத்தா, மகன், பேரன், பூட்டன் என்ற வழித்தோன்றல்களாகச் சிறப்பான ஆட்சி செய்து வந்தனர். ராஜ மரபுகளுக்கும், அரண்மனை சட்ட திட்ட ஒழுக்கத்திற்கும் பேர் போன அவர்கள் எந்த ஒரு காலகட்டத்திலும் ராஜ வம்சத்திற்கு முரணாகவோ அல்லது இழுக்கு ஏற்படும் விதத்திலோ நடந்துகொள்ளவில்லை.

இவ்வாறான காலகட்டத்தில் அந்த ராஜ பரம்பரையினரின் வழித்தோன்றலான 4ஆம் அல்பொன்சோ மன்னர் 1300களில் ஆட்சி செய்த போது, அவருக்கு ஓர் மகன் பிறந்தான். ஸ்பெயின் தேசத்தின் அடுத்த ராஜ வாரிசான அந்த இளவரசனுக்கு 5ஆம் அல்பொன்சோ என்றே மன்னர் பெயர் வைப்பார் என ஸ்பெயின் மக்கள் எதிர்பார்த்த போதிலும் மன்னர் அவ்வாறு வைக்கவில்லை.

4ஆம் ஸ்பெயின் ராஜ பரம்பரையினரைக் குறிக்கும் மற்றுமொரு போர்த்துக்கீசப் பெயரான பெட்ரோ எனும் பெயரை இணைத்து டாம் பெட்ரோ எனப் பட்டத்து இளவரசருக்கு அல்பொன்சோ மன்னர் பெயர் சூட்டினார். அது மட்டுமின்றி, அதன்பின் 4ஆம் அல்பொன்சோ மன்னர் தம்பதியினருக்கு வேறு வாரிசுகள் பிறக்கவில்லை.

அடுத்த மன்னராகப் போகும் பட்டத்து இளவரசரான டாம் பெட்ரோ ராஜ வம்சத்து பாரம்பரியங்களின்படியே சகல கலைகளும், படிப்புக்களும் கற்றுத் தேர்ந்ததுடன், ஸ்பெயின் ராணுவ அதிகாரிகளுக்கான உயர் பயிற்சியும் பெற்றுக் கொண்டான். அதாவது, ஸ்பெயினின் அடுத்த ராஜாவாகுவதற்கு உரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்ற ஓர் கம்பீரமான இளவரசனாகவே டாம் பெட்ரோ விளங்கினான்.

ஸ்பெயின் மன்னரின் மாளிகையில் 4ஆம் அல்பொன்சோ மன்னர் தம்பதி மற்றும் பட்டத்து இளவரசர் டாம் பெட்ரோ மட்டுமே வசித்து வந்த போதும், ராஜ பரம்பரையினருக்குரிய ஏராளமான மாடமாளிகைகளும், அரண்மனைகளும், தலைநகர் மட்றிட்டில் தாராளமாகவே காணப்பட்டன.

குறிப்பிட்ட அரச பரம்பரையினருக்குச் சொந்தமான மேற்படி அரண்மனைகளில் வசித்து வந்தவர்கள் வேறு யாருமல்ல. மன்னரின் உறவினர்கள்தான். அதிலும் 1ஆம், 2ஆம், 3ஆம் அல்பொன்சோ மன்னர்களின் சகோதர, சகோதரிகள், பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளின் வாரிசுகளின் வாரிசுகள் என நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அவற்றில் வசித்து வந்தன.

ஏற்கனவே ஸ்பெயின் தேசம் செல்வச் செழிப்புடன் இருந்தபடியினாலும் ராஜபரம்பரையினருக்கு உரிய திரண்ட சொத்துப்பத்துக்கள் தாராளமாகவே காணப்பட்டபடியினாலும் அனைத்து மன்னர் பரம்பரை வம்சத்தினருக்கும் போதிய அளவு சொத்துக்களும் வருமானமும் இருந்தன.

மேலும் ராஜ பரம்பரை வழக்கத்தின்படி அவர்கள் திருமணத்திற்கு வெளியிடங்களில் இருந்து பெண் எடுப்பதில்லை. முன்னர் ஆட்சி செய்த மன்னர்களில் இருந்து 4ஆம் அல்பொன்சோ வரை மன்னர் பரம்பரையிலேயே பெண் எடுத்து மணம் முடித்திருந்தனர்.

இதனை ஒட்டியே 4ஆம் அல்பொன்சோ மன்னரும் தனது வாரிசான பட்டத்து இளவரசனான டாம் பெட்ரோ, ராஜ உறவினர்களிடையே தனக்கு விரும்பிய பெண்ணைத் தெரிந்தெடுத்து திருமணம் செய்யும் உரிமையினை வழங்கியிருந்தார். அதை ஒத்ததாகவே ஏராளமான மன்னர் பரம்பரை இளம் பெண்களும் அச்சமயம் திருமண வயதில் இருந்தார்கள். அவர்களுள் பலருக்குப் பட்டத்து இளவரசரைத் திருமணம் புரிந்து விட வேண்டும் என்ற கடும் போட்டியே



ஏற்பட்டது.

ஆனால் விதி வேறு விதமாக விளையாடியது. அச்சமயம் ஸ்பெயினில் மன்னர் பரம்பரையினரை விட, மன்னர் பரம்பரை அல்லாத பெரும் செல்வச் செழிப்புள்ள பலரும் வசித்து வந்தனர். அவர்களில் பலர் பெரும் நிலச்சுவாந்தார்கள் ஆகவும், பெரும் வணிகர்களாகவும் காணப்பட்டனர்.

அவர்களில் ஒருவரே டி காஸ்ட்ரோ ஆவார். அவர், பெரும் செல்வாக்கு மிகுந்த குடும்பத்தவர் மட்டுமின்றி, ஸ்பெயின் அரச நிர்வாகத்தில் ஓர் பிரதானியாகவும் விளங்கினார். இதன் காரணமாக அரச குடும்பத்தினருடன் மிகவும் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்தார். அவருக்கு ஒரேயொரு மகள் இருந்தாள். அவள் தான் இனெஸ்.

வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி இனெஸ்ஸை ஒத்த வேறு ஓர் அழகி அத்தேசத்தில் காணப்படவில்லை. மிகவும் அழகிய இளம் பெண்ணான இனெஸ், ஆடல், பாடல் கலைகளுடன் கல்வி அறிவிலும் தேர்ந்து விளங்கினாள்.

இளவரசர் டாம் பெட்ரோவும் இனெஸ்ஸும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏராளமாகவே காணப்பட்டன. இயல்பாகவே ஒருவர் மீது ஒருவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டு அது காதலாக மாறியது. இக்காதல் மெள்ள மெள்ள பரவி அரசரின் காதுகளுக்கும் எட்டியது.

சிறிதும் தாமதிக்காத 4ஆம் அல்பொன்சோ மன்னர், இளவரசர் டாம் பெட்ரோவை அழைத்து விளக்கம் கேட்டார். எதையும் மறைக்க விரும்பாத டாம் பெட்ரோ, தான் இனெஸை மனதார விரும்புவதாகவும் அவளையே மணமுடிக்க விரும்புவதாகவும் கூறினார்.

இதனால் வெகுண்டெழுந்த 4ஆம் அல்பொன்சோ மன்னர், அந்தக் காதலுக்குத் தடை விதித்ததுடன் டி காஸ்ட்ரோவை, அரண்மனை பிரதானி பதவியில் இருந்து நீக்கியது மட்டுமின்றி, அந்தக் குடும்பத்தையே ஒதுக்கியும் வைத்துவிட்டார்.

ஆனால் டாம் பெட்ரோவினால் இனெஸை மறக்க முடியவில்லை. இரவோடிரவாக அரண்மனையை விட்டு வெளியேறி இனெஸை அழைத்துக் கொண்டு கோயிம்பரா எனும் இடத்திற்குச் சென்று அவளை திருமணம் முடித்து அமைதியாக வாழ்ந்து வந்தார்.

இளவரசர் டாம் பெட்ரோவும், இனெஸும் காணாமற் போனதால் 4ஆம் அல்பொன்சோ மன்னர் மேலும் சீற்றமடைந்தார். தனது உளவுப் பிரிவினர் மூலம் அவர்கள் இருக்குமிடத்தை அறிந்து, தனது படை வீரர்களை அனுப்பி இனெஸை படுகொலை செய்துவிட்டார். இது நடந்தது 1355ஆம் ஆண்டில் ஆகும். இதனால் மனமுடைந்த இளவரசர், தனக்கும் இனெஸுக்கும் பிறந்த 3 குழந்தைகளுடன் அரண்மனை செல்லமாட்டேன் எனச் சபதமெடுத்து பொது குடிமகனாக வாழ்க்கை நடாத்த ஆரம்பித்தார்.

தனது மகன் மீளவும் தன்னிடம் வராததை எண்ணி எண்ணியே கவலையடைந்த 4ஆம் அல்பொன்சோ மன்னர், நோய் வாய்ப்பட்டு 1357ஆம் ஆண்டில் மரணமானார். அவருக்கு வேறு வாரிசுகள் இல்லாதபடியினால், அவசரக் கூட்டம் கூடிய அரண்மனை பிரதானிகள் டாம் பெட்ரோவை மன்னராக முடி சூடும்படி கேட்டுக் கொண்டனர்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட டாம் பெட்ரோ, 1357ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி மன்னராகப் பதவியேற்றார். அவர் முடி சூடியதும் செய்த முதல் காரியம், இரண்டு வருடங்களுக்கு முன் தன் தந்தையினால் கொல்லப்பட்ட தனது மனைவி இனெஸ்ஸின் உடலைத் தோண்டி எடுத்து, அவளது சடலத்திற்கு இராணியாக முடி சூட்டு விழா நடாத்தினார்.

முடிசூட்டு விழா முடிந்ததும் ஸ்பெயின் தேச வழமைப்படியே அரசவை பிரதானிகளும் முக்கியஸ்தர்களும் அந்நாட்டு வழக்கப்படி பிணமான இராணியின் வலது கரத்திற்கு (எலும்பு கூட்டிற்கு) முத்தமிட்டு தமது வாழ்த்தினை தெரிவித்தனர்.

இதன் பின்னர் இனெஸ் இராணிக்கு ஒரு பிரமாண்டமான நினைவாலயத்தைக் கட்டி அதிலே மணி மகுடத்துடன் இனெஸின் உருவச் சிலையினையும் நிறுவினார். இன்னும் அது ஸ்பெயின் தேசத்தில் காணப்படுகின்றது.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## மாகாண சபைச் சட்டத்துக்கு பாராளுமன்றம், நீதிமன்றம் அங்கீகாரம்

**நேபாளத்** தலைநகரான காத்மண்டுவில் நடைபெற்ற மூன்றாவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டுக் கொழும்பு திரும்பும் வழியில், 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் திகதி புதுடில்லி வந்து சேர்ந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா, அங்கு மூன்று மணித்தியாலங்கள் தங்கியிருந்தார். இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி யுடன் இருதரப்பு விடயங்கள் குறித்து அவர் பேச்சு வார்த்தை நடத்தினார். புலிகள் இயக்கத்துடன் மோதல்கள் ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலையில், தமிழ் மக்களுக்கு இலங்கை அரசாங்கம் அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு மிக முக்கியமானதென்று ராஜிவ் காந்தி, ஜெயவர்த்தனாவிடம் கூறினார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இலங்கை அரசாங்கம் இயன்றவரை விரைவாக முழுமையாக அமுல்படுத்துவதன் மூலமே ஒன்றில் புலிகளை அரசியல் பேச்சுவார்த்தைக்கு வரத் தூண்ட முடியும் அல்லது தனிமைப்படுத்த முடியுமென்று ராஜிவ் காந்தி கூறினார். தமிழ் மக்களின் அபிலாஷைகளை உண்மையிலேயே ஈடுசெய்யக் கூடியதாகவும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடியதாகவும் அதிகாரப் பகிர்வு அமைய வேண்டும். எனவே நிதி மற்றும் காணி முகாமைத்துவம் தொடர்பான அதிகாரங்களை மாகாண நிர்வாகத்துக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய வகையில், அரசியல் யாப்பு மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் ராஜிவ் காந்தி வலியுறுத்தினார். தற்போது மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கு மேலதிக ஷரத்துக்களைச் சேர்க்க வேண்டுமானால், மேலும் காலதாமதமாகுமென்று ஜெயவர்த்தனா பதிலளித்தார்.




ஆனாலும் ராஜிவ் காந்தியின் வற்புறுத்தலுக்கு இணங்க மேலும் சில விடயங்களில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள


லலித் அதுலத் முதலி

ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்தார். காணி, காணிக் குடியேற்றம், இடைக்கால நிர்வாகத்துக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டது. மாகாண அமைச்சரவையோ அல்லது மாகாண ஆளுநரோ ஜனாதிபதியின் அறிவுறுத்தலை மீறி நடக்கும் பட்சத்தில் மாகாண சபையைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்துவது தொடர்பான ஷரத்துகளை இணைத்துக் கொள்ளவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். மாகாணங்களின் அளவு, மாகாண அமைச்சர்களின் எண்ணிக்கை, ஆளுநரின் அதிகாரங்கள் பற்றியெல்லாம் இணக்கம் காணப்பட்டது. இவை தொடர்பாக நவம்பர் ஏழாம் திகதி இரு தலைவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை - இந்தியத் தலைவர்களுக்கிடையிலான இச் சந்திப்பு இடம்பெற்று ஐந்து நாட்களின் பின்னர், அதாவது நவம்பர் மாதம் 12ஆம் திகதி அரசியலமைப்புச் சீர்திருத்த மசோதா இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது பிரதமராகவிருந்த ஆர்.பிரேமதாசா மிகுந்த தயக்கத்துடன் பாராளுமன்றத்தில் இந்த மசோதாவைச் சமர்ப்பித்தார். பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தமென்ற பெயரில்

*(அரசியல் தொடர்)*

சமர்ப்பிக்கப்பட்ட இந்த மசோதாவுக்கு ஆதரவாக 138 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் வழங்கப்பட்டன. 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தமே மாகாண சபைகளின் தோற்றத்துக்கு வழிவகுத்தது. 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்கு மேற்கொள்ளப்பட்ட இந்த 13ஆவது திருத்தம், மாகாண சுயாட்சிக்கு வழிவகுத்தது. இந்த மாகாண சுயாட்சி முறை இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையுமென்று அப்போது பல அரசியல் நோக்கர்கள் கருதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த பிரதமர் பிரேமதாசாவும் அமைச்சர் லலித் அதுலத் முதலியும் இந்த 13ஆவது திருத்தத்துக்கு உச்ச நீதிமன்றம் அங்கீகாரம் வழங்காது என்றே கருதியிருந்தனர். உச்ச நீதிமன்றம், சாதாரண சில திருத்தங்களைச் செய்தால் போதுமென்று அறிவித்ததோடு, நீதியரசர்களில் ஐவர் திருத்தத்தை ஆதரித்தும் நால்வர் எதிர்த்தும் தீர்ப்பளித்தனர். இதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தத் தேவையில்லையென்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந்த அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவளிக்கும் எம்.பிக்கள் கொல்லப்படுவார்களென்று ஜே.வி.பி. மிரட்டல் விடுத்திருந்த போதும் மூன்றில் இரண்டிற்கும் அதிகமான வாக்குகளால் பாராளுமன்றத்தில் அதிகாரப் பகிர்வு மசோதா நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றமும் உச்ச நீதிமன்றமும் மாகாண சுயாட்சிக்கு அங்கீகாரம் அளித்த நிலையில், யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு இணங்கி அரசியல் பேச்சுவார்த்தைக்கு வருமாறு புலிகள் இயக்கத்துக்கு இந்திய அரசின் மூலமாகவும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினூடாகவும் 1987ஆம் ஆண்டு நவம்பர் மாத பிற்பகுதியில் அழைப்புகள் விடுக்கப்பட்டன. எனினும் இவற்றை புலிகள் இயக்கம் நிராகரித்தது. இதனால் இலங்கை அரசாங்கத்தினதும் ஏனைய தமிழ் இயக்கங்களினதும் உதவியுடன் இலங்கையின் வடக்கு, கிழக்கில், சிவில் நிர்வாகத்தையும் சகஜ நிலையையும் ஏற்படுத்தும் பொறுப்பு இந்திய அமைதிப் படையிடம் கையளிக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு, இயன்ற வரை விரைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்றும் அதற்கிடையில் வடக்கு, கிழக்கில் ஏதோ ஒரு வகையிலான இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இக் கால கட்டங்களில் தமிழக முதல்வராக விளங்கிய எம்.ஜி.ஆர்., புலிகள் இயக்கத்திற்கு நிதியுதவி, வேறு பல உதவிகளும் வழங்கி வந்தார். அத்துடன் தமிழ் நாட்டில் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் விட்டு விடுமாறு தமிழக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. தமிழகத்தில் மட்டுமல்ல, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களுக்கும் புலிகள் இயக்க நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டிருந்தன. கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். 1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி காலமானார். எம்.ஜி.ஆரின் மரணத்தையடுத்து தமிழகக் கட்சிகளுக்கிடையில் அதிகாரப் போட்டி வெகுவாக அதிகரித்தது. பல திராவிடக் கட்சிகள், இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினையைத் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலோடு இணைத்துக் கொண்டன. இதனால் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் எடுத்த நடவடிக்கைகளை தமிழகக் கட்சிகள் கண்டித்தன. எம்.ஜி.ஆரின் அ.இ.அ.தி.மு.க.அவரின் மனைவியான ஜானகியின் அணியென்றும் நடிகை ஜெயலலிதாவின் அணியென்றும் இரண்டாகப் பிரிந்தது. தனது கணவர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளித்ததால், இந்தியா புலிகளுக்கு எதிராக எடுத்து வரும் இராணுவ நடவடிக்கையை ஆதரிப்பதாக ஜானகி, எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர் ராஜிவ் காந்தியிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஜே.வி.பி.யின் சிங்களத் தீவிரவாத சக்திகளால் அல்லது புலிகளின் தமிழ் தீவிரவாத சக்திகளால் எந்த நேரமும் தாக்கப்படலாமென்ற புலனாய்வுத் தகவல் இந்திய அரசுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் இந்திய - திபெத் எல்லைப் படைப் பிரிவினர் இந்திய உயர் ஸ்தானிகராலயப் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

இலங்கையிலிருந்து இந்தியப் படையை வாபஸ் பெறுமாறும், புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு வழங்குமாறும் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் பகிரங்கமாகவே வற்புறுத்தத் தொடங்கினர். பிரேமதாசாவும் லலித் அதுலத் முதலியும் புலிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட இரகசியத் தொடர்புகளை ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிந்திருந்தபோதும், அவர் அதில் தலையிடாப் போக்கையே கடைப்பிடித்து வந்தார். இந்திய இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்யுமாறு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு பிரேமதாசாவும் லலித் அதுலத் முதலியும் பணிப்புரை விடுத்தனர்.

இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' வுக்கும் இந்தியப் படைகளுக்குமிடையில் போதியளவுக்கு நெருக்கமான தொடர்புகளேதும் இருக்கவில்லையென்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். இந்தியப் படை, புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதேவேளை, 'றோ' புலிகளை அரசியல் பேச்சுவார்த்தைக்கு அழைத்துவரும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது இதற்கொரு நல்ல உதாரணத்தைக் கூற முடியும். ரஹீம் என்றழைக்கப்பட்ட புலி இயக்கத் தலைவர்களிலொருவரான கனகரட்னம் என்பவர் வன்னிக் காட்டுக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வரும் வழியில், பதுங்கியிருந்த இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரோடு பிரபாகரனைச் சந்திக்கச் சென்ற 'றோ'வின் உளவாளியொருவரும் அப்போது இந்தியப் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இந்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு, பின்னர் யுத்த நிறுத்தம் செய்வது பற்றிப் பேசுவதற்காகவே ரஹீமுடன் 'றோ' உளவாளியும் சென்றிருந்தார். சுட்டுக் கொல்லப்பட்ட 'றோ' உளவாளியிடமிருந்தும் ரஹீமிடமிருந்தும் எடுக்கப்பட்ட கடிதங்களிலிருந்தே அவர்கள் ஏன் பிரபாகரனைச் சந்திக்கச் சென்றார்களென்ற விபரமே இந்தியப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் கல்கட்டுக்குத் தெரிய வந்தது. இச் சம்பவம் 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடை பெற்றது.

(தொடர்ந்து வடியும்....)




கோவிந்தன் அவளை தன்னோடு சேர்த்துப் பிடித்து நிறுத்திக் கொண்டான். சற்று நேரத்தில் அவள் உடல் அசைவற்று விழுந்தது. லாபரெட்டரி அறையை நோக்கிச் சென்றான் கோவிந்தன்.

அங்கே ஸ்ரீதேவி இருந்தாள். அந்தப் பெண்ணின் கொலையைப் பற்றிக் கேட்ட ஸ்ரீதேவியிடம் தன் சக்தி பற்றிக் கூறுகிறான் கோவிந்தன்.

ஸ்ரீதேவி அவன் இடது மணிக்கட்டைப் பிடித்ததும் இது அப்படியே கழன்று விழுந்து எரிகிறது. கோவிந்தன் அங்கிருந்து பறந்து விடுகிறான்.

தோல்வியுடன் வந்தவனை விசாரிக்கிறார் ஜயந்தன்.

"**நா**ளைக்கு ஞாயிற்றுக்கிழமை ஆயிற்றே, எப்படி இருந்தாலும் இதுவரை நாம் நினைத்தது மாதிரி எதுவும் நடக்கவில்லை. ராத்திரி நேரமாகிவிட்டால், அவளுக்கு உருவம் கிடைத்துவிடும். கோயிலில் இருக்கும் சௌபர்ணிகா என்ற மோகினியின் சக்தி அவளுள் ஆவேசித்திருப்பதால், கோவிந்தனால் ஸ்ரீதேவியுடன் மோத முடியவில்லை." ஜயந்தன் தனது அபிப்பிராயத்தைக் கூறினார்.

"அப்படியானால்...?"

"நான் சொன்னதுதான் வழி!"

"பகல் நேரத்தில் அங்கிருந்து யார் எலும்புக்கூட்டை எடுத்து வருவது?"

"அதைப்பற்றித்தான் நானும் யோசிக்கிறேன்-! ஜயந்தன் வாசலைத்தாண்டி வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இனிமேல் பிரபாகரனால் அதைத் தொடவே முடியாது என்பது உறுதியாகிவிட்டது. அப்படியானால் அவனால் அந்த புரபஸரை அழிக்கவும் முடியாது இல்லையா?"

சந்து நாயர் ஜயந்தனைப் பார்த்தார்.

"அதுதான் உண்மை நிலை, ஆனால் ஒரேயொரு அனுகூலம் என்னவென்றால் பிரபாகரனை, அந்தப் புரபஸர் இன்னும் நம்புவதுதான். பிரபாகரன் மீது அந்த மனிதருக்கு எந்தவிதமான சந்தேகமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை."

"அதனால் நமக்கு என்ன இலாபம்?"

"இருக்கிறது. ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்க

**எழுதுவது**
**சிவன்**

வேண்டியதுதான். நாம் சும்மா உட்கார்ந்திருந்தால் நிலைமை மோசமாகிவிடும்."

ஜயந்தன் பிரபாகரனை அழைத்தார். பிரபாகரன் அறைக்குள் வந்தான்.

"நான் என்ன செய்யணும் சொல்லுங்க!" பிரபாகரனை கோவிந்தன் கேட்டான்.

"உன்னால் அந்த புரபஸரைக் கொல்ல முடியும். அந்த ஆள் உன்னை ஒருபோதும் அடையாளம் தெரிந்து கொள்ளமாட்டான் என்று தோன்றுகிறது. உன்னை இன்னும் பிரபாகரன் என்றேதான் நம்பிக்கொண்டிருக்கிறான். அதனால் அவனது இருப்பிடத்திலேயே நீ அவனுக்குத் துணையாகப் படுத்துக் கொள்ளவும் செய்யலலாம், அதை நீ இன்றைக்கே கூடச் செய்யலாம். என்ன சொல்கிறாய்?" - ஜயந்தன் கேட்டார்.

"அதில் ஒன்றும் சிக்கலில்லை. நல்ல யோசனைதான்." - கோவிந்தன் ஒப்புக் கொண்டான்.

அவர்களது யோசனைப்படி பிரபாகரன், குமாரின் இல்லத்துக்கு வந்து சேர்ந்தான். நேரம் நள்ளிரவாகியிருந்தது.

அன்று துர்க்காஷ்டமி நாளாக இருந்ததால் பகவதி கோயிலில் தேவி இல்லை. தேவி தனது பரிவாரங்களுடன் நீராடப் போயிருந்தார். அவருடன் மோகினிகள், பிரம்ம ரஷஸுகள்



போன்றோரும் போக வேண்டியிருந்ததால் ஸ்ரீதேவியும் தனது இருப்பிடத்திலிருந்து வெளியேறியிருந்தாள். இல்லத்தில் குமார் மட்டுமே தனியாக இருந்தார்.

பிரபாகரன் தயங்கியவாறே தெருவாசற்படியிலிருந்து உட்புறம் பார்த்தான். நிலா வெளிச்சம் அவ்வளவு தெளிவாக இல்லாவிட்டாலும் அவனால் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஊனமாகிப் போன இடது கை அப்போதும் வலித்தது. அதற்குக் காரணமான ஸ்ரீதேவி மீது அடங்காத பகையுணர்வு எழவும் செய்தது.

எங்கேயாவது ஒரு சிறு இடைவெளி கிடைத்து, அவள் அசந்து போனால் நிச்சயமாகத் தொலைத்துக் கட்டிவிட வேண்டும் என்கிற வெறி அவனுள் எழுந்தது. அதே சமயம் தனது கையைப் பார்க்கும் போது குமார் என்ன நினைப்பான் என்பதும் நினைவில் எழுந்தது. முடிந்த மட்டும் கையை வெளிக்காட்டாமல் சட்டைக்குள்ளேயே மறைத்து வைப்பது என்றும் தீர்மானித்தான்.

தெருவாசற்படிதாண்டி, முற்றத்துக்கு வந்து காதைக் கூர்மையாக்கிக் கவனித்தான். உள்ளே ஏதாவது பேச்சுக் கேட்கிறதா என்று பார்த்தான். இல்லை மாறாக அமைதியாக இருந்தது. ஓர் இலை அசையும் சத்தம்கூடக் கேட்கவில்லை.

பிரபாகரன் மெதுவாக வராந்தாவில் காலெடுத்து வைத்தான். அங்கிருந்தவாறே சுற்றும் முற்றும் பார்த்தான். ஸ்ரீதேவி அங்கு இருக்க வாய்ப்பு இல்லைதான் என்றாலும் ஒருவேளை தனது யூகத்திற்கு மாறாக இருந்துவிட்டால்...கையின் வலி அவனை மேலும் பயப்படும்படி செய்தது.

இந்த நிலையில் மறுபடி அவளது கண்ணில் பட்டுவிட்டால், வலது கையும் ஊனமாகி விடலாம் அல்லது மொத்த உடம்புமே கூட எரிந்து போகலாம்.

சற்று நேரம் காத்திருந்த போதும் யாரும் தட்டுப்படாததால் மேலும் முன்னேறுவதென்ற முடிவுக்கு வந்தான். ஆனால் கதவு உட்புறமாகத் தாழிடப் பட்டிருந்தது.

தனது பழைய வித்தையை இங்கு பிரயோகிப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதால் என்ன செய்யலாம் என்று யோசித்தான். சட்டென்று பின்புறம் வளர்ந்திருக்கும் மாமரம் ஞாபகம் வந்தது. உடனே பின்புறம் விரைந்தான்.

மாமரத்தின் மீது ஏறினான். அது மிகவும் சுலபமான வேலையாக இருந்தது. அங்கிருந்து மேலேறி சரிவின் மறுபுறம் கவனத்துடன் நகர்ந்தான். கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு கீழ் நோக்கி நகர்ந்த போதும் அவனுக்கு எந்த விதமான பயமும் தோன்றவில்லை. அதுவே வியப்பாக இருந்தது. அப்படியானால் தன்னால் நெட்டுக்குத்தான சுவரில் கூட தாராளமாக நடக்க முடியும் என்று தோன்றியது.

ஓட்டுப் பகுதியின் கடைசியை நெருங்கு முன் ஒரு முற்றத்தில் குதித்தான். அதுவும் அவனுக்கு மிகவும் விசித்திரமான அனுபவமாக இருந்தது. பறவை ஒன்று மிகவும் லாவகமாகப் பறந்து இறங்குவது போல் தரைப் பகுதியை அடைந்தான்.

தனக்குள், தானே எதிர்பார்க்காத என்னென்னமோ மாற்றங்களும், சக்திகளும் புகுந்திருப்பதாக பிரபாகரன் என்கிற கோவிந்தனுக்குத் தோன்றியது. தைரியம் அதிகரித்திருந்தது.

(வாசனை வீசும்....)

**மனதுக்கு நிம்மதி**

# நீங்கள்தான் முன் உதாரணம்!

"சுவாமி... என் மகள் இரண்டாம் வகுப்புப் படிக்கிறாள். ஆனாலும், அவள் செய்கிற சண்டித்தனத்தைத் தாங்கமுடியவில்லை. என் பேச்சையே அவள் கேட்பதில்லை. 'வெளியில் விளையாடிவிட்டு வந்தால் காலைக் கழுவிக் கொண்டு வீட்டுக்குள் வா', 'பள்ளிக்கூடத்தில் இருந்து வந்ததும் உடனே வீட்டுப்பாடம் செய்துவிடு' என்று நான் சொல்லும் சின்னச் சின்ன அறிவுரைகளைக்கூட அவள் கேட்பதில்லை. இப்பவே அவள் இப்படி இருந்தால், வளர்ந்து பெரியவளானால் எப்படி இருப்பாளோ? என்று பயமாக இருக்கிறது..." - இப்படிப் புலம்பாத பெற்றோர் யாராவது உண்டா?

ஒரு குட்டிக் கதை சொல்கிறேன்.

தமிழ்நாடு, பஞ்சாப், காஷ்மீர் ஆகிய மாநிலங்களின் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஒரு பெரிய கப்பலில் சந்தித்துக் கொண்டார்கள்.



கப்பல் தண்ணீரைக் கிழித்தபடி வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

பொலிஸ் துறையில் உயரதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது ஒரு முக்கியமான விஷயம் அல்லவா? அதனால், தங்கள் மாநில பொலிஸ்காரர்கள் எந்த அளவுக்குக் கீழ்ப்படியும் குணம் படைத்தவர்கள் என்பதை நிருபித்துக் காட்டுவதற்காகப் பஞ்சாப்பைச் சேர்ந்த காவல்த்துறை அதிகாரி, தன்னோடு வந்திருந்த ஒரு பொலிஸ்காரரை அழைத்து 'உடனே இந்தக் கப்பலிலிருந்து கடலில் குதி!' என்று கட்டளையிட்டார்.

'ஏன்?எதற்கு?' என்று எந்தக் கேள்வியும் எழுப்பாமல் அந்த பொலிஸ்காரர் சட்டென்று கடலில் குதித்தார். பெரிதும் மகிழ்ந்து போன பஞ்சாப் அதிகாரி, பக்கத்தில் இருந்த மற்ற அதிகாரிகளைப் பார்த்து, "எங்கள் பொலிஸ்காராரின் தைரியத்தையும் கீழ்ப்படியும் குணத்தையும் பார்த்தீர்களா?" என்று பெருமை பொங்கச் சொன்னார்.

உடனே தனது மாநில பொலிஸ்காரர்களின் கீழ்ப்படிதல் குணமும் தைரியமும் பஞ்சாப் பொலிஸ்காரருக்குச் சற்றும் குறைந்ததில்லை என்று காட்டும்விதமாக காஷ்மீர் மாநிலக் காவல்துறை அதிகாரி, தன்னுடைய போலீஸ்காரரை அழைத்து, "இந்தக் கப்பலின் முதல் தளத்துக்குப் போய், அங்கிருந்து கடலில் குதி!" என்று கட்டளையிட்டார்.

அடுத்த கணம், அந்த பொலிஸ்காரர் 'தொப்' என்று கடலில் குதிக்கும் சத்தம் கேட்டது. உடனே காஷ்மீர் காவல்துறை அதிகாரி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு, "பார்த்தீர்களா.... எங்கள் போலீஸ்காரரின் தைரியத்தையும் கீழ்ப்படிதல் குணத்தையும்!" என்று உற்சாகமாகச் சொன்னார்.

இப்போது தமிழகக் காவல்துறை அதிகாரி, "இதென்ன பெரிய விஷயம்... உங்கள் பொலிஸ்காரர்களைவிட எங்கள் பொலிஸ்காரர்கள் தைரியம் மிகுந்தவர்கள். அதை இப்போதே நிரூபிக்கிறேன், பாருங்கள்..." என்று தனது பொலிஸ்காரர்களில் ஒருவரை அழைத்து, "கப்பலின் இரண்டாவது மாடிக்குப் போய், அங்கிருந்து கடலில் குதி!" என்று கட்டளையிட்டார்.

அதற்கு அந்தப் பொலிஸ்காரர், "நான் என்ன உன் வீட்டு வேலைக்காரன்னு நினைச்சியா? அதெல்லாம் முடியாது போ!" என்று முறைக்க... தமிழகக் காவல்த்துறை அதிகாரி சொன்னாராம்... "பார்த்தீர்களா, எங்கள் பொலிஸ்காராரின் தைரியத்தை!"

இப்போதெல்லாம் நம் நாட்டில் பெரும்பாலோர் அரசு அதிகாரிகளுக்கோ, பொலிஸ்காரர்களுக்கோ பயப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்று அனைவருக்குமே தெரியும். ஒரு சில நேர்மையான அதிகாரிகளைத் தவிர, மற்ற பொலிஸ் அதிகாரிகளும் அரசு அதிகாரிகளும் சட்டங்களை தங்களுக்குச் சாதகமாக வளைத்துக்கொள்ளுவதை நாமே பார்க்கிறோம். தவறு செய்யும் ஒருவரே, அடுத்தவரைத் 'தவறு செய்யாதே!' என்று சொன்னால் யாராவது காது கொடுத்துக் கேட்பார்களா? நம் நாட்டில் அரசு ஊழியர்களுக்கும் பொலிஸ்காரர்களுக்கும் மரியாதை இல்லாமல் போனதற்கு முதல் காரணம் இதுதான்.

"என்ன சுவாமி, எங்கள் குழந்தை சொல்பேச்சு கேட்கமாட்டேனென்கின்றது... அதை எப்படி வழிக்குக் கொண்டுவரலாம் என்று கேட்க வந்தால், அதை விட்டுவிட்டு பொலிஸ், சட்டம் என்று ஏதேதோ பேசுகிறீர்களே!" என்று நீங்கள் கேட்கக்கூடும்.

கீழ்ப்படிதல் என்கிற குணம் எப்படி வரும் என்பதை விளக்கத்தான் இந்தக் கருத்துக்களையும் உதாரணங்களையும் சொன்னேன்.

"காலையில் எழுந்ததும் வாயில் பிரஷ்ஷை வைத்துக்கொண்டு வாசலில் போய் நிற்காதே!"

"சாவிக் கொத்து, சீப்பு, புத்தகம், என்று எதுவாக இருந்தாலும் எடுத்ததை எடுத்த இடத்தில் வை!"

இப்படி, எந்த் வீட்டில் பார்த்தாலும் காலையில் இருந்து இரவு படுக்கப்போகும் வரை குழந்தைகளை அதைச் செய், இதைச் செய்யாதே என்று அதட்டிக் கொண்டே இருப்பார்கள்.



குழந்தைகளோ அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் தங்கள் போக்கிலேயே நடப்பார்கள்.

"சரி, பின்னே எப்படித்தான் குழந்தைகளைத் திருத்துவது?" என்கிறீர்களா?

மிகச் சுலபம்.

குழந்தைகளுக்குச் சரியான முன் உதாரணமாக நீங்களே வாழ்ந்து காட்டுங்கள். கேள்வி கேட்காமல் குழந்தைகள் உங்களைப் பின்பற்றுவார்கள். இதைத் தவிர, வேறு அதட்டல்களோ, புத்திமதிகளோ அவர்களுக்குத் தேவையில்லை.

(தொடர்ந்து வரும்.....)

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது றாஹில்

### உன் உயிரில் குடியேறுவதற்கு!

நீ நாற்பத்தாறு கிலோ ரோஜா!

நான் உனக்கு வைத்த பெயர் இது.

நீ என் வகுப்பறை நிலா. உன் மேசையில் நீ நாற்பத்தாறு கிலோ ரோஜா என்று எழுதிவைத்தேன்.

நீ விழிகளால் அதில் வீழுந்ததும் உன்னில் கோபம் ஊறியது.

இதை எழுதியது யார்?

நீ மனதுக்குள் போட்ட சத்தம் எனக்கும் கேட்டது.

அதை அழித்தாய் நீ! எனக்குள் நான் எழுதியதை எப்படி அழிப்பாய்?.

இடைவேளை. வகுப்பு வெற்றிடமாகக் கிடந்தது.

உனது நோட் புத்தகங்களில் நீ நாற்பத்தாறு கிலோ ரோஜா என்று எழுதுகோல் உளியால் அவசரமாகச் செதுக்கினேன்.

நீ நோட் புத்தகங்களைப் பார்த்தாய். கிழித்தாய்.

நான் உன்னைப் பற்றிச் செதுக்கிய அழகுக் குறிப்பை நீ சிறிதும் ரசிக்கவில்லை. அவமானப்படுத்தினாய்.

நீ இதயம் இறந்தவளா? அழகிகள் எல்லோரும் இப்படித்தானா? நீ உன்னை ரசிக்கத் தெரியாதவளா?

எனக்குள் வினாக்கள் வரிசையாக நின்றன.

மொழியால் ஒரு மலர் செய்தேன் உனக்காக.

என் விழிகள் உன்னில் முளைக்கும் போது, என் உயிரில் சத்தம் கேட்கிறது.

உன் முகம் என் மனதில் நுழையும்போது, என் ரத்தம் முத்தங்கள் பூக்கின்றன. ஆதலால் உன்னைத் தேடிப்பார் நான் கிடைப்பேன் உனக்கு!

உன் நோட் புத்தகத்தினுள் நுழைந்தேன். என்னை நீ விழிகளால் மேயும் வரை என் உயிர் காத்திருந்தது.

அது உன் கண்களில் வழுக்கி விழுந்தது. நீ மிக ரகசியமாய்ப் பருகினாய். நீ வெளியே சென்றாய். திரும்பி வரும்போது பிரின்ஸ்பால் உடன் வந்தாய்.

லவ் லெட்டர் எழுதிக் கொடுத்தது யார்...?

சா...ர்...! நான் தான்!

காதல் வந்தால் பசுவும் புலித் துணிவு பெறுகிறது.

நீ...யா...யா...?? நீ மனதுக்குள் சொல்லியது என் மனதிலும் ஒலித்ததடி.

ஒரு வார வீடுமுறை எனக்கு மட்டும் தரப்பட்டது.

உன் மனதை வாங்குவதற்கு மன்னனாக வேண்டுமா?

உன் அழகை நான் அடைவதற்கு சாஜஹானாக வேண்டுமா?

உன் உயிரில் நான் குடியேறுவதற்கு...

உன் இதயத்தில் நான் ஒலிப்பதற்கு...

உன் வாழ்க்கையை நான் வணங்குவதற்குக் காதல் என்ற தகுதி போதாதா? என் உயிரைப் பதிவு செய்து உன் விலாசத்தில் வைக்கச் செய்தேன்.

ஒரு வாரம் உதிர்ந்து போனது. அதே காதலுடன் அதே ஆவலுடன் மீண்டும் கல்லூரியில் சுவாசித்தேன்.

வகுப்பில் நீ இல்லை. தாமரையில்லாத குளமானேன்.

மீண்டும் ஒரு வாரம் தீத்துளியாக உதிர்ந்தது.

என் முகவரி தேடி ஒரு மடல் வந்தது. பிரித்தேன். அதில் நீ இருந்தாய்.

உன் துணிவு என்னை அசத்திவிட்டது. உன் மொழி உன்னை உயர்த்திவிட்டது. அதனால் என் வயது உன்னில் வழுக்கி வீழுந்துவிட்டது.

என் மனது உன்னை அடைந்துவிட்டது. அடுத்த வாரம் காதலுடன் வருகிறேன்.

என் வானம் எனக்குக் கிடைத்தது போல் நான் மாறினேன்.

தனக்கே தெரியாமல் தோன்றுவதுதான் காதல்.

காதல் அழகாகிறது திறமைகள் வெளிப்படும்போது! காதல் உருவாகிறது தகைமை அழகாகும் போது!!

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. **187**க்கான சரியான விடைகளை அனுப்பி **250** ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ஏ. ஆர். எம். .இறுசாத், 383/1, புதிய தெரு, வெலிகாமம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. அ. ஹம்னா, இல. 20, கோட் வீதி, திருகோணமலை..
2. வ. கிருஷ்ணகுமார், குருமண்காடு, வவுனியா.
3. ப. வசந்தன், பாண்டிருப்பு - 2, மட்டக்களப்பு.
4. எஸ். பிரதிபா, பிரதான வீதி, புத்தளம்.
5. வி. ஸ்டிபன், இல. 32, ஜெயந்தி மாவத்த, அனுராதபுரம்.
6. வ. கீர்த்திகா, 1ஆம் ஒழுங்கை, பஞ்சிகாவத்த, கொழும்பு - 10.
7. ஜெனார்த்தன், 2ஆம் ஒழுங்கை, தெஹிவளை.
8. மு. ஹதிஜா, பிரதான வீதி, புதிய காத்தான்குடி.
9, சாப்பீர் டீன், ஸ்ரீகுணவர்தன மாவத்த, கல்கிசை.
10. பெ. பிரதீபன், பிரதான வீதி, சின்னக்கடை, மன்னார்.

### குறுக்கெழத்துப் போட்டி 189

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | ■ |
| 19 | 20 | 21 | 22 | ■ | 24 |
| ■ | ■ | 27 | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 |

**இடமிருந்து வலம்**

1.இஸ்லாமியர்களின் பண்டிகை தினம் ஒன்று.
7.இராமாயணப் பாத்திரம் ஒன்று.
10.வெட்கம் என்றும் கூறலாம் (திரும்பியுள்ளது).
13.நீர் நிலை (குழம்பியுள்ளது)
19.அடையாளம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
29.இராகமொன்று (திரும்பியுள்ளது).
31.இதனை தலையில் தாங்கி ஆடுவர் (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. தற்காலிகமாக அமைக்கும் வசிப்பிடம் (குழம்பியுள்ளது).
2. ரஜினிகாந்த் நடித்த திரைப்படமொன்று (குழம்பியுள்ளது).
4. துளையிடுதல் அல்லது துளை என்று பொருள் (குழம்பியுள்ளது).
6. கயிறு என்று பொருள் (தலைகீழ்).
15. உச்சி அல்லது மலை என்றும் கூறலாம்.
24. குற்றம் என்றும் பொருள்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 187 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச [1] | ம் [2] | ஆ [3] | ர் [4] | ■ | ண [6] |
| ம [7] | சா [8] | ம் [9] | ■ | இ [11] | ஹோ [12] |
| ம் [13] | த [14] | ற [15] | ■ | ர் [17] | க [18] |
| ண [19] | ■ | ■ | க [22] | யா [23] | ம் [24] |
| ■ | ச [26] | மா [27] | தி [28] | ■ | ■ |
| ம [31] | னி [32] | ■ | ர் [34] | ■ | கை [36] |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 10.10.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-189
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# கலைந்து போன கனவுகள்

**விஜய்!** மேற்படிப்புக்களை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருந்தான். அவனது குடும்பம் மிகவும் பின்தங்கிய கிராமம் ஒன்றில் வசித்து வந்தது. தனது கஷ்டங்கள் எல்லாவற்றையும் மறந்து வெயிலிலும், மழையிலும் படாத பாடுபட்டு மகனைப் படிக்க வைத்தார் அவனது அப்பாவான சுந்தரம் ஐயா. விஜய்க்கும் வயது இருபத்திநான்காகிக் கொண்டிருந்தது. நன்றாகப் படித்தும் வேலை கிடைக்கவில்லை. வெளிநாடு போய்ப் பார்க்கலாம் என்று எண்ணியவனாக வெளிநாட்டு முகவர் ஒருவரை பார்ப்பதற்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டான் விஜய்.

"கடவுளே!...நான் போற காரியம் நிறைவேற நீதான் துணை இருக்கனும்" அப்பதான்...அக்காவுக்கு கல்யாணம். தங்கை ரஞ்சிதாவையும் நல்ல படிக்க வைக்க முடியும். அப்பாவுக்கும் முடியாது...கடவுளே!...எனக்கும் என் குடும்பத்துக்கும் நல்லதோர் எதிர்காலத்தைக் காட்டு கடவுளே...! என்ற மனக் குமுறலோடு கடவுளை வேண்டியவனாக அமைதியாய் அமர்ந்து கொண்டிருந்தான். பஸ்ஸும்




குறிப்பிட்ட இடத்தை சென்றதும் விஜய் இறங்கி ஏஜென்ஸி ஆபீஸை நோக்கி நடந்தான்.

அங்கே விஜயைப் போன்ற ஏராளமான இளைஞர்களைக் கண்டதும், இந்த இவ்வளவு பேரும் வெளிநாடு போகத்தான் வந்திருக்காங்களா என எண்ணியவனாக அருகில் இருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டான். அவனது விழியின் தேடல் அங்கு சுற்றித் திரியும் உத்தியோகத்தர்களைப் பார்த்து தான் எவ்வளவு படித்தும் பிரயோசனம் இல்லையே... எனத் தன்னைத்தானே நொந்தவனாக அவனை அறியாமலே கண்ணீர் கசிந்ததை உணர்ந்து கொண்டான்.

ஹலோ...விஜய்! என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அருகில் அவன் கூடப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்த சாஜஹான் அமர்ந்திருந்தான். விஜய்க்கும் சாஜஹானுக்கும் படித்த காலத்தில் இருந்தே ஆகாது. என்ன விஜய் சுகமா இருக்கியா. அம்மா, அப்பா எல்லோரும் சுகமா இருக்காங்களா? என்று தன் இஷ்டப்படி கதைத்துக் கொண்டே இருந்தான் சாஜஹான். சாஜஹான் பெரும் பணக்காரன். அவனது சொந்த ஊரும் கண்டிதான். பேராதனையில்தான் இருவரும் படித்திருந்தார்கள். விஜய், சாஜஹானின் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேயில்லை.

இவன் எங்கே இங்கே வந்தான். பாவம் வெளிநாடு போகப் போகிறானாக்கும் என்று நினைத்துக் கொண்ட விஜய், டேய் சாஜஹான் நீ இன்னும் இப்படித்தான் இருக்கிறாயா என சோகம் கலைந்தவனாக மெதுவாய்க் கேட்டான் விஜய். ஆனால் சாஜஹான் பெரும் பணக்காரன் என்பதோ கார் வியாபாரம் செய்பவன் என்பதோ விஜய்க்குத் தெரியாத விடயமாக இருந்தது. சாஜஹான் படிப்பில் கெட்டிக்காரன் என்பது மட்டும் விஜய்க்குத் தெரியும். ஆனால் சாஜஹானுக்கு பல்கலைக்கழக வாழ்வு மறந்துவிட்டாலும் விஜய் ஓர் ஏழையானவன் மிகவும் பண்பானவன், நல்ல திறமையானவன். என்பதையெல்லாம் அறிந்து வைத்திருந்தான்.

விஜய் இன்டர்வியூ முடிந்த பின் இருவரும் பழையதை மறந்து புதிய நண்பர்களாகப் பழகி மீண்டும் சந்திப்போம் என விடைபெற நினைக்கும் போது சாஜஹானுடைய பொக்கட்டிலிருந்த செல்போன் அலறியது. எடுத்துப் பேசினான். "விஜய்...வா...போவோம்...என இருவரும் திருகோணமலை பஸ்ஸில் ஏறி அருகருகில் அமர்ந்து கொண்டனர். தங்களது கடந்த காலங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளை இருவரும் பேசிக் கொண்டே சென்றனர்.

விஜயின் வீட்டில் தன் மகன் எப்படியாவது வெளிநாடு போகனும், அவன் நல்லா இருக்கனும் என்ற எண்ணத்தோடு அவனுக்காக அவனது குடும்பமே கடவுளை பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. நம் நாட்டில் அன்றாடம் இடம்பெறும் காரணமற்ற ஆட்கடத்தல்கள், கொலைகள் தன் மகனுக்கும் நிகழக்கூடாது என்பதுதான் அவர்களது ஆசை.

டேய்! விஜய் ஒங்க ஊருக்கு நான் இப்படியே வாரன் டா பிளீஸ்...என அருகில் இருந்த சாஜஹான் சொன்னதும் என்ன எங்க ஊருக்கா...? என்று வியப்புடன் கேட்டான் விஜய். ஏன்டா நான் வரக்கூடாதா? சாஜஹான் கேட்க இல்ல...வா...என்றான் விஜய்! அவன் வருவதால் தனது ஏழ்மை, குச்சில் வீடு, ஓட்டைப் பீங்கானில் சாப்பிடுவது எல்லாம் கண்டு நக்கல் பண்ணுவானோ...இவனை எப்படிக் கவனிப்பது, வரப் போறன் என்றனை...வேனாம்னும் சொல்ல முடியாதே. கடவுளே நல்ல வழியக் காட்டு என்றவனாக மனதைத் தேற்றிக் கொண்டான் விஜய்.

விஜய் நீ ஏன் வெளிநாடு போகப் போற, நம்ம நாட்டுல வேல இல்லையா. உனக்கு நல்ல டெலன் இருக்குத்தானே. என்றான் சாஜஹான். "ம் எங்க ஊர்ல இருந்தா உனக்குத் தெரியும் என்றான் விஜய். அதுக்குத் தானே வாரன் என்று சாஜஹானும் சொன்னான். இப்படியே இருவரும் பேசிப் பேசி திருகோணமலையில் இருக்கும், விஜயின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

சாஜஹான் அந்த கிராமத்தை ரசித்தான். அவன் முதன் முதலாக ஒரு கிராமத்துக்கு வந்திருக்கிறான். கிராமம் என்றால் அவனுக்கு மிகவும் பிடிக்கும். மறுநாள் காலை இருவரும் எழுந்து வாய்க்கால் நீரில் குளித்து விட்டு, வீடு சென்று காலை உணவாக பனிஸும், தேநீரும் உண்டுவிட்டு ஊர்பார்க்கப் போனார்கள். சாஜஹான் தனது செல்போனை ரஞ்சிதாவின் மேசையில் வைத்துவிட்டுச் சென்றான். அப்போது செல்போன் அலறியது. ரஞ்சிதா ஓ.கே. பண்ணி பேசினாள். "டேய்...சாஜஹான் எங்க இருக்க...எப்ப வருவ...உனக்காக ஆபீஸில எல்லாரும் காத்திட்டுருக்காங்க. கம் இமிரீயட்லி..." என்ற பேச்சோடு போன் கட்டானது. அப்போது போனை எடுத்து ஒவ்வொரு பட்டன்களையும் ரஞ்சிதா தட்டிப்பார்த்தாள்...அதில் யப்பான், ஹொங்கொங், பிரான்ஸ் இப்படிப் பல வெளிநாட்டு தொலைபேசி இலக்கங்கள் சேகரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து...தடுமாறிப் போனாள் ரஞ்சிதா...

இரண்டாவது நாள் காலையில் சாஜஹான் கண்டிக்குப் போக ஆயத்தமானான். அப்போது ரஞ்சிதா நீ யாரு என்றவுடன் சாஜஹான் அதிர்ச்சிக்குள்ளானான். இப்படித்தான் விஜயின் அப்பா சுந்தரம், அக்கா காயத்திரி எல்லோரும் அதிர்ச்சியானார்கள். அப்போது கையில் இருந்த போனை கொடுத்தாள் ரஞ்சிதா. சாஜஹான் போனை பார்த்தான். தனக்குக் கோல் வந்திருப்பதைத் தெரிந்து கொண்டான். எனக்கு நல்ல நண்பர்கள் இருந்தாங்க. ஆனா இப்ப இல்ல...ஏழைகளை எனக்கு ரொம்பப் பிடிக்கும்...இவனை நல்ல நண்பனா. ஏத்துக்கிட்டன்...இவனுக்கும் நான் சாஜஹான் என்பது மட்டும்தான் தெரியும். மத்த விடயம் எதுவுமே தெரியாதவன்...ஆமா! நான் பணக்காரன். கார் வியாபாரம், தங்கவியாபாரம். இப்படி ஏகப்பட்ட பிஸ்னஸ். ஆனால்! இங்கு உன்னோடு பழகிற சந்தோசம் நிம்மதி எல்லாம் அங்கெல்லாம் இல்ல. இதெல்லாம் சொன்னா. நீ ஒண்ட வீட்டுக்குக் கூட்டி வர மாட்ட...அதனாலதான் சொல்லல வெறி சொறி.

நீ இனி வெளிநாடு போக வேனாம்...என்னோடயே வா. என்ட கார் கம்பனியில நல்ல வேலை இருக்கு என கூட்டிச் சென்றான். சாஜஹான். சொன்னது போலவே. தரமான வேலையும் சம்பளமும் விஜய்க்குக் கிடைத்தது. அவனது எதிர்காலம் வெளிச்சமாகி கொண்டே இருந்தது. வீடு, வாசல்கள் எல்லாம் கட்டி அக்காவின் திருமணமும் நன்றாக முடிந்தது. விஜய்யின் தங்கை ரஞ்சிதாவும் நன்றாகப் படித்து, மருத்துத் துறையில் முன்னேறினாள். இப்படியே இரண்டு மூன்று வருடங்கள் கழிந்து போனது. விஜய் எதிர்பார்த்திருந்த வாழ்க்கையும் தோற்றுப் போகும் படியாக சாஜஹானின் உதவியால் விஜய் வெற்றிப் படிகளைத் தாண்டி நேர்வழியில் நம்பிக்கை தளராதவனாக இருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை சாஜஹானிடமிருந்து கோல் வந்தது. "விஜய் நான் அவசரமா யப்பான் போறன். கம்பனி முழுப்பொறுப்புக்களையும் நீயே பார்த்துக் கொள்...நான் வர்ரத்துக்கு இரண்டு மாதமாகலாம். என்றான். சரிடா நான் இன்னைக்கு ஊருக்குப் போய் வரவா என்று விஜய் கேட்க, ஓ.கே...போய்ட்டு மூணு நாளைக்குள் வந்துடு சரியா என்றான் சாஜஹான். நீண்ட இடைவேளைக்குப் பிறகு அப்பா அம்மா அக்கா தங்கை எல்லோரையும் பார்க்கப் போகும் சந்தோசத்தில் ஊருக்குப் புறப்பட்டு வந்தான் விஜய்!

மகன் வரும் சந்தோசத்தில் அவனது அப்பா, அம்மா, எல்லோருமே அளவில்லா மகிழ்ச்சியில் காணப்பட்டனர். அப்போது பகல் பதினொரு மணி இருக்கும். கண்டியிலிருந்து திருகோணமலைக்கு வந்து கொண்டிருந்த தனியார் பஸ்வண்டி கிளைமோர் தாக்குதலில் சிக்குண்டு சிவிலியன்கள் எட்டு பேர் மரணமானார்கள் என்ற செய்தியோடு விஜயும் இறந்து போனதாகத் தகவல் கிடைத்தது. இச் செய்தி கேட்டு விஜயின் குடும்பமே சோகக் கடலில் மூழ்கிப் போனது.

சாஜஹானும் அழுது புலம்பினான். அவனது உயிர் நண்பனின் சாவு இவ்வளவு கெதியில் நிகழும் என யாருமே எதிர்பார்க்கவில்லை. தனது குடும்பத்தைத் தன் உழைப்பால் நல்ல நிலைக்குக் கொண்டு வந்தவனுக்கு அவர்களோடு சந்தோசமாக வாழக் கொடுத்து வைக்கவில்லை.

# நெஞ்சத்தில் நீ...

யோசிக்க அவசியமே இல்லை நிறைய யோசித்துத்தான் முடிவுக்கு வந்தேன். உங்கள் மேல் கோபமோ வெறுப்போ இல்லை. ஆனால் உங்களைப் பிடித்திருக்கிறது. இன்னொருவனைக் காதலித்துக்கொண்டு உங்களை காதலனாய் ஏற்க முடியாது எனக் கூறிவிட்டு தன் கல்லூரி நோக்கிய திசையில் நகர்ந்தாள் றீமா. பெரிய கம்பனியில் தொழில் பார்க்கும் தொழில் அதிபர் வில்சனின் நான்கு பிள்ளைகளில் கடைசி மகள் தான் றீமா. மிகுந்த செல்வாக்குடைய குடும்பம். ரவிதன் வில்சனின் தங்கை மகன், றீமாவின் மச்சான். கொழும்பில் இருந்து குடும்பத்தோடு யாழ்ப்பாணம் வந்து சொந்தமாக வீடு எடுத்து இருந்தனர். வந்த சில நாட்களில் தன் அண்ணனைப் பார்ப்பதற்காக ரவிதனின் அம்மா ரவிதனையும் கூட்டிக் கொண்டு போய் தன் ஆசை அண்ணனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். பல வருடங்களுக்குப்பின் தன் தங்கையைப் பார்த்தபின் மிகவும் சந்தோசப்பட்டான் வில்சன். மருமகனைப் பார்த்து உனது அப்பா உயிரோடு இருக்கும்போது எவ்வளவு கலகலப்பாகவும் சந்தோசமாகவும் உனது குடும்பத்தை வைத்திருந்தார். ஆனால் விதி தான் அவரைவிட்டு வைக்கவில்லை என்ன செய்வது எல்லாம் கடவுளின் செயல் தான் என வில்சன் சோகத்துடன் கூறிமுடித்தார். ரவிதனின் பேச்சும் அழகும் அடக்கமும் ஏனையோரைக் கவர்ந்தது. மதிய உணவும் நிறைவு பெற்று ரவிதனும் தாயும் தம் வீடு வந்து சேர்ந்தனர். ரவிதனும் அந்நகரத்தில் சிறந்த கல்லூரியில் சேர்ந்து தனது உயர்கல்வியைத் தொடர்ந்தான்.




ஒருநாள் தனது நண்பர்களுடன் நல்லூர் வீதியைக் கடக்கும் போது ரவிதனின் பார்வையில் சிக்கினாள் றீமா. இது காலப்போக்கில் சொல்லாத காதலாக மாறியது. இறுதியில் தன் காதலை எப்படியாவது சொல்லி விட வேண்டும் என நினைத்த ரவிதன்னுக்குத் தன் கல்லூரியின் கண்காட்சி நிகழ்வு நல்ல சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தது. அக் கண்காட்சி நிகழ்வில் றீமாவும் அவளுடைய தோழிகளும் கலந்து கொண்டனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ரவிதன் நேரடியாகவே றீமாவிடம் தன் விருப்பத்தைத் தெரியப்படுத்தினான். பதிலை எதிர்பார்த்தவனுக்கு அதிர்ச்சியே கிடைத்தது தவிர பயன் எதுவும் கிடைக்கவில்லை. சோகத்துடன் சென்ற ரவிதனுக்கு அந்த அதிஷ்ட காதலன் யாரென்பதை அறிய ஆவலாக இருந்தான். அதற்காக றீமாவின் நண்பி ரேணுவைச் சந்தித்து றீமாவின் காதலன் யாரெனக் கேட்ட போது அவள் இது வரைக்கும் அவனைப் பார்த்ததே இல்லை, கதைக்கவும் இல்லை. தனது உறவுக்காரனைத் தான் காதலிப்பதாகச் சொன்னாள். இவளின் பேச்சு ரவிதனுக்கு இன்னும் அதிர்ச்சியைக் கொடுத்தது. திரையில் தான் இப்படி என்றால், நிஜத்திலுமா என ஏங்கியவாறு அந்த உறவைக் கேட்டுத் தெரிந்து கொண்டான். றீமாவை எவனுக்கும் விட்டுக் கொடுக்க முடியாதவனான ரவிதன் றீமாவிடம் சென்று றீமா உங்களை தொந்தரவு பண்றன் என்று நினைக்க வேண்டாம். உங்களுடைய காதலன் யாரென சொல்லலாம் தானே எனக் கூறி கொண்டு, என்னை காதலனாகத்தான் ஏற்கவில்லை ஒரு நண்பனாக ஏற்றுக் கொள்ளலாம் தானே என கூறியவாறு இருவரும் நண்பர்களானார்கள். ரவிதனின் கேள்விக்குத் தனது காதலின் ஆரம்பத்திற்கே போய்விட்டாள். நான் பத்திரிகை ரசிகை அதிலும் கவிதை பகுதியினை விரும்பிப் படிப்பவள். அதில் எனக்குப் பிடித்த கவிதை எனது மாமியின் முகவரி போட்டுப் பிரசுரமாகி இருந்தது. எனது அப்பாவிற்கு ஒரே தங்கை நல்ல பாசம் வைத்திருந்தார். காலத்தின் கோலம் அண்ணன் தங்கை உறவைப் பிரித்தது.

நான் கொண்டு போய் அப்பாவிடம் உங்களுடைய பாசத்திற்குரிய தங்கை கவிதை எழுதியிருக்கின்றார் என பத்திரிகையைக் காட்டினேன். இதைப் பார்த்த தந்தை அவளுக்கு கவிதையாவது கட்டுரையாவது ஒன்னுமே எழுதத்தெரியாது. உனது வயதில் ஒரு பையன் இருக்கான். அவன் தான் எழுதி இருக்கான் என சொன்னார். இதைக் கேட்ட ரவிதனுக்கே இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. அக்கவிதைக்குரியவன் தான் தான் என தன்னுள் நினைத்துக் கொண்டான். எப்படி உங்களுக்கு அவன் மேல் காதல் வந்தது எனக் கேட்டபோது, றீமாவின் பதில் இவ்வாறு அமைந்திருந்தது. என் அப்பா தன் தங்கை மேல் இத்தனை பாசம் வைத்திருப்பதை அறிந்து என்னை அறியாமலே அவனைக் காதலிக்க ஆரம்பித்து விட்டேன். இப்போது அருகில் தான் இருக்கிறார் என கூறிய போது தன்னைத் தெரிந்து கொண்டாளோ என ஏங்கியவனுக்கு தொடர்ந்து அவள் கூறினாள். நேற்றுத்தான் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வரும்போது நான் இல்லை எனக் கவலைப்பட்ட வண்ணம் கடிகாரத்தைப் பார்த்து இன்றைக்கு 4 மணிக்கு மாமி வீட்டிற்கு வருவதாக அப்பா சொன்னதை ரவிதனுக்கு சொல்லி முடித்து, பிறகு சந்திப்போம் எனக் கூறி தனது ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு பார்க்காத காதலனைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் நகர்த்திய போது, ஒரு நிமிஷம் என இடைமறித்து உன்னுடைய காதலனைப் பார்ப்பதற்கு ஆசையாய் இருக்கு. நானும் என் வீட்டுக்கு போய் அப்படியே வருகிறேன் என்று கூறினான். நிச்சயமாக வாங்க என கூறியபடியே போய் விட்டாள் றீமா. காதலனைக் கண்ணுக்குள் வைத்துக் கொண்டு தேடுவதை நினைத்தபோது தனக்குள்ளே சிரித்துக் கொண்டான் ரவிதன்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

எத்தனையோ உயிரினங்கள் தோன்றி வாழ்ந்து மடிந்து வரலாறற்றுப் போய்விட்டன. அதிலும் மனித இனத்தில் உள்ள வேறுபட்ட தன்மையானது, பிற உயிர்களைவிடச் சிறப்பு வாய்ந்தது என்பதனால் இதன் தன்மையும் வேறுபட்டிருப்பது இயற்கையே. ஆயினும் மற்றைய உயிரினங்களிலிருந்து வேறுபட்டுச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றுள்ள மனித இனம் இன்று எதைப் பற்றிச் சிந்திக்கிறது என்றால், தமக்கு எவ்விதத்திலும் அமைதியைக் கெடுத்துக் கொள்ளும் அற்பமானவற்றையே சிந்திக்கிறது, செயற்படுகிறது. இதற்குக் காரணம் தான் என்ன? என்ற கேள்வி எழுமாயின் தன்னைப் பற்றிச் சிந்திக்காத தன்மையே முழுமுதற் காரணம் எனலாம். இதற்கு ஆசையே முதலிடம் வகிக்கிறது என்றால் மிகையன்று. ஆசையானது அதிகரிக்கும் பொழுது அவலங்களும் அதிகமாகின்றன என்பதை சிந்திக்கத் தவறும் மனிதனின் இறுதிநிலை என்ன? துன்பத்துள் கிடந்து உழல்வதே முடிவாகும். இதைத்தான் இப்படிக் கூறிவைத்தார் வள்ளுவர்.

'பற்றிவிடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவற்கு.'

*குறள் : 347*

நிலையற்ற உலக வாழ்வினையே பற்றிக் கொண்டு அதையே நிலை என நம்பித் தளரவிடாதவர்க்கு உலகத் துன்பங்களும் அவ்வாறே பற்றிக்கொண்டு உலைக்கும் என்பதாகும்.

# மறப்பேனோ அவரை...!

அங்கயற்கண்ணியின் கேள்விகள் வேலாகக் குத்தியபோதிலும் மரகதவல்லிக்கு அதில் ஒரு ஆனந்தமே தோன்றியது. அவளைக் கடந்து படுக்கை அறையை நோக்கி நடந்த மரகதவல்லி, தனது பஞ்சனையின்மேல் கிடந்த தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளைத் தொடர்ந்து வந்த அங்கயற்கண்ணி, மரகதவல்லி படுத்திருந்த மஞ்சத்தின் அருகில் வந்து



நின்று "ஏய்! உனக்கு என்ன ஆகிற்று?" என்று கேட்டவாறு மரகதவல்லியின் கையைப் பற்றினாள். "எனக்குத் தூக்கம்

## தருவது கற்பகன்

வருகிறது" என்று சிணுங்கினாள் மரகதவல்லி. "இதுவரை வராத தூக்கமா இனி வரப்போகிறது? திருடி." என்றதும் சட்டென்று எழுந்திருந்த மரதகதவல்லி, "திருடியா? எதைத் திருடினேன் உன்னிடம்" என்று அங்கயற்கண்ணியைப் பார்த்து முறைத்தாள். "ஏன் உனக்குக் கோபம் வருகிறது? செய்வதையும் செய்துவிட்டுக் கோபம் வேறா? இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும் சொல்வதறியாது திகைத்தாள் மரகதவல்லி. "அண்ணியாரே! ஏன் திகைக்கிறீர்கள்?" என்றதும் மரகதவல்லி தலையைக் குனிந்து கொண்டாள். "பெண்கள் போகும் திசையைக்கூடப் பார்க்காத என் அண்ணன் இதயத்தை இவ்வளவு கெதியில் திருடிவிட்ட உனக்குத் தண்டனை என்ன தெரியுமா?" என்று அங்கயற்கண்ணி கேட்டதும், உண்மையிலேயே பயந்து போய்விட்டாள் மரகதவல்லி.

மெதுவாகத் தலையை நிமிர்த்தி அங்கயற்கண்ணியின் முகத்தை நோக்கினாள் மரகதவல்லி. அந்தப் பார்வையில் ஏக்கம் கலந்த பயம் தென்பட்டதும் அவளுக்குச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு "உன் தந்தையிடம் இதைச் சொல்லி..." என்று கூறி முடிப்பதற்குள், "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்." என்று அங்கயற்கண்ணியின் கைகளைப் பற்றிய மரகதவல்லி, பரிதாபமாக அவள் முகத்தைப் பார்த்ததும், "உன்னை என் அண்ணாவிற்குப் பெண் கேட்கப்போகிறேன்" என்றாள் அங்கயற்கண்ணி.

இதைக் கேட்டதும் அப்படியே அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டாள் மரகதவல்லி. "அம்மாடி இவைகளை அண்ணாவிடமே வைத்துக்கொள்" என்றாள் கிண்டலாக. "போடி நீ ரொம்பவும் துடுக்கு. நீ மட்டும் என்ன கடைசிவரை கன்னியாகவே இருக்கப்போகிறாயாக்கும்?" என்று கூறியதும் அங்கயற்கண்ணியின் கன்னங்கள் சிவந்ததைக் கவனித்த மரகதவல்லி, "என்ன கன்னம் சிவக்கிறதே. ஏதாவது...?" என்றவளின் பேச்சைத் திசைதிருப்ப எண்ணிய அங்கயற்கண்ணி, "போதும் விளையாட்டு. பொழுது புலர்கிறது எழுந்திரு." என்றவாறு படுக்கையை விட்டெழுந்தாள்.

விக்கிரமனும் அங்கையற்கண்ணியும் தமது மாளிகைக்குத் திரும்ப ஆயத்தமாக வெளி மண்டபத்தை வந்தடைந்தனர். மரகதவல்லியின் தந்தை அவர்களை வழியனுப்பக் காத்திருந்தார். அந்த நேரம் பார்த்து மரகதவல்லி மேல் தளத்திலிருந்து இறங்கி வந்து அங்கையற்கண்ணியின் கைகளைப்பற்றிய போது, அவள் கண்கள் பனித்ததைக் கண்டதும் விக்கிரமன் பதறிப் போனான். ஆயினும் அவ்விடத்தில் எதுவும் அவனால் பேச முடியவில்லை. கண்கள் மட்டும் அவன் உள்ளத்தின் வேதனையை வெளிப்படுத்தின. இதைக் கண்டதும் அங்கயற்கண்ணி ஓடோடிச் சென்று அவளைக் கட்டியணைத்தவாறு "மரகதவல்லி நீ இன்னும் குழந்தையா? அண்ணா உன்னைக் கைவிடமாட்டார். மலருக்குமலர் தாவும் வண்டினத்தைச் சேர்ந்தவர் அல்ல அவர். முறையாக உன்னைப் பெண்பார்க்க வெகு விரைவில் வந்துவிடுவோம். நீ கண் கலங்குவதை அவர் கவனித்தால் அவருக்குப் பைத்தியமே பிடித்துவிடும்." என்றதும் மரகதவல்லி "அவர் வரும்வரை நான் நடைப்பிணமாகத்தான் இருப்பேன் என்று சொல்லுவாயா?" என்றதும் "கலங்காதே மரகதவல்லி நீதான் என் அண்ணி என்று உன்னைக் கண்டதுமே முடிவாகிவிட்டதே. இனியும் ஏன் வீண் கலக்கம்?" என்று அவள் இரு கைகளையும் ஏந்தி முத்தமிட்டாள் அங்கயற்கண்ணி. பின் அவளையும் அழைத்துக் கொண்டு வண்டியருகில் சென்றதும் வண்டியின் பின்புற ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள் அங்கயறகண்ணி. அவளைத் தொடர்ந்து விக்கிரமன் முன் ஆசனத்திற்குத் தாவி ஏறினான். ஏறியதும் முதலில் மரகதவல்லியின் தந்தையை நோக்கி இரு கைகளையும் குவித்த போது என்றுமே இல்லாத அளவுக்கு அவன் முகத்தில் நன்றி உணர்வு பிரதிபலித்ததைக் கண்ட மரகதவல்லியின் தந்தை "பத்திரமாகப் போய் வாருங்கள்!" என்று ஆசீர்வதிப்பது போல் கைகளைக் காட்டியபோது அவர் முகத்தில் பிரிவுத்துயர் பிரதிபலித்ததை விக்கிரமன் அவதானித்தான். அவனுக்கும் பெரிய துன்பமாகவே பட்டது. வண்டி புறப்பட்டதும் விக்ரமனின் பார்வை திரும்பிய போது மரகதவல்லியின் கண்களில் அளவறியமுடியாதோர் ஏக்கம் குடிகொண்டிருந்ததை உணர்ந்தவன் "போய் வரட்டுமா?" என்று கேட்டபோது அவன் முகத்தில் வேதனை கலந்த குறும்பு தென்பட்டதும், அவள் மனதில் சற்றுத் தென்பு மலரத் தொடங்கியது. இருவரும் கைகளை அசைத்து விடைபெற்றபோது வண்டி நகரத் தொடங்கியது. தலைவாயிலைக் கடந்து வண்டி செல்லும் வரை கையை அசைத்துக் கொண்டேயிருந்தாள் அங்கயறகண்ணி. வண்டி புழுதியைக் கிளப்பிக்கொண்டு நெடுஞ்சாலையில் பறந்து கொண்டிருந்தது. அதையே இமை கொட்டாமற் பார்த்துக் கொண்டிருந்தாள் மரகதவல்லி.

*"மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்*
*உள்ளினும் உள்ளம் சுடும்."*

அதிகாரம் 121
குறள் 1207

## சிந்தியா பதில்கள்

✉ **சிந்தியா மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமாக இருந்தால் இரு தரப்புக்கும் பொருத்தமாக மூன்று நிபந்தனைகள் கூறும் பார்க்கலாம்?**

*-எஸ்.செல்லத்துரை, குருமண்காடு.*

1. எவரும் எவர் மீதும் வன்முறையையும், படுகொலையையும் பிரயோகிக்கக் கூடாது.

2. மனித உரிமைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவையும் இரு தரப்பும் உச்சபட்ச நேர்மையோடு மதித்து நடக்க வேண்டும்.

3. பேச்சுக்கான கால எல்லை வகுக்கப்பட்டு, வெளிப்படையாகப் பேச்சுக்கள் நடைபெறவும், பெறப்படும் தீர்மானங்களின்படி செயற்படவும் வேண்டும் என்பதை இருதரப்பும் கட்டாயமாக்கிக் கொள்வது.

இவை நடக்குமா?

✉ **அமைச்சர்களாகி, மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பதை விடவும், உலகின் பழைய தொழில் செய்வது மேல் என்று ஜே.வி.பி. எம்.பி. ஒருவர் சொல்லியிருக்காரே?**

*-வை.மோகனதாஸ், மொரட்டுவை.*

அவருடைய தற்போதைய தலையிடியில் அது சரியாகப்படுகிறதாக்கும். நேர்மையான ஒரு சில அமைச்சர்களும் இருக்கிறார்கள் என்று அதே எம்.பி. நாளைக்கே ஒரு அறிக்கை விடவும் கூடும்.



பேரரசு
விஜயகாந்த் – தாமினி

✉ **காத்தான்குடியில் முஸ்லிம்களுக்குள்ளேயே முரண்பாடு தோன்றியிருப்பதும் அது வன்முறைகள் வரை போயிருப்பதும் எதைக் காட்டுகிறது?**

*-எம்.எம்.யூசுப், அம்பாறை.*

ஏனைய சில முஸ்லிம் நாடுகளில் இப்படி சில உள் பிரிவுகள் இருக்கின்றன. அவைகளைக் குறிப்பிட்ட தரப்புகள் அங்கீகரித்துக் கொண்டுள்ளன. இங்கேயும் முரண்பாடுகளற்ற இணக்கப்பாடுகள் நிலவினால் மகிழ்ச்சியாக இருக்கும். வழிபாடு அவரவர் நம்பிக்கை தானே...

✉ **ஆளும் கட்சிக்கும் - எதிர்க்கட்சிக்குமிடையில் பொது வேலைத்திட்டம் தொடர்பில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் தோல் விகண்டால் பொதுத் தேர்தல் ஒன்று வரும் என்று கூறப்படும் ஆருடங்களை நம்பலாமா?**

*-வீ.கோணேஸ்வரன், பத்தனை.*

தற்போதைய அரசு, புலிகளின் வீரியத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறது என்ற ஒரு அலை தென் இலங்கையில் பரவலாக ஏற்பட்டுள்ளது. நிலைமை மாறினால் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அப்படி ஒரு நிலை ஏற்படவும் செய்யலாம். பலவீனமான நண்பர்களுடன் எத்தனை நாளைக்குத்தான் பிடுங்குப்படுவது என்று அரசு யோசிக்கவும் செய்கிறது.

✉ **சம்பூரில் நிலக்கரி அனல் மின் நிலையமொன்றை அமைக்க அரசு காட்டும் ஆர்வம் அவசரப்படுவது போல் தெரிகிறதே?**

*-து.விக்கி, உப்புவெளி.*

நீங்கள் நினைப்பதும் சரிதான். ஆனால் அத்திட்டத்துக்கு இந்திய அரசாங்கத்தையும் பங்காளியாக்கியிருப்பது முக்கியத்துவப்படுகிறதில்லையா? இந்தியாவின் முதலீட்டு நிலைகளைத் தாக்குவதற்குப் புலிகள் விரும்பமாட்டார்கள் என்பது ஒரு திட்டமாக இருக்கும்.

✉ **சந்திரகாந்தன் எம்.பி....?**

*-மூ.வையாபுரி, கல்லடி.*

ஆப்பு இழுக்க ஒரு வழியாகச் சம்மதித்து விட்டார். இனி, என்ன மாட்டிக் கொள்ளப் போகிறது? அதை எப்படி உருவிக் கொள்ளப் போகிறார்? என்பதைத்தானே விரிவாக நான் சொல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள். உங்கள் நோக்கம் நிறைவேறாது. நான் சொல்லமாட்டேன்.

✉ **சிந்தியா அரசியல் பிரமுகர்களின் பேட்டிகளை விரும்பிப் படிப்பீர்களா? அண்மையில் யாருடைய பேட்டி உங்களுக்குப் பிடித்திருக்கிறது?**

*-மா.பிரியவதனி, வெள்ளவத்தை.*

விரும்பிப் படிப்பதில்லை. ஏனென்றால் அநேகமானவர்கள் சொல்வதற்கும் - செய்வதற்கும் இடையில் பாரிய வேறுபாடுகளும் - முரண்பாடுகளும் இருக்கின்றன. அவர்கள் பதவியில் இருக்கிறார்கள் என்பதற்கான பொய்மையை ஏற்றுக்கொள்ள முடியாது.

✉ **அரச அலுவலகங்கள் என்றாலே அலட்சியம், தாமதம், ஒழுங்கீனம் என்பவை தானே கோலோச்சியிருக்கிறது. இது மாற்ற மடையாதா?**

*-ஏ.சண்முகதாஸன், நாரஹேன்பிட்டி.*

இந்தியன் + அந்நியன் + முதல்வன் இவர்கள் மூவரையும் ஒருங்கிணைத்து ஒரு ஆணைக்குழு அமைத்து சங்கர் தலைமை வகித்துத்தான் மேற்படி பிரச்சினைகளை முடிக்க வேண்டும் என்று கேட்கலாம். "மூக்கு இருக்கும் வரை சளியும் இருக்கும்" என்பார்களே மறந்து விட்டீர்களா?

✉ **மறுபிறவியெடுத்தால் மனிதனாகப் பிறப்பதற்கு ஆசைப்படுவீரா?**

*-ப.கீர்த்திகா, உவர்மலை.*

"அரிது அரிது மானிடராய்ப்
பிறப்பது அரிது" என்று ஔவையார் சொன்னதை முழுமையாக ஏற்றுக்கொள்பவன் என்பதால் என் விருப்பம் என்னவாக இருக்கும்? கண்டு பிடியுங்கள்.

✉ **அத்தப்பத்துவின் மீள் வருகை இலங்கை அணிக்கு உற்சாகத்தைக் கொடுக்குமா?**

*-எம்.மாஹீர், மருதானை.*

கொடுக்கும் என்று பயிற்றுவிப்பாளர் டொம் மூடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியாவில் நடக்கப்போகும் மினி உலகக் கோப்பைப் போட்டியில் இது தெரிந்து விடும். அத்தப்பத்து அனுபவமிக்கவர் என்பதால் நம்பிக்கை கொள்வதில் தப்பில்லை.

✉ **கிரிக்கெட் விளையாட்டுக்கு இருக்கும் அளவுக்கு, வேறு விளையாட்டுக்கு வரவேற்பு இருப்பதாகத் தெரியவில்லையே, இதை அவதானித்தீரா?**

*-எஸ்.பிரேம்குமார், கட்டுகஸ்தோட்டை.*

கால் பந்துப் போட்டிகளுக்குத்தான் உலகில் அதிகமான இரசிகர்கள் இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இவை தவிர, இப்போது பாடசாலைச் சிறுவர்களையும், இளையவர்களையும் அதிகமாகக் கவர்ந்து வருவது Wrestling விளையாட்டுத்தான். அதில் சூப்பர் ஸ்டார் ஜோன்சினா. தவிரவும், பெடிஸ்டா, ரிபல் எச், பிக்ஷோ, அன்டடேக்கர், ஷோன் மைக்கல், மெட்ஹார்டி, பென்ஜமின், ரிக்புனார், மிஸ்டேரியோ என்பவர்களை உங்களுக்குத் தெரியுமா.

இவர்கள் இன்றைய சிறுவர்களின் ஆதர்ஷ கதாநாயகர்கள்.

✉ **சிந்தியா உங்களுக்கு நோன்பா - தீபாவளியா?**

*-வி.கஜேந்திரன், மட்டக்களப்பு.*

எனக்கு இரண்டும் ஒன்றுதான். உங்களுக்கு தீபாவளி எப்படி என்பதைச் சொல்லுங்கள்.

✉ **வேறு ஊடகங்களிலிருந்து சில விடயங்களை அப்படியே அல்லது கத்தரித்து இன்னொரு ஊடகம் பிரயோகிப்பது பற்றி சிந்தியா என்ன நினைக்கிறீர்?**

*-க.சந்திரன், சிலாபம்.*

கூடாதுதான். ஆனால் எல்லா ஊடகங்களையும் எல்லோரும் பார்க்க முடியாது என்ற நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளைத் தத்தமது வாசகர்களுக்கோ, நேயர்களுக்கோ, ரசிகர்களுக்கோ தெரியப்படுவதை கடமையாகச் சிலர் நினைக்கின்றனர். இன்றைக்கு 95 வீதமான ஊடகங்களில் இது நடக்கிறது. ஆனாலும் புதியவைகளைத் தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஊடகங்கள் பிரதிபலிப்பது பாராட்டுக்குரியது.

✉ **பேரரசு பார்த்தேன். அரசியல் கொஞ்சம் தூக்கலாகவே இருக்கிறது. இப்படியே போனால் விஜயகாந்தின் படங்களை மக்கள் பார்க்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்?**

*-சி.மூர்த்தி, கொட்டாஞ்சேனை.*

அண்மையில் நடக்கப்போகிற உள்ளாட்சித் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு விஜயகாந்த் காய் நகர்த்துகிறார். எம்.ஜி.ஆர். அளவுக்கு சினிமா எனும் விசாலமான ஊடகத்தில் அரசியல் செய்ய எல்லோராலும் முடியாது என்பதைத்தான் 'பேரரசு' புரிந்துகொள்ள வேண்டும்.

✉ **ஒரு முட்டாளை எப்படி அடையாளம் காண்பது?**

*-இரா.பத்மநாதன், குருநாகல்.*

மிகவும் இலகு. இன்னொரு முட்டாளை சிபாரிசு பண்ணும் போது.

# மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHOTHERAPHY)**

இளம் வயதில் வாலிப தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமை குறைந்து, சக்தி குறைந்து, ஞாபக மறதி ஏற்படல் மற்றும் பயம் நடுக்கம் நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கு

**(SEXUAL DISORDERS)** - ஆண்மை சக்தி குறைவு

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ, வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்களை தவிர) இதற்கு பல காரணங்கள் உண்டு

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும், நினைவிலும், சிறுநீரிலும் விந்து வெளியேறியது.
- உடல் பலவீனம், நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது.
- உறவின்போது விந்து விரைந்து வெளியேறுதல்.
- முதல் தடவையாக உறவு கொள்ளும்போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

அனைவராலும் பாராட்டுப்பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்

## Dr. P.ஆறுமுகம்

அவர்களை சந்திக்க

HOTLINE : 0777-569205

தாம்பத்திய உறவில் திருப்தியின்மை, பாலியல் பிரச்சனைகள் அனைத்தும் மனோதத்துவ முறையில் நிவர்த்தி செய்யப்படும்.

| வவுனியா | கொழும்பு |
|---|---|
| ஒக்டோபர் 07 முதல் 09 வரை | ஒக்டோபர் 23 முதல் 29 வரை |
| Vanni Inn | New Ahmed Turist Inn, Bang Bang |
| 2ம் குறுக்குத் தெரு, வவுனியா. | Building, 10-1/A, Bankshall Street, Colombo - 11. |
| T.P : 024-2222074, 0777-569205 | T.P : 5368426, 5368427, Cell : 0777-569205 |


# உலகக் கோப்பை பெண்கள் ஹாக்கி

உலகக் கோப்பை பெண்கள் ஹாக்கி போட்டியில் இந்தியா - இங்கிலாந்து இடையிலான ஆட்டம் 1-1 கணக்கில் சமநிலையில் முடிந்தது.

உலகக் கோப்பைப் பெண்கள் ஹாக்கி போட்டி ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் நடைபெற்று வருகிறது. 12 அணிகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டியின் நடந்த ஆட்டம் ஒன்றில் இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதின. பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

2 ஆவது பாதியில் இரு அணியினரும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பயனாக ஆட்டத்தின் 47-வது நிமிடத்தில் இங்கிலாந்து முதல் கோலை அடித்தது. அந்த அணி வீராங்கனை ஷ்லோ ரோஜர்ஸ் இந்த கோலை அடித்து அணியை முன்னிலை பெறச் செய்தார். இங்கிலாந்து முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து, இந்திய அணியினர் ஆட்டத்தின் வேகத்தை மேலும் அதிகரித்தனர். இதன் பயனாக ஆட்டத்தின் 58-வது நிமிடத்தில் இந்தியா பதில் கோலைத் திருப்பியது. இந்திய வீராங்கனை சுரிந்தர் கவுர் இந்தக் கோலை அடித்து ஆட்டத்தை சமனிலைப் படுத்தினார். இந்தப் போட்டித் தொடரில் சுரிந்தர் கவுர் அடித்த 4-வது கோல் இதுவாகும்.

பின்னர் இரு அணியினரும் கோல் அடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. முடிவில் இந்த ஆட்டம் வெற்றி தோல்வியின்றி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இந்திய அணி, இங்கிலாந்துக்கு எதிராக 2-3 கணக்கிலும் ஜெர்மனிக்கு எதிரான ஆட்டத்தில் 2-3 கணக்கிலும் ஏற்கனவே தோல்வி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈராண்டு நினைவுகளில்...

தோற்றம்
16 ❀ 05 ❀ 1956



மறைவு
28 ❀ 09 ❀ 2004

சிறந்த அரசியல் விமர்சகரும், படைப்பாளியுமான தி.உமாகாந்தன் அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கு மற்றுமொரு பாரிய இழப்புத்தான். போராட்டத்தின்பால் உந்தப்பட்டு தமிழரின் விடிவுக்காகப் போராடியவர். போரிடும் வீதி திசை மாறியபோதும் ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை கொண்டிருந்தவர். அதற்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர். புலம் பெயர்ந்து பாரீஸில் வாழ்ந்தாலும், இலங்கையின் அரசியல் மாற்றங்களையும், அதனால் தமிழர்கள் அநுபவித்துக்கொண்டிருக்கும் துயரங்களையும் அவதானித்துக்கொண்டிருந்தவர். ஆக்கபூர்வமான கருத்துக்களை தனது எழுத்துக்களால் ஆணித்தரமாக முன்வைத்தவர். இன்று எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் அனைவருடனும் நாமும் பங்குகொள்கிறோம்.

## தில்லையம்பலம் உமாகாந்தன்

-நண்பர்கள், உறவுகள்.

## ஜன்னல்...

6ஆம் பக்கத் தொடர்ச்சி

ஜன்னல் ஆணா, பெண்ணா என்பது தெரியாது. ஆனால் எல்லா வீடுகளிலும் ஜன்னலுக்கு சுருக்குப் பாவாடைதான் கட்டி விடுகிறார்கள். பூனைக்கும் எலிக்கும் ஜன்னல்தான் கோட்டை வாசல்.

பூக்கும் ஜன்னல்களை எத்தனை பேர் பார்த்திருக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. மனிதர்கள் வாழ்ந்து கைவிட்ட பழைய வீடுகளைப் பார்த்திருக்கிறேன். கொடிகள் வளர்ந்து ஜன்னல் வழியாக வீட்டுக்குள் படர்ந்திருக்கும். ஜன்னல் கம்பிகளைச் சுற்றி பூக்கள் பூத்திருக்கும். மரங்களையும், செடி கொடிகளையும் நேசிக்காத எவருக்கும் அது கொடிகளின் அத்துமீறல்தான். மற்றையவருக்கு அது இயற்கையின் மிடுக்கு. அதை ரசிக்க வேண்டும். புழுதியில் விளையாட விடாமல் பிள்ளைகளைப் பூட்டி வைக்கும் வீடுகளில், ஜன்னலைப் பூட்டி வைக்கும் வீடுகளில் ஜன்னலைப் பிடித்து ஏக்கப் பெருமூச்சு விடும் மழலைகளின் பார்வையை நீங்கள் பார்த்ததுண்டா. அந்த மழலைகள் ஏங்குவது கொஞ்ச நேர புழுதி விளையாட்டுக்காகத்தான்.

தடுக்கப்படுகின்ற வீட்டு ஜன்னல்களில், மழலைப் பூக்கள் மலர்கின்றன. ஆனால் வாசம் வீசுவதற்குப் பதிலாக சோகம் வீசுகின்றன.

ஜன்னலுக்குள் தலையையே நுழைக்க முடியாத நாம், நம்மையே நுழைக்க விரும்புகிறோமே எப்படி எப்படி? முரண்பாடுகளையும் நம்மால் நியாயப்படுத்த முடிகிறதோ தெரியவில்லை. உதாரணமாக இறைவன் நமக்காக சொர்க்கத்தின் வாசலைத் திறக்காவிட்டாலும், ஜன்னலையாவது திறக்கமாட்டானா என்ற ஏக்கம் நியாயமானதுதானே?.

சொர்க்கம் - நரகம் உண்டா என்பது எனக்குத் தெரியாது. அதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. ஒருவேளை அப்படி இருப்பதாக வைத்துக் கொண்டால் (நம்பிக்கையுள்ளவர்களுக்கு) சொர்க்கத்தின் ஜன்னல் என்ன? நமது வீட்டு வாசல் போல் வசதியானதா என்று கேட்டுக் கொள்வேன்.

நரகத்தின் வாசல் நல்லவனுக்காகவும் கெட்டவனுக்காகவும் எப்போதும் திறந்தே கிடக்கிறது. ஆனால் சொர்க்கத்தின் ஜன்னல் கூட எப்போதும் பூட்டியே கிடக்கிறது. இந்த உண்மையை எப்படி வசதியாக நம்மால் மறந்துவிட முடிகிறது.

மண்ணில் வாழ்ந்த வாழ்க்கை நியாயமானதும், உண்மையானதுமாக இருந்தால் ஏன் பயந்து சாகவேண்டும். சொர்க்கத்தின் ஜன்னலை விடவும் நரகத்தில் வாசல் நமக்கு வசதியானது தானே என்பதுதான் எனது வாதம். நாம் அடிப்படையிலேயே தவறு விடுகிறோம். ஆகையால் தான் சொர்க்கத்தில் வாசல் வாய்க்காவிட்டாலும் ஜன்னலின் இடுக்கிலாவது நுழைந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறோம்.

என்னைப் பொறுத்தவரை நாம் வாழும் வீடுதான் சொர்க்கமும் - நரகமும். ஆகவே நமது வாழ்வின் விளைவைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். மனிதனாகவே வாழ்ந்தால் வாசல் சொர்க்கம். ஜன்னல் நரகம். மனிதம் தொலைத்து வாழ்ந்தால் ஜன்னல் சொர்க்கம் - வாசல் நரகம் இப்போது தீர்மானிப்போம். ஜன்னலா வாசலா நாம் நுழையப்போகும் வழி. வாழ்க்கை வாழ்வதற்கே...

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## "நான் நிதானமாக விளையாடுபவன்." — சங்கக்கார

உலகில் உள்ள அதிரடி துடுப்பாட்ட வீரர்கள் போல் நான் விளையாடுவதில்லை. நான் நிதானமாக விளையாடக்கூடியவன். என்று இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார தெரிவித்தார்.

மினி உலகக் கோப்பையின் முக்கியச் சுற்றில் விளையாடுவதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் வரும் 7ம் தேதி முதல் நடக்கவுள்ளன. மினியில் விளையாட தரப் பட்டியலில் முதல் ஆறு இடத்தில் உள்ள அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுவிட்டன. அடுத்த இடங்களில் உள்ள இலங்கை, வெஸ்ட்இண்டீஸ், ஜிம்பாப்வே, வங்கதேசம், ஆகிய அணிகளுக்குத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடக்க உள்ளன. இப்போட்டியில் விளையாடுவதற்காக இந்தியா சென்ற இலங்கை அணியின் முன்னணி வீரரும், துணை கேப்டனுமான குமார் சங்கக்கார கூறியதாவது:



இப்போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெறும் என்று நம்பிக்கையில் உள்ளோம். முக்கிய சுற்றுப் போட்டியில் விளையாடுவதற்கு இதுதான் வாய்ப்பு. அதனால் தற்போது நடக்கவுள்ள தகுதிப்போட்டிகளில் மிகவும் கவனமாக விளையாடுவோம். இப்போட்டிகளில் வெற்றி பெற்று இலங்கை அணி மினி உலகக் கோப்பைக்கான அணிகள் பட்டியலில் இடம்பெறும்.

தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடக்கவுள்ள இந்தியாவின் மொகாலி ஆடுகளம், துடுப்பாட்டம் மற்றும் ஸ்பின் பவுலிங்குக்கு சாதகமானது.

எங்கள் அணியில் முத்தையா முரளிதரனும், சமிந்த வாசும் உள்ளனர். மேலும் அதிக சகலதுறை ஆட்டக்காரர்களும் உள்ளனர். அதனால் நிச்சயம் வெற்றி பெறுவோம். மேலும் கிரிக்கெட்டில் நான் புதுவகையான துடுப்பாட்ட ஸ்டைலைக் கொண்டுள்ளேன். நான் பந்தோடு அதிரடியாக மோதக் கூடியவன் இல்லை. நிதானமாதக விளையாடக்கூடியவன். அதனால் ஒருநாள் போட்டிகள் எனக்குச் சவால் நிறைந்ததாகவே உள்ளன. இவ்வாறு குமார் சங்கக்கார கூறினார்.

## கிரீஸ் வீராங்கனை எலீனி 'சாம்பியன்'

கொரிய ஓபன் டென்னிஸ் போட்டியில் கொரிய வீராங்கனை எலீனி டானிலீடு சாம்பியன் பட்டத்தை வென்றார்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கொரிய ஓபன் டென்னிஸ் போட்டி தென் கொரிய தலைநகர் சியோலில்



நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் ஜப்பான் வீராங்கனை அய் சுஜியமா, கிரீஸ் வீராங்கனை எலீனி டானிலீடுவை எதிர்த்து ஆடினார்.

பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் முதல் செட்டை எலீனி 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். முதல் செட்டை கோட்டை விட்டதால் 2-வது செட்டில் சுஜியமா ஆக்ரோஷமாக ஆடினார். இதன் பயனாக 2-வது செட்டை அவர் 6-2 என்ற கணக்கில் எளிதாக தனதாக்கிக் கொண்டார். போட்டியின் முடிவை நிர்ணயிக்கும் 3-வது செட்டில் இருவரும் புள்ளிகளை சேர்க்க கடுமையாகப் போராடினார்கள். அதனால் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றனர். முடிவில் 3-வது செட்டை கடுமையான போராட்டத்துக்கு பின்னர் எலீனி கைப்பற்றினார். இந்த ஆட்டத்தில் எலீனி 6-3, 2-6, 7-6(7-3) என்ற கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றார்.

ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டி ஜப்பானில் உள்ள டோக்கியோ நகரில் நடைபெற்று வருகிறது. இதன் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷிய வீராங்கனை கிரிலென்கோ, ஜப்பான் வீராங்கனை அகிகோ மோரிகாமியுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் 6-1, 2-6, 6-7 என்ற செட் கணக்கில் கிரிலென்கோ அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

# எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 3

7, 16, 25 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 3 வருமேயானால் இவர்கள் கேது, குரு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியான முக அமைப்பும், குறுகுறுப்பாக தன்மையும் கொண்டு விளங்குவர். ஓரளவு உயரமான தோற்றம் கொண்ட இவர்கள் பழமையும் புதுமையும் கலந்து வாழ்க்கை நடத்துவர். தான் பேசுகின்ற கருத்துக்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசுவர். தனக்கு ஒரு பிரச்சினை வரும்போது தயங்காது பேசிக் காரியத்தை வெற்றி கொள்வது. தனக்குத் தேவையற்ற காரியங்களில் இறங்கி மாட்டிக் கொள்ளாது, விழிப்புணர்ச்சியோடு இருப்பர்.

அதிகமான சிந்தனை கொண்ட இவர்கள், தான் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் சமுதாயத்தில் நிலையானதாக இருக்க வேண்டும் என்று எண்ணுவர். அதிகமாக நண்பர்களை வைத்துக் கொள்ளாவிட்டாலும் குறிப்பிட்ட சிலரை நகமும் சதையும்போல் நண்பராக வைத்துக் கொள்வர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் நல்ல மாணவர்களை உருவாக்கும் சிறந்த ஆசிரியராகவும், கணித வல்லுனராகவும், டாக்டராகவும், இஞ்சினீயராகவும், பெரிய தொழில் அதிபராகவும் சிறப்புற்று வாழ்வர். அப்படிப் பெயர் பொருத்தமானதாக அமையாதவர்கள் குழப்பமான வாழ்க்கையில் சிக்குண்டு தவிப்பர்.

முன்கோபியான இவர்கள் யார் தவறு செய்தாலும் அதைச் சுடடிக்காட்டிப் பேசுவர். தனக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை வெளியில் சொல்லாது மறைத்து விடுவர். கல்வி, கலை, ஆராய்ச்சி போன்றவற்றில் சிறந்து விளங்கும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் நாட்டில் நிர்வகிக்கும் முக்கிய பொறுப்புகளை வகிப்பர். எப்பொழுதும் எதையாவது சிந்தித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு, கற்பனையில் வரக்கூடிய கவிதை கதைகளில் சிறந்து விளங்குவர். இன்னும் சிலர் எப்பொழுதும் எழுதிக் கொண்டே இருப்பர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்களுக்கு, பிரச்சினைகள் வந்துவிட்டால் அது முடியும்வரை தூக்கம் வருவதில்லை. ஏதாவது புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்க முயல்வர். இவர்களை ஆராய்ச்சியாளர் என்றால் மிகையாகாது.

கணிதம், ஜோதிடம், மருத்துவம், விஞ்ஞானம், சரித்திரம், அரசியல் போன்றவற்றில் இவர்களது மனம் ஆராயத் தொடங்கும். நாட்டுப்பற்றும், மதப் பற்றும் மிகுந்த இவர்கள் தன் நாட்டிற்கும் மதத்திற்கும் உண்மையாக உழைக்க வேண்டும் என்று முயல்வர். அப்படி உழைத்துக் கொண்டிருக்கும் போதே திடீரென்று மனம் வெறுத்து அந்த இடத்தை விட்டு அகன்று விடுவர். தன்னைவிட பலசாலியாக இருந்தாலும் நேர்மைக்காக எதிர்த்துப் போராடுவர். வாழ்க்கையில் சிறிது குழப்பம் கொண்ட இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் தொடர்ந்து வெற்றி கிட்டும். தொழில் செய்யும் பலர் அதிகம் பேசாத காரணத்தால் தொழிலை அபிவிருத்தியாக்க முடியாமல் இருப்பர். தனக்கு ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க அடுத்தவரிடம் யோசனை கேட்கக் கூட அஞ்சுவர்.

பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்தவர்கள் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைகின்றனர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாது. நேர்மையையே இவர்கள் மனம் விரும்பும். பெயர் பொருத்தமில்லாது இருந்தால் வீண் சிக்கல்களாலும் வீண் செலவாலும் இல்லற வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களாலும் மனம் வருந்துவர். நண்பர்களிடத்துக் கருத்து வேறுபாடுகள் உருவாகும். தான் போட்ட திட்டங்கள் தோல்வி அடையும். வாழ்க்கைத் துணைவரால் பிரச்சினைக்கு ஆளாக நேரும்.

சிலருக்குப் பெண்களிடம் பழகுவதால் சிக்கல் ஏற்படும். சகோதரர்கள் எதிரியாக மாறுவார்கள். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் அமைத்துக் கொண்டால் கெட்ட பலன்கள் குறைந்து, நல்ல முன்னேற்றம் காணுவர். தனக்கு வரப்போகும் துன்பத்தை முன்கூட்டியே உணரும் திறமை படைத்தவர்கள். ஆடம்பரமாகக் காட்சியளிக்கும் இவர்கள் திடீரென்று எளிமையாகக் காட்சியளிப்பர். கீழே குறிப்பிட்டபடி பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால், நல்ல முன்னேற்றம் அடையலாம்.

***தொழில்***

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களில் பலர் வேலை செய்பவர்களாகவும் இன்னும் பாதி தொழில் செய்பவராகவும் விளங்குகின்றனர். திரவப் பொருள், கல், மருந்து, வியாபாரம், கலை சம்பந்தமான பொருள், காண்ட்ராக்ட், ஏஜென்சி போன்றவற்றால் லாபம் பெறுவர்.

***நோய்***

வாயு சம்பந்தமான அனைத்து நோய்களும் உஷ்ண சம்பந்தமான வியாதிகளும், நரம்பு சம்பந்தமான வியாதிகளும், நெஞ்சுவலியும் வரும். சில நேரங்களில் மன அமைதியின்மையால் மனநோய் வரலாம்.

***பெயர் அமைக்கும் முறை***

யோகமான எண் - 2, 5, 3
யோகமான திகதிகள் - 2, 11, 20, 29, 5, 14, 23; 3, 12, 21, 30.
யோகமான மோதிரக்கல் - வைடூரியம், முத்து, மூன் ஸ்டோன், டைகர்ஸ் ஐ.
யோகமான நிறம் - வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்.
ஆகாத திகதிகள் - 9, 18, 27, 6, 15, 24.
ஆகாத நிறம் - சிவப்பு மட்டும்.

அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 4 பற்றிப் பார்ப்போம்.

# மகா கான்ஸ்டன்டைன் (கி.பி. 280-337)

அலெக்ஸாண்டிரியாவில் வாழ்ந்த ...ஸ் என்பவர் இயேசு நாதர் ...ளின் திருமகனார் என்பதை ...கும் கொள்கையை வலியுறுத்தி ...தார். இந்தக் கொள்கையை ...க்சாண்டிரியாவின் தலைமை ...ளாகிய அதனேசியஸ் என்பவர் ...து வந்தார். இரு முரண்பட்ட ...துவ இறைமையியல் ...பாடுகளை வலியுறுத்தி வந்த ... இருவரின் ...வாளிகளிடையேயும் கடும் ...துவாதம் நடைபெற்று வந்தது. ...ரு பிரிவினரிடையே பூசலைத் ...துச் சமரசம் ஏற்படுத்துவதற்காக, ...ஸ்டன்டைன் கி.பி.326இல் நைசீயா ...த்தில் அனைத்துக் கிறிஸ்துவத் ...சபைப் பெரு மன்றத்தின் முதல்



# உலகை வியக்க வைத்தவர்கள்

...த்தைக் கூட்டினார். இந்த மன்றக் ...த்தின் நடவடிக்கையில் ...ஸ்டன்டைன் தீவிரப் பங்கு ...ண்டார். இரு ...பினருக்குமிடையிலான பூசலைத் ...து வைத்தார். இரு தரப்பினராலும் ...க்கொள்ளப்பட்டக் கருத்துக்களை ...டையாகக் கொண்டு ...க்கப்பட்ட "நைசீய கோட்பாடு" ...ற சமயக் கோட்பாட்டினை இந்தப் ...ரு மன்றக் கூட்டம் ...க்கொள்ளும்படி செய்தார். இந்தக் ...ட்பாடு எல்லோராலும் ஏற்றுக் ...ள்ளப்பட்ட திருச்சபைக் கோட்பாடு ...யது.

இவர் இயற்றிய குடியியல் ...ங்கள் இவரது இந்தச் சாதனையை ... முக்கியம் வாய்ந்தனவாகும். ...றைச்சிக் கடைக்காரர்கள், ரொட்டி ...ரிப்பவர்கள் போன்றோரின் ...ழில்களைப் பரம்பரைத் ...ழில்களாக்கும் சட்டங்களை இவர் ...ண்டு வந்தார். ஒருவகைக் ...கைக் குடியானவர்கள் தங்கள் ...த்தை விட்டுச் செல்வதைத் தடை ...யும் ஓர் ஆணையையும் இவர் ...பித்தார். இந்த ஆணை, இந்தக் ...யானவர்களை, நிலத்தில் ...ந்தரமாகப் பாடுபடும் ...ணையாட்களாக மாற்றியது.

இச்சட்டமும், இது போன்ற வேறு பல சட்டங்களும் மத்தியகால ஐரோப்பாவின் சமூகக் கட்டமைப்பு முழுவதற்கும் அடித்தளங்கள் அமைக்க உதவின.

கான்ஸ்டன்டைன் மரணப் படுக்கையை அடையும் வரையில் ஞானஸ்நானம் செய்து கொள்ளாமலே இருந்தார். எனினும், அதற்கு நெடுநாட்களுக்கு முன்னரே அவர் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறிவிட்டார் என்பது தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்துவத்தின் ஆன்மீக நோக்கம் அவரை முற்றிலுமாக ஆட்கொள்ளவில்லை என்பதும் தெளிவாகப் புலனாகின்றது. இன்றைய தரநிலைகளை வைத்துப் பார்த்தாலும், அவர் பகைவர்களிடம் மட்டுமன்றி எல்லோரிடமும் ஈவிரக்கமின்றியும் கொடூரமாகவும் நடந்து கொண்டிருக்கிறார். அவர் கி.பி.326இல் தம் மனைவியையும், மூத்த மகனையும் கொன்றுவிடும்படி செய்திருக்கிறார். இதற்கான காரணம் இன்றுவரை தெரியவில்லை.

கான்ஸ்டன்டைன் கிறிஸ்துவத்தைத் தழுவியதால், வரலாற்றின் போக்கு



உண்மையில் மாறிவிடவில்லை என்றும், தவிர்க்க முடியாதிருந்த நிகழ்வுகளைச் செல்லுபடியாக்கியது மட்டுமே நிகழ்ந்தது என்றும் சிலர் வாதிடுவர். கி.பி.284 முதல் 305 வரையிலும் ஆண்ட பேரரசர் டயோக்ளீஷியன், கிறிஸ்துவத்தை அடக்கி ஒடுக்குவதில் மிகத் தீவிரமான முனைப்புக் காட்டினார். கிறிஸ்துவ சமயத்தை ஒடுக்கிவிட அவர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. அவர் மேற்கொண்ட மிகக் கடுமையான நடவடிக்கைகளினால்கூட அழிக்க முடியாத அளவுக்குக் கிறிஸ்துவ சமயம் வலுப்பெற்றிருந்தது. கிறிஸ்துவத்தை அழிப்பதற்கு டயோக்ளீஷியஸ் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் தோல்வியுற்றதைக் கருதும்போது, கான்ஸ்டன்டைன் தோன்றியிராவிட்டாலுங்கூட இறுதியில் கிறிஸ்துவ சமயம் வெற்றியடைந்திருக்கும் என்றுதான் ஊகிக்கத் தோன்றும்.

ஆனால், இந்த ஊகங்கள் அனைத்தும் சுவையானவையேயன்றி முடிவானவை அல்ல. கான்ஸ்டன்டைன் தோன்றாமலிருந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என்று உறுதியாகக் கூற முடியாது. அவர் அளித்த ஊக்கத்தின் காரணமாகக் கிறிஸ்துவம் எண்ணிக்கையிலும், செல்வாக்கிலும் விரைவாகப் பெருக்கமடைந்தது. ஒரு சிறிய சிறுபான்மையினரின் சமயமாக இருந்த கிறிஸ்துவம், ஒரு நூற்றாண்டுக்குள் உலகிலேயே மிகப் பெரியதொரு பேரரசின் முதன்மையான நிலைபெற்ற சமயமாக வளர்ச்சியடைந்தது.

ஐரோப்பிய வரலாற்றில் தலைமை சான்ற பெரியார்களில் ஒருவர் கான்ஸ்டன்டைன் என்பதில் ஐயமேதுமில்லை. மகா அலெக்ஸாந்தர், நெப்போலியன், இட்லர் போன்ற நன்கறிந்த புள்ளிகளுக்கு முன்னதாக இவருக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது என்றால், அதற்கு இவருடைய கொள்கைகளில் நீடித்து நிலை பெற்ற செல்வாக்கே காரணமாகும்.

**அடுத்த வாரம்**
**புனித அகஸ்டைன்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய்.**
**பொய்யைத் தவிர**
**வேறொன்றுமில்லை**
*-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கப்போகு தெண்டினம், புலிகள் அப்புடிச் சொல்லினம்...அரசாங்கம் இப்புடிச் சொல்லுது எண்டினம். இவை ரெண்டு தரப்புக்கு மிடையில யாழ். - கண்டி வீதி விவகாரம் பெரும் பிரச்சி னையாக இருக்கும் எண்டும் சொல்லினம்.

காலம் காலமாக இப்புடி பேச்சுவார்த்தையெண்டும், நிபந்தனைகள் எண்டும் சொல்லித் திரியிறதும், இதுவே கொஞ்சக் காலத்துக்கு பரபரப்பாகப் பேசப்படுகிறதும் பிறகு ஏதோ காரணங்களுக்காகவும், அழுத்தங்களுக் காகவும் இரண்டு தரப்பும் பொய்யான சிரிப்புகளோடை பேச்சு நடத்திறதும், பேச்சு முடிவில 'பேச்சுக்கள் சுமுகமா முடிஞ்சுது. பல விடயங்களும் பேசப்பட்டிருக்கிறது. அடுத்த கட்டப் பேச்சுகளுக்கான இடமும், திகதியும் கூட தீர் மானிக்கப்பட்டிருக்குது எண்டும் சொல்லுவினம்.

பேச்சுவார்த்தைக்குப்போன புலிகள், அப்புடியே இன்னும் ரெண்டு நாட்டுக்கு சுற்றுப்பயணம் போய் தமது நிதி நிலைவரம் தொடர்பாகக் கதைப்பினம். உப்பிடிப் போறவையை புலம் பெயர்ந்து போன கொஞ்சப்பேர் எயர்போர்ட்டில வந்து வரவேற்பினம். அவையளுக்குள்ள கிழிஞ்சல் கிழிஞ்சலாக டெனிம் ஜீன்ஸ் போட்ட ஒரு சிறுமி பூச்செண்டு கொடுக்கும்.

பிறகு நாடு திரும்புவினம். எயர் போர்ட்டில கடும் சோதனை நடத்தப்பட்டதாக செய்திவரும். வன்னிக்குப் போவினம்; அங்க போய் நிண்டுகொண்டு பேச்சுவார்த்தை களில முன்னேற்றம் இல்லை எண்டுவினம். அரச தரப்பு முன்னம் ஒப்புக்கொண்ட விஷயங்களை முதலில நிறை வேற்ற வேணும் எண்டுவினம். உதுகள் நடந்து கொண்டி ருக்கேக்கையே நாலு பேர் சுடப்பட்டிருப்பினம். ரெண்டு குண்டு வெடிப்பு நடந்திருக்கும்.

எங்கேயோ ஒரு பயிற்சி முகாமில கொஞ்சப் பேர் பயிற்சி முடிச்சு வெளியேறும் வைபவம் நடக்கும்; அதில புலிகளின் தளபதி ஒருவர் வீராவேசமாக உரை நிகழ்த் துவார்.

பேச்சுவார்த்தைகளூடாக காலம் காலமாக சிங்கள தேசமும் - சிங்கள அரசுகளும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றன. ஆகவே எங்கள் தாயக மண்ணை மீட்டு தமிழீழத்தை உருவாக்க போர்தான் ஒரே வழி.

இனி நடக்கப் போவது இறுதிப் போராகத்தான் இருக்கும். அந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் ஒவ்வொ ருவரும் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும். தேசியத் தலைவரின் வழிகாட்டலில் தமிழீழத்துக்கான போராட்டமே எமது மண்ணை சிங்கள தேசத்திடமிருந்து விடுவிக்கும் என்று உணர்ச்சி பொங்கி வழிய வழிய உரையாற்றுவார்.

இதற்கு நேர் எதிராக அன்றைய இரவு சு.ப.பேட்டி கொடுப்பார். புலிகள் போர் விருப்பம் கொண்டவர்கள் அல்ல... சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்தோடு பேச்சுக் களை நடத்த புலிகள் விருப்பம் கொண்டுள்ளனர். எங்கள் மக்கள் பெரும் துன்பப்படுகிறார்கள். அபிவிருத்திக்காக ஏங்குகிறார்கள். எங்கள் மக்களுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும். அத்தகையதொடு வேலைத்திட்டத்தில் புலிகளின் ஆலோசனையும், ஒத்தாசையும் கட்டாயமாக வழங்கப்படும் என்று முழங்குவார். உவர் உப்பிடிச் சொல் லிற நேரத்திலையே, புலிகளுக்கு எதிரான மாற்றுக்கருத் துக் கொண்ட ஒரு தமிழ் இளைஞர் அவனது வீட்டிற்குச் சென்ற புலிகளால் வெளியில் அழைத்து வரப்பட்டு, மனைவி, பிள்ளைகளுக்கு முன்னாலேயே சுட்டுக் கொலை செய்யப்படுவார்.

இந்தக் குற்றச்சாட்டுப் பற்றித் தெரிந்து கொள்ள சர்வதேச ஊடகங்கள், எவ்வளவோ முயன்றும் புலிகளின் தொடர்பு கிடைக்கவில்லை என்று சொல்லும். இதே சம்ப வம் அடுத்த நாள் காலையில், இனந்தெரியாத நபர்களால் ஒருவர் சுடப்பட்டார் என்று செய்தியாகவரும். கண்காணிப் பாளர்கள், தமக்கு அது தொடர்பில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என்பார்கள். பிறகு இராணுவ வாகனத் தொடரணி கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளாகும். அந் தத் தாக்குதலை மக்கள்தான் செய்தார்கள் என்று புலிகள் அவசர அறிவிப்பை வெளியிடுவார்கள். படையினர் பதில் தாக்குதல் ஒன்றை நடத்துவார்கள். உடனே புலிகள் இது ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் ஒரு செயல் என்று கூறுவார்கள்.

அப்போது கண்காணிப்புக் குழு அந்தத் தாக்குதல் தொடர்பாக இரு தரப்பிடமிருந்தும் முறைப்பாடு கிடைத் துள்ளது. ஆனால் தமது பிரதிநிதிகள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குப் போக முடியாதுள்ளது என்று கூறும்.

இவ்வாறானதொரு நெருக்கடி உருவாகும் போது சமாதான மத்தியஸ்தர் வருவார். வந்ததும் முதலாவதாக வன்னிக்குப் போவார். தமிழ்ச்செல்வன் இடக் கையில் ஊண்டு தடியைப் பிடிச்சுக் கொண்டு வலக் கையை நீட்டி கைலாகு குடுத்து புன்னகைத்து வரவேற்று பேச்சு நடத்துவார்.

பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் மத்தியஸ்தர், இரண்டாம் கட்டப் பேச்சுக்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. புலிகளின் குழு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளும். புலிகளிடமிருந்து கிடைத்த செய்திகளை நான் இலங்கை அரசுக்கு எடுத்துச் செல்கிறேன் என்று கூறுவார். அதே செய்தியாளர்களிடம் தமிழ்ச்செல்வன் அரசிடமிருந்து எந்தவொரு ஆக்கபூர்வமான செய்தியையும் மத்தியஸ்தர் கொண்டு வரவில்லை. நாம் எமது நிலைப் பாட்டை எடுத்து விளக்கியுள்ளோம். எமது மக்கள் மீது படையினர் கண்மூடித்தனமாகத் தாக்குகிறார்கள். இது ஒரு இன அழிப்பு என்பதையும், இது தொடர்ந்தால் புலிகள் தமது பொறுமையை இழந்து செயற்படுவர் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளோம் என்பார்.

கொழும்பு திரும்பும் மத்தியஸ்தர் அரச தரப்பைச் சந்தித்துப் பேசுவார். விரும்பினால் எதிர்க்கட்சியின் தலை வரையும் கூப்பிட்டுப் பேசுவார். அப்படியே அவர் இந்தியா வுக்குப் போவார். இந்தியாவுக்கு நிலைமைகளைக் தெளிவுபடுத்துவதே தமது நோக்கம் என்று மத்தியஸ்தர் கூறிச் செல்வார்.

மத்தியஸ்தர் வந்து திரும்பிய பிறகு இந்திய தகவல் துறைப் பேச்சாளர் ஒரு செய்தியாளர் மாநாட்டை நடத்துவார். அதில் இலங்கையின் தற்போதைய சமாதான நகர்வுகள் குறித்து நோர்வேயும் இலங்கையும் எங்க ளுக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளன. இந்தியா தொடர் ந்து கவனம் செலுத்தி வருகிறது. இலங்கைப் பிரச்சி னைக்கு எட்டப்படும் தீர்வு ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் களுக்குக் கூடி அதிகாரமுடையதாக இருக்க வேண்டும். இதுவே இந்தியாவின் விருப்பம். இது தவிர, புலிகள் தமது பயங்கரவாத செயற்பாடுகளை முற்றாகக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ள வேண்டும். இதுவே இந்தியாவின் நிலைப்பாடு என்று கூறுவார்.

இந்த அறிக்கையோடு இலங்கை அகதிகள் 40 பேர் படகு மூலம் நேற்று இரவு தமிழகத்துக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்களோடு வந்த இன்னொரு படகு நடுக்கடலில் மூழ்கியது. அதில் பயணம் செய்த 18 பேர் பலியாகியுள்ளனர். அதில் 4 சிறுவர்கள் அடங்குவர் என்றொரு செய்தியும் சொல்லப்படும்.

உப்பிடித்தானுங்கோ ஒவ்வொரு சமரசப் பேச்சும் போய்க் கொண்டிருக்குது.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(05.10.2006 தொடங்கி 11.10.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், கேது, செவ்வாய், வெள்ளி. துலாம் - வியாழன், செவ்வாய். மீனம் - இராகு. கர்க்கடகம் - சனி. சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, பண வரவு, காரியானுகூலம், இனசன ...கிழ்ச்சி, உறவினர் உதவி, பெரியோர் சகாயம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, ...வி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, ...சாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, மனமகிழ்ச்சி, குடும்பப் பாரம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, கடன்படல், வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், மனக்குறையதிகம், குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் சிக்கல், கடன் தொல்லை, பெரியோர் உதவி, தூர இடப் பயணம், எதிர்பாரா செலவு, குடும்பப் பகை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் பகை, மனக்கலக்கம், பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகாயம், பயணக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகப் பேறு, மனக்குறை நீங்கும், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், வெளியார் தொல்லை, பணக் கஷ்டம், பிரயாண மிகுதி, குடும்ப நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மனப் பயம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் அலைச்சல், உயர்ந்தோர் நட்பு, தூர இடப் பயணம், மனக்குறையதிகம், இனசன நன்மை, பணவிரயம், குடும்ப மேன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் நன்மை, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, மனமகிழ்ச்சி, அந்நியர் உதவி, உறவினர் உபத்திரவம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 07.

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பயம், வீண் செலவு, மனக்குறையதிகம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், பிரயாணக் கஷ்டம், தேகசுக நன்மை, குடும்பப் பாரம், உத்தியோகப் பயன், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 05.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் இலாபம், பெரியோர் சகவாசம், மனக்குறையதிகம், தூர இடப் பயணம், குடும்பச் சிக்கல், செலவு மிகுதி, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் நன்மை, பணவரவு தடை, உயர்ந்தோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும், குடும்ப மேன்மை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் அலைச்சல், காரிய நஷ்டம், பணமுடங்கல், மனக்குறை நீங்கும், குடும்பக் கவலை, பிள்ளைகள் உதவி, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**11 . 10 . 2006**



**செல்வன் மு. கேஷிகன்**

முருகன் - வளர்மதி
தம்பதியினரின் செல்வப் புதல்வன்
கேஷிகன் தனது முதலாவது பிறந்த
நாளை 11.10.2006 அன்று
கண்டியிலுள்ள தனது அம்மப்பாவின்
இல்லத்தில்
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகிறார். இவரை அன்பு
அப்பா, அம்மா, அம்மம்மா,
அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா,
தாத்தாமார், பாட்டிமார், பூட்டி,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
சித்தா, சித்தி, மாமாமார், மாமிமார்,
அண்ணாமார், அக்காமார், மச்சான்
முதிஷன், மச்சாள் வஷ்னி, மற்றும்
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் காட்டு மாரியம்மன்
அருள்பெற்று பல்கலையும் கற்று
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்.


# கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளை உருவாக்கும்

வளமான வாழ்விற்கு

**அபிவிருத்தி லொத்தர்**



சனிக்கிழமை

அபிவிருத்தி லொத்தர்
உங்களை வெற்றியாளராக்கும் தனயோகம்

ஜயோதா
உங்களுக்குரிய வெற்றி

tradlanka




## முத்தம்

மனித நேயம் இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் இந்தக் கொடூரமான யுகத்தில் இனி மிருகங்கள்தான் நம்பிக்கைக்குரிய நண்பர்கள் என்பதை சூசகமாக இக்குழந்தைகள் உணர்த்துகிறார்களோ! பெல்லி வீல்லி நகரில் "பக்" இன நாய் வளர்ப்பவர்கள் ஒன்று கூடினர். அப்போது தாங்கள் வளர்க்கும் 'பக்' நாய்க்கு முத்தம் இடும் சிறுவர்கள்.

## சாகசம்

"கீரணம் தப்பினால் மரணம்" என்பதுதான் இலக்கணமோ தெரியாது. அஸாமில் ஒக்டோபர் 1இல் நடைபெற்ற "ரைசீங்டோ" கொண்டாட்டத்திக்காக பயிற்சி செய்யும் பொலிஸா. இவர்கள் இவ்வாறான விளையாட்டுக்களும் முயற்சிகளும், மக்களை மகிழ்விக்கமட்டுமில்ல, தனிநபர்களுக்கிடையில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் தானாம்





## பாய்ச்சல்

அழுக்கும் அருவருப்புமான பன்றிகளைக் கண்டாலேல தூரத்தில் ஓடிவிடுவோம். இங்கே உட்கார்ந்திருந்து பார்க்கிறார்களே! மெல்போர்னில் குழந்தைகளுக்கான விலங்குகளின் 'ஷோ' வில் குழந்தைகளை மகிழ்விக்கப் பன்றிக் குட்டியொன்று டைவடித்து நீரில் குதிக்கிறது.


தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

**கொவிசெத லொத்தரின் அடுத்த**
**கோடீஸ்வரரா நீங்களா ?**

# கோடீஸ்வரராகுங்கள், மென்மேலும் கொவிசெத டிக்கெட்டுகளை வாங்குங்கள்!



# கொவிசெத

இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம www.nlb.lk